விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 11 செவ்வாய்க்கிழமை (28.10.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 313

## பொது வேட்பாளர் குறித்து எதிர்க்கட்சிகள் ஆராய்வு

### அரசை வீழ்த்துவதே நோக்கமாம்

(கொழும்பு)

பொது வேட்பாளரை நிறுத்தி தற்போதைய அரசாங்கத்தை வீழ்த்துவதே எதிர்க்கட்சிகளின் முக்கிய யுக்தியாக இருக்க வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

நாட்டில் அடுத்த ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடத்தப்படலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்க்கட்சிகளும் அந்தத் தேர்தலுக்கான தமது ஏற்பாடுகள் குறித்து ஆராய்ந்து வருகின்றன.

20 ஆம் பக்கம் பார்க்க

காணிப் பிரச்சினை தொடர்பில்

## மாகாணசபையின் கடிதத்துக்கு ஜனாதிபதி செயலகம் பதில்!

(கொழும்பு)

வடமாகாண சபையால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் தொடர்பில் தாம் பரிசீலிக்கவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் மாகாணசபைக்கு எழுத்துமூலம் கடிதம் அனுப்பியுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த 9ஆம் திகதி வடமாகாணத்தில் உள்ள தமிழ் மக்களுடைய காணிகள் தொடர்பிலான சிக்கல்களை ஆராய்வதற்கான விசேட அவை நடைபெற்றிருந்தது.

இதன்போது வடமாகாணத்தில் அபகரிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுடைய நிலங்கள் இவ்வருட இறுதிக்குள் விடுவிக்கப்பட வேண்டும்.

மேலும் அரசியலமைப்பில் காணிகள் தொடர்பிலான ஏற்பாடுகளை உள்ளவாறே அமுல்படுத்த வேண்டும் என்ற இரு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

இவை பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்கும்

20 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதியுடன் கமலேஷ் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பொதுநலவாய அமைப்பின்

20 ஆம் பக்கம் பார்க்க

## பிரிட்டோவின் வீடு மீது தாக்குதல்

(கொழும்பு)

காணாமல் போனவர்களின் உறவுகள் அமைப்பின் தலைவர் பிரிட்டோ பெர்னாண்டோவின் வீடு மீது நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் அவரது வீடு பலத்த கல்வீச்சுத் தாக்குதலுக்கு உள்ளானதுடன், வீட்டின் ஜன்னல்களும் சேதமடைந்திருப்பதாக தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள பிரிட்டோ பெர்னாண்டோ, நான் 1988-ம் ஆண்டு தொடக்கம் காணாமல் போனவர்களுக்காக குரல் கொடுத்து வருகிறேன்.

ஐ.தே.க. ஆட்சிக் காலத்தின்

20 ஆம் பக்கம் பார்க்க

### தென்னிலங்கை உற்பத்தியாளர்களுக்கு

## சந்தை வாய்ப்பினை ஏற்படுத்த சுகாதாரப் பணிமனை சூழ்ச்சி!

### யாழ். குளிர்பான உற்பத்தியாளர்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையில் உள்ள மிகப்பெரிய கம்பனிகளுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவே யாழ் பிராந்திய சுகாதார சேவைகள்பணிமனையாழில் குளிர்பான உற்பத்திகளை நிறுத்தியுள்ளது என யாழ் உப உணவு குளிர்பான உற்பத்தியாளர் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தடை செய்யப்பட்டுள்ள குளிர்பான உற்பத்தியாளர்கள் தமக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் ஆய்வுசெய்து வடமாகாண சுகாதார அமைச்சின் கவனத்திற்கு கொண்டு செல்லவுள்ளனர்.

தமக்கு விதிக்கப்பட்ட தடையினை எதிர்த்து போராடுவதற்கு யாழ் உப உணவு குளிர்பான உற்பத்தியாளர்கள் சங்கம் ஒன்றினையும் உருவாக்கியுள்ளனர்.

யாழ் வணிகர் கழகத்தில் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் குளிர்பான உற்பத்தியாளர்களின் கலந்துரையாடல்களின் போதே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் குறித்த சங்கத்தின் முதலாவது தலைவர் எம்.உதயசிறி தெரிவிக்கையில், யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை எமக்கு விதித்துள்ள தடையானது தென்னிலங்கையிலுள்ள மிகப்பெரிய கம்பனிகளுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்

20 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர்கள் உண்ணா விரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் உள்ள இந்திய மீனவர்கள் தமது விடுதலையை வலியுறுத்தி நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் எல்லை தாண்டிய குற்றச்சாட்டின் பெயரில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 24 இந்திய மீனவர்களுமே நேற்று அதிகாலை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழையும் குற்றச் சாட்டில் இந்திய மீனவர்கள் பலர் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது(எ-11)

## சீனாவுடனான உறவு இந்தியாவை பாதிக்காது

### இலங்கை அறிவிப்பு

(கொழும்பு)

சீனாவுடன் பேணி வரும் பாதுகாப்பு உறவுகள் இந்தியாவை பாதிக்காது என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கை வேறு நாடொன்றுடன் பாதுகாப்பு தொடர்பிலான உடன்படிக்கைகளை கைச்சாத்திடும் போது இந்தியாவின் தேசியப் பாதுகாப்பை பாதிக்கும் வகையிலான விடயங்களை உள்ளடக்காது என கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜயந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

எங்களுக்கு இந்தியாவுடன் சிறந்த உறவு காணப்படுகின்றது, நாம் எந்த சந்தர்ப்பத்திலும் இந்தியாவின் பாதுகாப்பிற்கு பிரச்சினை ஏற்படுத்த மாட்டோம்.

இந்தியாவின் பாதுகாப்பு எமக்கும பாதுகாப்பாகும்.சீனா மட்டுமன்றி ரஷ்யா அல்லது வேறும் நாடுகளுடனும் எங்களுக்கு தொடர்பு உண்டு.

20 ஆம் பக்கம் பார்க்க

## வெட்டுப்புள்ளி குறையும்?

(கொழும்பு)

இம்முறை நடைபெற்று, பெறுபேறும் வெட்டுப்புள்ளியும் வெளியாகியிருந்த ஐந்தாம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சையின் வெட்டுப்புள்ளி குறைக்கப்படும் சாத்தியக்கூறுகள் இருப்பதாக கல்வியமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக வெளியிடப்பட்ட வெட்டுப்புள்ளி 163 ஆகும். அந்த வெட்டுப்புள்ளி 157 வரை குறைவடைவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

20 ஆம் பக்கம் பார்க்க

## ஹெல உறுமய முரண்பாட்டினை சமரசம் செய்யும் கோத்தபாய

(கொழும்பு)



ஜாதிக ஹெல உறுமய கட்சிக்கும ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையிலான முரண்பாடுகளை தீர்க்க பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் அமைச்சர டலஸ் அழகப்பெரும ஆகியோர் முயற்சித்து வருகின்றனர்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ரத்து செய்தல் உள்ளிட்ட ஏழு அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு ஜனாதிபதி மகிந்தவிடம், ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் அத்துரலிய ரதன தேரர் கோரியிருந்தார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக உரிய பதிலளிக்கப்படாவிட்டால், அரசாங்கத்தை விட்டு வெளியேறி, ஜனாதிபதிக்கு எதிராக

19 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# விசாரணைக்காலத்தை நீடிக்க ஐ.நா சபையிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் இலங்கை யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் நடத்தப்பட்டு வரும் விசாரணைக்கான கால அவகாசம் நீடிக்கப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் கோரிக்கை விடுத்துள்ளன.

விசாரணைகள் நடத்தி முடிப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட காலம் போதுமானதல்ல என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் விசாரணைக் குழுவிற்கு ஆலோசனை வழங்கி வரும் மூன்று நிபுணர்களிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

மார்டி அத்திசாரி, சில்வியா கட்ரைட் மற்றும் ஆஸ்மா ஜஹான்கீர் ஆகியோரிடம் இவ்வாறு கோரியுள்ளார். யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பிலான சாட்சியாளர்களை இராணுவத்தினர் ஒடுக்கி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

எனவே நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் சாட்சியங்களை திரட்டுவது நடைமுறைச் சாத்தியமற்றது என அவர் குறிப்பிட்டுள்ளார். பத்து மாத காலப்பகுதியில் இந்த விசாரணைகள் பூர்த்தியாகும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அறிவித்துள்ளது.

இதன்படி ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 28-ம் அமர்வுகளில் அதாவது 2015-ம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கை குறித்த விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட உள்ளது.

யுத்தத்தில் பாதிக்கபட்டவர்கள் சாட்சியமளிக்க கூடும் என்ற காரணத்தினால் இலங்கை அரசாங்கம் வெளிநாட்டுக் கடவுச் சீட்டு உடையவர்கள் வடக்கில் பயணம் செய்வது குறித்த கெடுபிடிகளை அறிமுகம் செய்துள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். (எ-4)


## தேவை

பழமரவிதைகள் கொய்யா, மாதுளை, நெல்லி, தோடை, பெரு மர விதைகள் மகோகனி, சமண்டலை போன்றவை தேவைப்படுகின்றது.

**தொடர்பு இல:-0772242401**

## வீடு வாடகைக்கு

யாழ்.மாநகர எல்லைக்கு வெளியே கொக்குவில், திருநெல்வேலி, கல்வியங்காடு பகுதியில் பெரிய வீடொன்று தேவையுள்ளது.

**தொடர்பு இல:-0772242401**

## தேவை

குறும்படத் தயாரிப்பில் படப்பிடிப்பு படத் தொகுப்பு ஒலித் தொகுப்பு செய்யக் கூடியோர் தேவை

**தொடர்பு இல:-0772242401**

## நல்லை மங்கையர்க்கரசியின் மனம் நெகிழ்ந்தஞ்சலி



எமது வித்தியாசாலை ஆரம்பப் பிரிவு பொறுப்பாசிரியை
திருமதி ராஜகுமாரி வேணுகாந்தன் அவர்களின்
அன்புச் சகோதரர்
**செல்லத்துரை டிஸ்கந்தராசா**
அவர்களின் பிரிவுத்துயரில் நாங்களும் இணைந்து
கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்.

(அ-8893)

## 5-ம் ஆண்டின் ஆறாத நினைவலைகள்

அமரர் **காசிப்பிள்ளை செல்லத்துரை**

மலர்வு 03 - 02 - 1939



உதிர்வு 23 - 10 - 2009

ஞாலத்தில் எங்கள் நல்வாழ்விற்கு வழிகாட்டிய தந்தையே
காலங்கள் கடந்தாலும் எம் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவுகளை எம் மனதில் சுமந்திருப்போம்
"ஆண்டவனடியில் சாந்தியுடன் வாழ்வீர்களாக!"

(8164)

டச்சு வீதி,
உடுவில், சுன்னாகம்.

பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


# வலிகாமம் தெற்கு பிரதேச சபை
# වලිකාමම් දකුණ ප්‍රාදේශීය සභාව
# VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA CHUNNAKAM

My No :Np/14/41(15)/01/Tender/2015 — Date: 27.10.2014.

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுன்னாகம் 2015-ம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், மீன் வெட்டுமிடம் என்பவற்றை 01. 01.2015 தொடக்கம் 31.12.2015ம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற் வரி தவிர) | மாத வாடகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை (மீன் வெட்டு மிடம், மீன் சந்தை வாகன தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 9020000.00 | |
| 2 | உடுவில் கீளிச் சந்தை | 1000.00 | 10000.00 | 199500.00 | |
| 3 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை-01 | 1000.00 | 10000.00 | 1800700.00 | |
| 4 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை-02 | 750.00 | 7500.00 | 245000.00 | |
| 5 | கருவாட்டுக் கடை இல-03 | 750.00 | 7500.00 | 43670.00 | 250.00 |
| 6 | முட்டைக் கடை இல.04 | 750.00 | 7500.00 | 60500.00 | 250.00 |
| 7 | கோழிக்கடை இல.06 | 750.00 | 7500.00 | 253000.00 | 250.00 |
| 8 | கோழிக்கடை இல.07 | 750.00 | 7500.00 | 242000.00 | 250.00 |
| 9 | கோழி உரித்தல் | 750.00 | 7500.00 | 63800.00 | 250.00 |
| 10 | பொது மலசலகூடம் | 750.00 | 7500.00 | 40700.00 | 250.00 |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை (வாகன தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 16117860.00 | |
| 2 | இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை (கொத்தியாலடி கொல்களத்தில் ஆடுகள் வெட்டப்படுதல் வேண்டும்) | 500.00 | 5000.00 | 81950.00 | 250.00 |
| 3 | இணுவில் சந்தை | 500.00 | 1000.00 | 15500.00 | |
| 4 | மல்வம் சந்தை | 500.00 | 1000.00 | 19250.00 | |
| 5 | மல்வம் மாட்டிறைச்சிக் கடை (கொத்தியாலடி கொல்களத்தில் மாடுகள் வெட்டப்படுதல் வேண்டும்) | 1000.00 | 10000.00 | 184800.00 | |
| 6 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம் | 500.00 | 5000.00 | 50000.00 | |
| | ஏழாலை உப அலுவலகம் | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 5000.00 | 169400.00 | |

1.கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 28.10.2014 – 10.11.2014 பி.ப 2.00 மணி வரை
2.கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளுதல் - 11.11.2014 நண்பகல் 12.00 மணி வரை
3.கேள்விப் பத்திரம் திறக்கப்படுதல் - 11.11.2014 பி.ப 2.00 மணிக்கு
4.கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை "தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் , யாழ்ப்பாணம்" என முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.
5.கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
6.உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுநராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்பட மாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
7.கேள்விப் படிவக் கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு 12% பெறுமதி சேர் வரியும் 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும் காலத்திற்கு காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்பட வேண்டும்.
8.தெரிவு செய்யப்படும் மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளுக்கான சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பங்குத் தொகையை 2014.12.05ம் திகதிக்கு முன்னர் செலுத்துவதுடன் மிகுதி 2/3 பங்கு தொகைக்கு வங்கியில் தங்கள் பெயரில் வைப்புச் செய்தமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்து ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். ஏனைய சந்தைகள், இறைச்சி, கருவாட்டுக் கடைகளுக்குரிய சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/2 பங்குத் தொகையை 2014.12.05ம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
9.சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% இற்கு மேல் வரி அறவிடக் கூடாது.
10.இறைச்சிக்காக கன்று ஈனக் கூடிய பசுக்களையோ, மறியாடுகளையோ அறுப்பது தடை செய்யப்படும். எனினும் கன்று ஈன முடியாத பிரயோசனமற்றது என மிருக வைத்தியர் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் மாடு, ஆடுகளை அறுப்பதற்கு அனுமதி வழங்க முடியும்.
11.பொது மலசல கூடத்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேல் வரி அறவிடக் கூடாது.
12.கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
13.ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடைக்கு கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிப்பவர் குறிப்பிட்ட இடத்தில் காணி உரிமையாளர்களின் சம்மதக் கடிதம் இணைக்கப்படுதல் வேண்டும்.
14.கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
15.கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
16.கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தி.பிரகாஷ், தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

(சி-8898)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஐ நடைமுறைப்படுத்தினால் சுயநிர்ணயம் தலை தூக்காது

## சஜித் தெரிவிப்பு


(கொழும்பு)

***13 ஆவது திருத்தச்சட்டத்தின் அனைத்து விடயங்களும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டால் சுயநிர்ணயக் கோரிக்கை தலைதூக்காது எனத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவரும் அம்பாந்தோட்டை பாராளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாஸ புலம்பெயர் தமிழர்கள், புலம்பெயர் விடுதலைப்புலிகள் இரண்டு தரப்பினர்களையும் வேறுபடுத்தி அறிந்துகொள்வது அவசியம் எனவும் வலியுறுத்தினார்.***

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிபர் முன்னணிகளின் 44 ஆவது வருடாந்த மாநாடு நேற்று முன்தினம் ஹெக்டர் கொப்பேக்கடுவ கமநல ஆராய்ச்சி நிலைய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இங்கு கௌரவ அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையி லேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் இன்று பயங்கரவாதம் ஒழிக்கப்பட்ட இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். உண்மையிலேயே அது மகிழ்ச்சியான விடயமொன்றாகும்.



ஆனால் யுத்தம் நிறைவடைந்து ஐந்து வருடங்கள் கடந்த நிலையிலும் புலிகளின் யுத்தம் இருந்த கால த்தை விடவும் நெருக்கடியான நிலைமை யொன்று இருக்கின்றது.

யுத்தத்தில் வெற்றி பெற்ற எம்மால் சமாதானத்தை உருவாக்குவதில் வெற்றியடைய முடியவில்லை என்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். இன, மத, குல பேதமின்றி ஒன்றுபட்டவர்களாக அனைவரையும் இணைத்துச் செல்வதில் ஆட்சியாளர்கள் பின்னடைவு கண்டிருக்கின்றார்கள்.

இன்று கூட அதற்கான காலம் சென்று விடவில்லை. இந்த நாட்டின் ஆட்சியாளர்கள், எதிர்த்தரப்பினர், உட்பட அனைவரும் அரசியல் பேதங்களை மறந்து அதற்காக ஒன்றுபட்டுச் செயற்படவேண்டியிருக்கின்றது: அதன் மூலமே சமாதானமான இலங்கையை கட்டியெழுப்ப முடியும்.

இன்று எமது நாட்டை சீரழிப்பதற்கு புலம்பெயர்ந்தவர்கள் நடவடிக்கை எடுத்து வருவதாக கூறிவருகின்றனர். அவ்வாறு கூறுபவர்களுக்கு பொது அறிவொன்று இருக்க வேண்டும். அதாவது புலம்பெயர்ந்த தமிழர்கள், புலம்பெயர்ந்த விடுதலைப்புலிகள் என இருதரப்பினர்கள் காணப்படுகின்றார்கள். இவர்களை பிரித்தறிந்து கொள்ள வேண்டும்.

அதேபோன்று புலம்பெயர்ந்த தமிழர்கள் அனைவரும் பிரிவினையை கோரவில்லை. இதனை உணர்ந்து கொள்ள வேண்டும். அவ்வாறில்லாது விட்டால் எமது நாட்டில் சமாதானத்தை உருவாக்குவதென்பது கடினமானதாகும்.

யார் விரும்பினார்களோ இல்லையோ வடக்கு மக்கள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். வடக்கு கிழக்கு மக்களின் விருப்பு வெறுப்புகளுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும். அதுதான் ஜனநாயகம். இன்று சுயநிர்ணயம் என்ற விடயம் ஏன் தலைதூக்குகின்றது.

ஐக்கிய இலங்கைக்குள் 13 ஆவது திருத்தச்சட்டத்தில் கூறப்பட்ட அனைத்து விடயங்களும் தலையீடுகளின்றி இன்று முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டால் சுயநிர்ணயக் கோரிக்கை ஒரு போதும் தலைதூக்காது.

கறுப்பு ஜூலையாலையோ கறுப்பு ஜூனாலோ ஒருபோதும் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெறுக்கொள்ள முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)


## விசேட சலுகை

**வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி எமது வாடிக்கையாளர்கள் 01.11.2014 முதல் 31.12.2014 வரை மாபெரும் விசேட விலைக் கழிவுடன் தங்களது விளம்பரங்களை எமது பத்திரிகையில் பிரசுரிக்க முடியும் என்பதனை அறியத் தருகின்றோம்.**

**முழுப்பக்கம், அரைப்பக்கங்களிற்கு மாத்திரமே இவ் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.**

**மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...**

**தொடர்புகளுக்கு:- 021 2217 603**
**021 5671 532**
**Valampuriijaffna@gmail.com**


# 9லட்சம் பேர் வாக்களிக்கும் தகுதியினை இழந்துள்ளனர்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுமார் 9 இலட்சம் பேர் வாக்களிக்கும் தகுதியை இழப்பார்கள் என தெரியவருகிறது.

இலங்கை மக்களின் வாக்காளர் பதிவுகளுக்கு அமைய தேசிய அடையாள அட்டையோ வேறு அடையாள பத்திரங்களோ இல்லாததே இந்த தகுதியிழப்புக்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும் தேர்தலுக்கு முன்னர் அடையாள அட்டைகள் இல்லாத வாக்காளர்களுக்கு அடையாள அட்டை அல்லது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

9 இலட்சம் பேரில் சுமார் 25 வீதமானவர்களுக்கேனும் அடையாள அட்டைகளை பெற்றுக்கொடுக்க எண்ணியுள்ளதாக இலங்கை மனித உரிமை கேந்திர நிலையம் தெரிவித்துள்ளது. (இ-3-5)

## இராசி பலன்

28.10.2014
(ஐப்பசி 11, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை- 5.57 மணிக்கு
பஞ்சமி பின்னிரவு 12.35 மணிவரை
மூலம் பின்னிரவு 4.47 மணிவரை
இராகுகாலம்-3.03-4.33 மணிவரை
சுபநேரம்-10.33-12.03 மணிவரை
ஸ்கந்த பஞ்சமி அமிர்த சித்தம்

வளவன்

**மேடம்:** மனக்குறை அகன்று மனதில் மகிழ்ச்சி கூடும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், கரைந்த சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்:** சுற்றத்தாரை அனுசரித்துச் செல்வது நல்லது, வெளியூர் பயணங்களால் அலைச்சல், சோர்வு ஏற்படலாம், தேக நலனில் கவனம் தேவை, திடீர்ச் செலவுகள் ஏற்படலாம்.

**மிதுனம்:** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், கௌரவமான நாள்.

**கடகம்:** பகை விலகி பாசம் கூடும் நாள், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், பயணத்தால் பலன் கிடைக்கும், செய் தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய நபர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**கன்னி:** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், தூரத்துச் சொந்தங்களால் நன்மையுண்டு, இல்லத்தில் சுகங்களும், சந்தோசங்களும் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** இளைய சகோதரத்தின் வழியில் உதவிகள் கிடைக்கலாம், பாராட்டும், புகழும் கூடும் நாள், பழைய பாக்கிகள் திடீரென வசூலாகலாம், கட்டடப் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தாரின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், வார்த்தைகளால் பிறரைக் கவர்வீர்கள், சுப [illegible] வந்து சேரலாம்.

**தனுசு:** சிக்கனத்தை கடைப்பிடிக்க முற்படுவீர்கள், சோம்பலை விலக்குவது நல்லது சொன்ன சொல்லைக் காப்பாற்ற துடிப்போடு செயற்படுவீர்கள், திடீர் பயணத்தால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்

**மகரம்:** குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, வழிபாடு காரிய வெற்றி தரும், சுப விரயங்கள் கூடும் நாள்.

**கும்பம்:** குடும்ப மகிழ்ச்சி கூடும் வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், சமயோசிதப் புத்தியால் பலரையும் கவர்வீர்கள், வருமானம் உயர்வடையும் நாள் பயணங்களால் பலனுண்டு.

**மீனம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மற்றவர்களின் மத்தியில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் அகலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கல்வி பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)


தேசிய கல்வி நிறுவகத்தால் நடத்தப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்காக 2015- 2016 கல்வியாண்டில் தமிழ் மொழி மூல மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.




52 வயதிற்குட்பட்ட கல்விசார் பணியை மேற்கொள்ளும் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசார் அலுவலர்கள் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கத் தகைமையுடைய வராவர்.

இக்கற்கை நெறியானது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய வடபுல பிரதேசங்கள் உள்ளிட்ட பத்து இடங்களில் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை உரிய படிவங்களில் நிரப்பி எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)




# யாழ்.பருத்தித்துறை-கோண்டாவில் இ.போ.ச.சாலையிடையே முரண்பாடு

(கரணவாய்)

இலங்கைப் போக்குவரத்து, பருத்தித்துறை பேருந்து சாலையினூடாக வெளி மாவட்டங்களுக்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்ற பேருந்து சேவைகளை யாழ். கோண்டாவில் பேருந்துசாலை ஊடாக சேவையில் ஈடுபடும் பேருந்துகள் குழப்பும் வகையில் சேவையாற்றி வருவதாக பருத்தித்துறை பேருந்துசாலை பணியாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை பேருந்துசாலையில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு தினமும் சேவையில் பேருந்துகள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

இதற்கமைய பருத்தித்துறை பேருந்துசாலையில் இருந்து மாலை 6.30 மணிக்கு அக்கரைப்பற்றுக்கும் 7 மணிக்கு கொழும்புக்கும் பேருந்துகள் சேவையில் ஈடுபட்டு வந்தன.

இதேவேளை குறித்த சேவையில் ஈடுபடும் பேருந்துகள் நெல்லியடி பிரதான பேருந்து நிலைத்திற்கு சென்று பயணிகளை ஏற்றிக் கொண்டு செல்வது வழமையான சேவையாக காணப்பட்டது. ஆனால் கடந்த சில நாட்களாக யாழ். பேருந்து சாலையில் இருந்து வெளிமாட்டங்களுக்குச் செல்லும் பேருந்துகள் நெல்லியடிக்கு 15 நிமிடங்கள் முந்தி சேவையில் ஈடுபடுவதால் பருத்தித்துறையில் இருந்து நெல்லியடி சென்று வெளிமாவட்டங்களுக்கு செல்லும் வழமையான பேருந்துக்கு பயணிகள் வருகை முற்றாக குறைவ டைந்துள்ளது.

இதனால் இரு பேருந்துசாலைக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பருத்தித்துறை பேருந்துசாலையின் வருமானத்தில் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஒரே மாதிரியான நேர அட்டவணையில் சேவையில் ஈடுபடும் பேருந்துகளினால் இவ்வாறான குழப்பங்கள் ஏற்படுகின்றன.

இதில் யாழ்.பேருந்துசாலை யில் இருந்து செல்லும் பேருந்துகள் 15 நிமிடங்கள் முந்திச்சென்று நெல்லிடியில் உள்ள பயணிகளை ஏற்றிக்கொண்டு செல்கின்றது.

இவ்வாறான செயற்பாட்டால் இரு பேருந்துசாலைகளினதும் பேருந்துகள் போட்டிபோட்டு சேவையில் ஈடுபடும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக பருத்தித்துறை பேருந்துசாலை முகாமையாளர் கூறுகையில்,

இது முற்றிலும் ஒரு குழப்பமான செயற்பாடாக அமைகிறது. அத்துடன் பருத்தித்துறை பேருந்து சாலை வருமானத்தை வீழ்த்தும் வகையில் இச்சேவைகள் இடம்பெறுகின்றன.

இது தொடர்பாக யாழ். கோண்டாவில் பேருந்துசாலை முகாமையாளருக்கு தெரிவிக்கப்பட்டும் இது தொடர்பாக இதுவரைக்கும் எந்தவொரு அறிவித்தலும் கிடைக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

எனவே இவ்வாறான குழப்பமான செயற்பாடுகள் தடுத்து நிறுத்தப்படல் வேண்டும் என பருத்தித்துறை பேருந்துசாலை பணியாளர்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தனியார் பேருந்து சேவையில் பயணிகளுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியம் இ.போ.ச. பேருந்து சேவையில் ஈடுபடும் பேருந்துகளில் பயணிப்போருக்கும் ஏற்பட்டுள்ளது.

பயணிகளின் நன்மை கருதி பேருந்து சேவையில் ஈடுபடுபவர்கள் போட்டி நிலையை கைவிட வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-7-60)

# தங்க நகை, பணத்துடன் தலைமறைவானார் மகள்

## காதலனுடன் சென்றதாக பொலிஸில் தாயார் முறைப்பாடு

(கரணவாய்)

தாயின் நகை மற்றும் பணத்தை திருடிச் சென்ற மகள் காதலனுடன் தலை மறைவாகியுள்ள சம்பவம் வடமராட்சிப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் கரவெட்டி கரணவாய் பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக தாயாரால் நேற்று முன்தினம் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டில் வைக்கப்பட்டிருந்த 25 பவுண் நகை மற்றும் 2 இலட்சம் ரூபா பணம் என்பவற்றை எடுத்துக் கொண்டு கடந்த சனிக்கிழமை இரவு 9.30 மணியளவில் தலைமறைவாகியுள்ளார் என தாயாரால் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் தனது மகள் கிளிநொச்சி இரணைமடுவினைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை காதலித்ததாகவும் அவ்விளைஞருடன் தான் தனது மகள் சென்றுள்ளார் என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

குறித்த பெண்ணையும் மேற்படி குற்றத்துடன் தொடர்புடைய நபரையும் விரைவில் கைது செய்வோம் என நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7-60)


# இரண்டாம் மொழிக் கற்கைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகத்தின் இரண்டாம் மொழிக் கற்கை (ஆங்கிலம், சிங்களம்) 2014/2015 இற்கான விண்ணப்பங்கள் வகுதி I வகுதி II என்ற இரு பிரிவுகளில் கோரப்படுகின்றன.

புதிதாக இக் கற்கை நெறியை கற்க விரும்புபவர்கள் வகுதி I எனவும் ஏற்கனவே கற்கை நெறியைக் கற்று சித்தியடைந்தவர்கள் வகுதி II எனவும் விண்ணப்பிக்க முடியும்.

இக் கற்கை நெறி நவம்பர் மாத முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட விருப்பதால் விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக ஆரம்பகட்ட நிதியாக 500 ரூபாவை வங்கியில் செலுத்தி தேசிய கல்வி நிறுவக ஆசிரியர் கிளைக்கு அல்லது மொழி இணைப்பாளர் யாழ். மத்திய கல்லூரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)








புகைத்தல் மற்றும் மது ஒழிப்பு தொடர்பில் விழிப்புணர்வு பேரணி ஒன்று நாவாந்துறையில் நேற்று முன்தினம் இடம் பெற்றது. நாவாந்துறை ஜே/84, ஜே/85 கிராமசேவகர் பிரிவைச்சேர்ந்த கிராமசேவகர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப்பேரணியானது நாவாந்துறை சந்தியில் ஆரம்பித்து சென்.மேரிஸ் வரை சென்று முடிவடைந்தது. (படங்கள்: மானிப்பாய் செய்தியாளர்)

# பதிவு செய்யுங்கள்

தேசிய சேமிப்பு வங்கி கிளைகளில் சிறுவர் சேமிப்பு கணக்கினை பேணிவரும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பரீட்சைக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட தமது சேமிப்பு கணக்கில் 01.10.2014 இல் ரூபா 2500 மீதியைக் கொண்டவர்கள் தாம் கணக்குகளை மேற்கொள்ளும் கிளைகளில் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழுடன் 10.11.2014 இற்கு முன்னர் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு 2015 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் சந்தைகள், இறைச்சிக் கடைகள் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 29.10.2014 தொடக்கம் 13.11.2014 3.00 மணிவரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 14.11.2014 முற்பகல் 10 மணிவரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 14.11.2014 முற்பகல் 10.30

1. கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை "செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு." என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரை இட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் 14.11.2014 முற்பகல் 10.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென கரைதுறைப்பற்று பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறு பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு" என்ற முகவரிக்கு 14.11.2014 முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

2. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் நேரடியாக கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் கீழ்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக் கட்டணங்கள், மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமும் செலுத்தி மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.

5. ஆகக் குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவ துடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

6. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

7. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரமுண்டு.

8. இறைச்சிக்கடைகள், சந்தைகள் குத்தகைக்கு எடுப்பவராலேயே நடத்தப்பட வேண்டும். குத்தகைக்கு எடுத்தவர் இன்றி அவர் சார்பாக வேறு ஒருவரால் நடத்தப்படின் உடனடியாக குத்தகை ஒப்பந்தம் இரத்து செய்யப்படுவதுடன் வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

9. இறைச்சிக்கடையினை குத்தகைக்கு எடுத்தவர் வெட்டப்பட்ட மாட்டிறைச்சியினை பிரதேசசபை எல்லைக்கு அப்பால் கொண்டு செல்ல எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப்படமாட்டாது.

10. எம்மால் நிர்ணயிக்கப்படும் இடத்தில் மாடுகள், ஆடுகள் கட்டப்பட்டு அனுமதிக்கப்பட்ட கொல்களத்திலேயே இறைச்சிக்குரிய மாடுகள், ஆடுகள் அறுக்கப்படவேண்டும்.

11. இறைச்சிக்கடைகளுக்கு சபையால் நிர்ணயிக்கப்படும் மாதாந்த வாடகை செலுத்தப்படவேண்டும்.

12. கேள்விதாரரின் பிணைப்பணம் உரிய குத்தகை ஒப்பந்த காலம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.

13. தெரிவு செய்யப்பட்ட கேள்விகாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து 03 நாட்களுக்குள் அல்லது சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் குறிப்பிட்ட கேள்வித் தொகையின் 1/3 பகுதியை (உரிய வரிகளுடன்) பாதுகாப்பு வைப்பாக செலுத்தி குத்தகை ஒப்பந்த உடன்படிக்கை பூர்த்தி செய்தல் வேண்டும்.

14. குத்தகைக் காலம் ஒரு வருடமாகவே இருக்கும். ஆயினும் இதற்குக் குறைந்த காலப்பகுதி அறிவித்தலின் பிரகாரம் அல்லது ஒப்பந்தத்தில் குறிப்பிட்டவாறு அமையலாம். எது எவ்வாறாயினும் ஒப்பந்தம் அவ்வருடம் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிவரையிலுமே செல்லுபடியாகும். இக்கால அவகாசத்திற்கு குத்தகைப் பணத்தை செலுத்தத்தவறும் கேள்விதாரரின் வைப்புப்பணம் சபைக்குரியதாக மாற்றம் செய்வதுடன் அவர்களது பெயர் கேள்வி கோரும் தகுதியுடையவரின் நிரலிலிருந்து நீக்கப்படுவதுடன் தவறுனர் பட்டியலிலும் சேர்த்துக் கொள்ளப்படும்.

15. யாதொரு காரணமும் காட்டாது கேள்வி முழுவதையுமோ கேள்வியின் பகுதியையோ ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்வி சபைக்கும் பிரதேசசபை செயலாளருக்கும் உரிமை உண்டு. அதனால் ஏற்படும் செலவுகளுக்கு நட்ட ஈடு கோர கேள்விகாரருக்கு உரிமை இல்லை.

16. சபையின் செயலாளரின் இவ் ஒப்பந்தம் தொடர்பாக எவ்வித முடிவையும் ஏற்போம் என்றும் இது தொடர்பாக சபைக்கெதிராகவோ / செயலாளருக்கெதிராகவோ நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கமாட்டோம் என்றும் ஏற்றுக்கொள்கின்றேன்.

17. கரைதுறைப்பற்று பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட கொக்கிளாய், புதுமாத்தளன் ஆகிய இடங்களில் இறைச்சிக் கடைகள் சபையால் அமைத்து வழங்கப்படும் வரை தாங்களே தற்காலிக கடை அமைத்தல் வேண்டும். இதற்கான செலவீனங்களை சபை பொறுப்பேற்கமாட்டாது. அத்துடன் சபையால் கடை கட்டி வழங்கவில்லை என்ற காரணத்தை முன் வைத்து மாதாந்த கட்டுப்பணத்தில் விலக்களிப்போ குறைப்பனவோ மேற்கொள்ளப்படமாட்டாது.

18. கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு:இப்பிரதேச சபையின் கோழி இறைச்சி கடைகளிலிருந்து 01 KM சுற்று வட்டாரத்திற்குள் தனியார் எவரும் கோழி இறைச்சி விற்பனை செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

| இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக்கட்டணம் (VAT, NBT) நீங்கலாக | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக குறைந்த கேள்வித் தொகை (VAT, NBT) நீங்கலாக |
|---|---|---|---|---|
| | 01. முள்ளியவளை உப அலுவலகம் | | | |
| 1 | முள்ளியவளை பொதுச்சந்தை | 1,000.00 | 20,000.00 | 930,000.00 |
| 2 | தண்ணீரூற்று பொதுச்சந்தை | 1,000.00 | 40,000.00 | 2,000,000.00 |
| 3 | வற்றாப்பளை பொதுச்சந்தை | 1,000.00 | 5,000.00 | 165,000.00 |
| 4 | கேப்பாபிலவு பொதுச்சந்தை | 1,000.00 | 2,000.00 | 15,000.00 |
| 5 | சிலாவத்தை பொதுச்சந்தை | 1,000.00 | 3,000.00 | 50,000.00 |
| 6 | முள்ளியவளை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 25,000.00 | 1,130,000.00 |
| 7 | முள்ளியவளை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 195,000.00 |
| 8 | தண்ணீரூற்று மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 25,000.00 | 1,225,000.00 |
| 9 | தண்ணீரூற்று கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 15,000.00 | 675,000.00 |
| 10 | தண்ணீரூற்று ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 3,000.00 | 40,000.00 |
| 11 | சிலாவத்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 20,000.00 | 770,000.00 |
| 12 | சிலாவத்தை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 125,000.00 |
| 13 | கேப்பாபிலவு மாட்டிறைச்சக்கடை | 1,000.00 | 2,000.00 | 25,000.00 |
| 14 | கேப்பாபிலவு கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 15,000.00 |
| 15 | வற்றாப்பளை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 15,000.00 |
| | 02. முல்லைத்தீவு உப அலுவலகம் | | | |
| 1 | முல்லைத்தீவு பொதுச்சந்தை | 1,000.00 | 35,000.00 | 1,800,000.00 |
| 2 | முல்லைத்தீவு மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 40,000.00 | 1,970,000.00 |
| 3 | முல்லைத்தீவு கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 20,000.00 | 1,000,000.00 |
| 4 | முல்லைத்தீவு ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 3,000.00 | 50,000.00 |
| | 03. கொக்கிளாய் உப அலுவலகம் | | | |
| 1 | கொக்குத்தொடுவாய் பொதுச்சந்தை | 1,000.00 | 2,000.00 | 25,000.00 |
| 2 | கொக்குத்தொடுவாய் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 3,000.00 | 50,000.00 |
| 3 | கொக்கியாள் கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 15,000.00 |
| 4 | கொக்கிளாய் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 3,000.00 | 50,000.00 |
| | 04. முள்ளிவாய்க்கால் உப அலுவலகம் | | | |
| 1 | முள்ளிவாய்க்கால் பொதுச்சந்தை | 1,000.00 | 2,000.00 | 25,000.00 |
| 2 | முள்ளிவாய்க்கால் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 150,000.00 |
| 3 | முள்ளிவாய்க்கால் கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 15,000.00 |
| 4 | புதுமாத்தளன் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 110,000.00 |
| | 05. செம்மலை உப அலுவலகம் | | | |
| 1 | அளம்பில் பொதுச்சந்தை | 1,000.00 | 2,000.00 | 30,000.00 |
| 2 | குமுழமுனை பொதுச்சந்தை | 1,000.00 | 8,000.00 | 245,000.00 |
| 3 | செம்மலை பொதுச்சந்தை | 1,000.00 | 2,000.00 | 30,000.00 |
| 4 | அளம்பில் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 12,000.00 | 500,000.00 |
| 5 | அளம்பில் கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 15,000.00 |
| 6 | குமுழமுனை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 100,000.00 |
| 7 | குமுழமுனை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 15,000.00 |
| 8 | குமுழமுனை ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 15,000.00 |
| 9 | செம்மலை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 15,000.00 |

கரைதுறைப்பற்று பிரதேசசபை,
முல்லைத்தீவு
28.10.2014

சு.ரவீந்திரநாதன்
செயலாளர்,
கரைதுறைப்பற்று பிரதேசசபை
முல்லைத்தீவு

(சி-8898)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணையத்தளங்களுடைய வதந்திகளின் அடிப்படையில் அரசாங்கம் செயற்படாது

### அமைச்சர் டி.சில்வா தெரிவிப்பு

இணையத்தளங்களில் பிரசுரமாகும் வதந்திகள், ஊர்வம்புகளின் அடிப்படையில் அரசாங்கம் செயற்படுவதில்லை என அமைச சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் சட்டமூலமொன்றை சமர்ப்பிப்பதானால் அது உரிய முறையில் கொண்டு வரப்படும் எனவும் அவர் தெரிவித்தார். வரவு - செலவு திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்திற்கு முன்னதாக ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்தார்.

அதில் அரசாங்கம் அவசர சட்டமூலமாக ரத்ன தேரரின் 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை சமர்ப்பிக்க தயாராவதாக இணையத்தளங்களில் செய்தி வெளியாகியுள்ளதாக தெரிவித்தார். 19 ஆவது திருத்தத்திற்கு நாமும் ஆதரவளிக்கவுள்ளதால் அதனை சமர்ப்பிக்கும் முன்னர் ஐ.தே.க.வுடனும் பேசுவோம் என்று நிமல் சிறிபால தெரிவித்தார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை முன்வைத்த ஏ.எச்.எம்.அஸ்வர் எம்.பி. இல்லாத சட்டமூலமொன்று குறித்து எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்புகிறார். அவ்வாறு ரத்னதேரரின் சட்டமூலம் எதுவும் கிடையாது என்றார். இதன்போது கருத்துத் தெரிவித்த மனுஷ நாணயக்கார எம்.பி., தானே இணையத்தளங்களில் செய்தி வெளியிட்டு விட்டு தானே கேள்வி கேட்பது தவறு என சுட்டிக் காட்டினார். (இ-3-5)

## குடிதண்ணீர் பிரச்சினையை தீர்க்க 75 இலட்சம் ரூபா நிதியில் கிணறுகள் அமைப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையை தீர்க்க அனர்த்த முகாமைத்துவ அமைச்சு 25 கிணறுகளை அமைக்க 75 இலட்சம் ரூபா நிதி உதவியை வழங்கியுள்ளது. இதையடுத்து பொருத்தமான இடங்களில் கிணறுகளை வெட்டுவதற்கான சகல ஒழுங்குகளையும் பிரதேச செயலர் மேற் கொண்டுள்ளார்.

18 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்ட பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து தரப்படும் என்ற அரசாங்கத்தின் உறுதிமொழியைத் தொடர்ந்து மீள்குடியேறிய பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தேவையான குடிதண்ணீரைப் பெறமுடியாமல் திண்டாடியதுடன் குடிதண்ணீருக்கான தூர இடங்களுக்கு அலையவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இப்பிரதேசத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த பல பொதுக்கிணறுகளில் உள்ள நீர் வற்றியதனால் தற்பொழுது பிரதேச சபையும் பிரதேச செயலகமும் இணைந்து குறிப்பிட்ட இடங்களில் நீர்த்தாங்கிகளை வைத்து இரு தினங்களுக்கு ஒருமுறை பவுசர் மூலம் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றபோதிலும் இந்த நீர் அவர்களுக்குப் போதுமானதாக இல்லாததினால் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். இந்த நிலையில் மீள்குடியேறிய குடும்பங்களின் நிலைப்பாடு குறித்தும் குடிதண்ணீரின் அவசியம் குறித்தும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சருக்கு சுட்டிக்காட்டியதையடுத்து இப்பிரதேசத்தில் 25 கிணறுகளை அமைப்பதற்கு வசதியாக 75 இலட்சம் ரூபாவை கிளிநொச்சி செயலகத்துக்கு அனுப்பிவைத்துள்ளது. நிதிகிடைத்ததையடுத்து கிணறுகளை வெட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள பிரதேச செயலர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளின் ஆலோசனைகளுடன் பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்வதில் ஈடுபட்டுள்ளார். (அ-2)

**வாழ்க்கையில் வெறுப்பா?**

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்
காலை 9.00 - பி.ப 1.00

கைகொடுக்கும் நண்பர்கள்
104,4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
021 222 8117

# அரசை விமர்சித்த மாவை எம்.பி; வாங்கிக்கட்டினார் அஸ்வர் எம்.பி

அரசாங்கத்தின் செயற்பாடுகளை கடுமையாக விமர்சித்த தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு எதிராக அஸ்வர் எம்.பி. கூச்சலிட்டு எதிர்ப்பைக்காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளன கூட்டத்தில் இந்தச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக பிரதமர் டி.எம். ஜயரத்ன கலந்துகொண்டிருந்தார். சிறப்பு விருந்தினராக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா கலந்துகொண்டிருந்தார்.

மாவை சேனாதிராஜா அங்கு உரையாற்றிய போது , அரசாங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் சிறுபான்மை இன மக்கள் மீதான பாரபட்சம் தொடர்பில் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார், தமிழ்- முஸ்லிம்களின் ஒற்றுமையான அரசியல் செயற்பாடுகள் பற்றியும் அவர் வலியுறுத்தினார். பிரதமர் டி.எம்.ஜயரத்ன அவற்றை உணிப்பாக அவதானித்துக் கொண்டிருந்தார், எனினும் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த அஸ்வர எம்.பி. உடனடியாக எழுந்து நின்று கூச்சல் போட்டார். இதனையடுத்து மாவை சேனாதிராஜாவும் சூடாக பதிலடி கொடுத்தார்.

இருவரும் கடுமையாக வாக்குவாதப்பட்டனர், அஸ்வர் எம்.பி.யின் செயற்பாடுகள் குறித்து சம்மேளனக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கடுமையான அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஒருசிலர் அவருக்குக் கேட்கும் வண்ணமாகவே புத்தளம் பூருவா (புத்தளத்துக் கழுதை) சத்தம் போட வேண்டாம் என்று கத்தியுள்ளனர்.

இதனையடுத்து சங்கடத்தில் அஸ்வர் எம்.பி. எதிர்ப்பைக் கைவிட்டு அமர்ந்து கொண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியேயும் அஸ்வர் எம்.பி.யின் செயற்பாடுகள் காரணமாகவே அரசியல் வட்டாரத்தில் அவருக்கு புத்தளத்துக்கழுதை என்ற பட்டப் பெயர் சூட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ-3-5)

# என்னை எவராலும் வெளியேற்ற முடியாது

**மேர்வின் சில்வா**

களனி தேர்தல் தொகுதியில் இருந்து எவராலும் தன்னை வெளியேற்ற முடியாது எனவும் மக்களால் மாத்திரமே தனது அரசியல் பயணத்தை நிறுத்த முடியும் எனவும் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எவர் கூறினாலும் நான் களனியில் இருந்து போக மாட்டேன். மக்கள் போகுமாறு கூறும் நாளில் நான் சென்று விடுவேன்.

களனி தொகுதியில் வாழ்வதற்காகவே கிரிபத்கொடையில் வீட்டை வாங்கினேன். திருமணம் செய்யாமல் இருநதால் நான்களனிபெண்ணை திருமணம் செய்திருப்பேன்.

கிராமத்தில் படுத்து உறங்குவது போல் இன்றும் நான் பாயிலேயே படுத்து உறங்குகிறேன். பாயில் படுத்து உறங்குவதால கீழே விழுவதில்லை.

எவ்வாறாயினும் எனது அன்பான மக்களால் மாத்திரமே என் அரசியல் பயணத்தை நிறுத்த முடியும் எனவும் அமைச்சர் மேர்வின் சல்வா மேலும் தெரிவித்தார். (இ-3-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 110 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 130 | 100 |
| தக்காளி | 100 | 140 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 50 | 50 |
| கோவா | 100 | 80 | 100 | 100 |
| கரட் | 140 | 80 | 90 | 160 |
| பூசணி | 30 | 40 | 40 | 40 |
| புடோல் | 60 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 70 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 70 | 60 | 70 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 80 |
| பாகற்காய் | 250 | 200 | 220 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 140 | 130 | 80 |
| கருணைக்,கிழங்கு | 60 | 60 | 70 | 60 |
| பயற்றங்காய் | 160 | 150 | 190 | 160 |
| லீக்ஸ் | 160 | 150 | 100 | 160 |
| பீற்றூட் | 60 | 80 | 60 | 80 |
| கறிமிளகாய் | 200 | 160 | 110 | 160 |
| முருங்கைக்காய் | 60 | 80 | 150 | 120 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 90 | 80 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 | 25 |
| தேசிக்காய் | 150 | 140 | 130 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 40 | 40 | 35-40 |
| இராசவள்ளி | 150 | 130 | 130 | 150 |

# அசிட் கொடுத்து தனது மகள்களை கொலைசெய்து தானும் தற்கொலை

**லண்டனில் இந்திய வம்சாவளி பெண்**

லண்டனில் இந்திய வம்சாவளியை சேர்ந்த பெண் ஒருவர் நேற்று முன்தினம் அவரது இரு மகள்களுக்கும் அசிட் கொடுத்து கொலை செய்துவிட்டு தானும் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

லண்டனின் ருஸ்லிப் பகுதியில் வசித்து வந்தவர் ஹீனா. இவருக்கு ஜாஸ்மின் (வயது-9), ப்ரிஷா (வயது-4) என இரு மகள்கள் இருந்தனர்.

தனது கணவரின் பெற்றோருடன் வசிக்க ஹீனாவிற்கு விருப்பம் இல்லை என கூறப்பட்ட நிலையில், அவர் தனது இரு மகளுக்கும் அசிட் கொடுத்து கொலை செய்துவிட்டு தானும் தற்கொலை செய்துக் கொண்டார். இத்துயர சம்பவம் குறித்து தெரிவித்த ஹீனாவின் கணவர் கல்பேஷ், "நானும் ஹீனாவும் எங்கள் மகள்களோடு நிம்மதியாக வாழ்ந்தோம். அவள் இறப்பதற்கு முன்பு வரை அவள் மகிழ்ச்சியாக இருந்ததாகவே நான் எண்ணினேன்.

நாங்கள் என் பெற்றோருடன் வசித்துவந்தது ஹீனாவிற்கு பிடிக்காது என எனக்கு தெரியும். ஆனால், அவள் எப்போதும் தனது வாழ்வை முடித்துகொள்ளும் எண்ணத்தில் இருந்ததில்லை. இச்சம்பவம் எனக்கு மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என கல்பேஷ் தெரிவித்தார்.


ஹீனாவின் தோழியான பிரனாலி சாம்பிரே கூறுகையில், தனது மாமனார் கடுமையாக நடந்து கொள்வதாக ஹீனா தன்னிடம் தெரிவித்ததாக கூறியுள்ளார். (இ-3-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 176

பூஜன் ராஜா




ரத்தினசபாபதி பாலராஜா




என்ன ஒரு புத்திசாலித்தனம்

கரொலின் கெனி


தேர்வு எழுதும்போது தெரியாத விடைக்கு தலையை சொறியாமல்.



முன்னாடி இருப்பவனின் முதுகைச் சொறிபவனே தேர்ச்சி அடைகிறான்...!!

அநொஜன் சிவா

வித்துவான் : நேத்து என் கச்சேரிக்கு வருவீங்கன்னு எதிர்பார்த்தேன்



வடிவேலு : வரன்னும்ன்னுதான் சார் நினைச்சேன் அதுக்குள்ள வேறொரு கஷ்டம் வந்திருச்சி!

கிரி சிவராஜா




குமார் கார்த்திகன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை-2014
# மாதிரி வினாத்தாள்- மேல்மாகாணம்

**சுகாதாரமும் உடற்கல்வியும்** **மூன்று மணித்தியாலங்கள்**

பகுதி I

**1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான விடையை தெரிவு செய்து எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**

1. எனக்கு நல்ல ஞாபகசக்தியுள்ளது. எனக்கு பல நண்பர்கள் உள்ளனர். நான் மற்றவர்களுக்கு உதவி புரிய விருப்பம் கொண்டவன் ஆவேன். விளையாட்டு வீரனாகிய நான் போசனையுள்ள உணவிற்கு முதலிடம் கொடுப்பேன்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பந்தி மலிங்க என்பவரின் ஆளுமை வளர்ச்சிபற்றி கருத்தரங்கின் போது தெரிவித்தார். இதன்படி மலிங்க என்பவர்,

1. நல்ல உடல் நிலை கொண்டவர் ஆவார்.
2. பூரண சுகாதார நிலை கொண்டவர் ஆவார்.
3. நல்ல உடற் தகுதி கொண்டவர் ஆவார்.
4. தன்னைப்பற்றிய பெருமிதம் கொண்டவர்.

2. இலங்கையில் மிகவும் முக்கியமான சவால்களில் காண முடியாத விடயமானது.

1. சிறந்த நற்பழக்க வழக்கம் கடைப்பிடித்தல்.
2. செயற்பாடு கொண்டமைந்த வாழ்க்கைக் கோலம் இன்மை.
3. சரியான போசனை பழக்கத்தை கொண்டிராமை
4. போதைப்பொருள் பாவனை, மதுபானம் அருந்தும் பழக்கம் அதிகரித்தல்

3. சுகாதார மேம்பாடு பற்றிய மிகவும் சரியான கூற்று

1. சுகாதார மேம்பாடு தம்மால் மட்டும் மேற்கொள்ள முடியும்.
2. சுகாதார மேம்பாடு மூலமாக மனிதனின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும்.
3. சுகாதார மேம்பாடு நோய்நொடியிலிருந்து பாதுகாப்பு பெற முக்கியமாக அமையும்.
4. சுகாதார மேம்பாடு 10 நோக்கங்களை கொண்டமைந்தது.

4. சுகாதார மேம்பாட்டு இலக்குகளை வகுக்கின்ற பொழுது கடைப்பிடிக்க வேண்டிய கொள்கை முறையானது.


1. RICE 2. BMI 3. LIFE 4. SMART

5. 10ஆம் தரத்தில் கல்வி பயிலும் நிசாதி விரைவான உடலியல் மாற்றங்களை அடைகிறாள். பருத்தல், முகத்தில் பருக்கள் தோன்றுதல், இடைப்பகுதி விரிவடைதல் போன்ற மாற்றங்கள் ஆகும். இதன்படி அவள் கொண்டிருக்கும் பருவப்பிரிவு.

1. சிசு பருவம் 2. கட்டிளமை பருவம்
3. இளமை பருவம் 4. முதியோர் பருவம்

6. நிசாதியின் அபிலாசைகள் அல்லாதவொன்று.

1. எதிர்பாலார் மீது ஏற்படும் கவர்ச்சி.
2. சூல் வெளியேறுதல்.
3. புதிய அனுபவங்களை பெறலும், பெருமிதம் கொள்ளுதலும்.
4. சமூக பொது நோக்கத்திற்காக செயற்படுதல்.




7. உயரம் பாய்தல் நிகழ்வொன்றில் பங்கேற்ற மலித் என்பவரின் உரு மேலே காட்டப்பட்டுள்ளது. இதன்படி இவரின் புவியீர்ப்புமைய அமையும் இடமாகக் கூறக்கூடியது.

1. A 2. B 3. C 4. D

8. வெளிநாட்டிலிருந்து குமுதுவின் மாமா அனுப்பி வைத்த பார்சுப் பொதி மிகவும் பாரமாக இருந்தது. இதனை அவரின் மேல் மாடியிலுள்ள அறைக்கு கொண்டு செல்வதற்காக அஜித் பணிக்கப்பட்டார். இதன் போது அஜித் கவனிக்க வேண்டிய காரணமாவது உயர்த்தும் போது.

1. முண்டப்பகுதியை முன்னோக்கி செலுத்துதல்.
2. முண்டபகுதியை பின்னோக்கி செலுத்துதல்.
3. முண்டத்தை நேராக வைத்திருத்தல்.
4. ஒரு கையால் பாரத்தை உயர்த்த எத்தனித்தல்.

9. ஒரே நேரத்தில் உடலை உயர்த்த வேண்டாம், விமானமொன்று மேல் எழும்புவது போல் முறையாக உடலை உயர்த்தும்படி உடற்கல்வி ஆசிரியர் ரகுவுக்கு அறிவுறுத்தினார். இது எச்சந்தர்ப்பத்தில் என்று நீர் விளங்கிக் கொள்கிறீர்.

1. மத்திம தூர ஓட்ட ஆரம்பத்தின் போது.
2. குறுந்தூர ஓட்ட ஆரம்பத்தின் போது.
3. நெடுந்தூர ஓட்ட ஆரம்பத்தின் போது.
4. மரதன் ஓட்டப் போட்டி ஆரம்பத்தின் போது.

10. மேற்படி போட்டி ஆரம்பிப்பதற்கு கொடுக்கப்படும் கட்டளையாக அமைவது.

1. தயார் நிலை – வெடியொலி.
2. தயார் – வெடியொலி.
3. குறிக்கு செல் – வெடியொலி.
4. குறிக்கு செல் – தயார் – வெடியொலி.

11. மேற்படி போட்டியில் பிழையான ஆரம்பத்தை ஹருசென் பெற்றார் எனில் அவருக்கு வழங்கப்படும் தண்டனை யாது?

1. போட்டியிலிருந்து நீக்குதல்.
2. மஞ்சள் அட்டையை காட்டி எச்சரித்தல்
3. எல்லா போட்டியாளருக்கும் மஞ்சள் அட்டையை காட்டி எச்சரித்தல்.
4. போட்டியை இரத்துச் செய்தல்.

| ......................................... = கவட்டின் தூரம் X கவடு வைக்கப்படும் எத்தன அளவு |
|---|

12. மேற்காட்டப்பட்டுள்ள சூத்திரத்தின்படி இடைவெளிக்கு வரக்கூடிய சொல் ஆனது.

1. ஓடும் திறன் 2. சக்தி 3. ஓடும் வேகம் 4. தாங்கும் இயல்பு.


13. 4 x 100 மீ அஞ்சல் ஓட்டத்தில் பங்கேற்ற ஜனித், சுயான், மொஹமட், கமிலன் போன்றோரின் மிகக்கூடிய தூரம் ஓடக் கூடியவன் எனும் கருத்து.

பயிற்றுவிப்போனால் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்படி ஜனித் ஓடக்கூடிய ஆகக் கூடிய தூரம்.

1. 100 m 2. 110 m 3. 120 m 4. 130 m


14. ஜனித் ஓடிக்கொடுக்க வேண்டிய நிலையானது.

1. ஆரம்ப ஓட்ட வீரனாக. 3. மூன்றாம் ஓட்ட வீரனாக.
2. இரண்டாம் ஓட்ட வீரனாக. 4. கடைசி ஓட்ட வீரனாக.



15. காட்டப்பட்டுள்ள உருவின்படி நீளம் பாய்தல் போட்டியொன்றில் படிமுறைகள் சரியாக குறிக்கப்பட்டுள்ள விடையானது.

1. ஓடி அணுகுதல், பறத்தல் நிலை, மிதித்தெழல், நிலம்படல்.
2. ஓடி அணுகுதல், நிலம்படல், பறத்தல் நிலை, மிதித்தெழல்.
3. ஓடி அணுகுதல், பறத்தல் நிலை, நிலம்படல், மிதித்தெழல்.
4. ஓடி அணுகுதல், மிதித்தெழல், பறத்தல் நிலை, நிலம்படல்.



16. 'அம்மா தயார் செய்யும் சூப் போன்றே' இது ஒலிபரப்பு ஊடகமொன்றின் மூலமாக செய்யப்பட்ட விளம்பரமாகும். இதில் போசனையாளரினால் கூறப்பட முடியாத கருத்து.

1. தாய் வேலைப்பளு அதிகமுள்ளவராதலால் சூப் குடிப்பது தவறல்ல.
2. பிழையான ஊடக தாக்கத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும்.
3. அதிக போசனைக்கு செயற்கை உணவுகளின் தாக்கம் உள்ளது.
4. செயற்கை உணவுகளுக்கு எவ்விதமான சிறப்பு போசனையும் கிடையாது.

17. நந்தாவதி நீரிழிவு நோயினால் பீடிக்கப்பட்டுள்ள ஒருத்தி. வைத்திய அறிவுறுத்தலின் படி உணவு வகைகளின் தெரிவை அவள் செய்கின்றாள். இதன்படி அவள் உண்ணக் கூடாதென வைத்திய அறிவுறுத்தல் வழங்கிய உணவு.

1. சிவப்பரிசிச்சோறு. 2. மீன்.
3. பழம் ஓரளவு. 4. சம்பா அரிசி.

18. சுவாசிப்பதில் இடையூறு கண்ட நளின் மிகவும் சிரமப்பட்டு சுவாசிப்பதை காணக் கூடியதாயிருந்தது. சுவாசத்தொகுதியினை நேரடியாக பாதிக்கும் நோய் எது?

1. உயர் குருதியமுக்கம். 2. நியூமோனியா.
3. துரம்பொயிஸ். 4. லியூகெமியா.

19. மாகாண போட்டிகளில் பங்கேற்கும் வீரர்களுக்கு அதிபரினால் விசேடமாக வழங்கப்பட்ட அறிவுறுத்தலில் வலுவுள்ள கூற்று.

1. விளையாட்டு வீரர்களின் உரிமைகள்.
2. விளையாட்டின் தன்மையை பேணுங்கள்.
3. சாதாரணமுறையில் போட்டியிடுங்கள்.
4. எப்பொழுதும் வெற்றியை பற்றியே நினையுங்கள்.

20. கிறிஸ்துவுக்கு முன் 776ஆம் வருடத்தில் எதென்ஸ் நகரத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஒலிம்பிக் விளையாட்டு விழாவின் ஆரம்ப கர்த்தா.

1. வில்லியம்ஸ் ஜீ.மோகன்.
2. பியர் டீ குபேட்டின்
3. எடின்பரோ அரசன்
4. வொல்டர் கெமக்.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




லெபனானில் படையினர் துப்பாக்கிதாரிகள்

# உக்கிர மோதல்

## 6 படை வீரர்கள் பலி



(டிரிபோலி)

லெபனானின் டிரிபோலி நகரில் அந்நாட்டு படையினருக்கும் துப்பாக்கிதாரிகளுக்குமிடையே நேற்று முன் தினம் இடம்பெற்ற மோதலில் 6 படை வீரர்கள் உயிரிழந்துள்ளனர். பலர் படுகாயமடைந்துள்ளனர்.

நகரிலுள்ள வரலாற்று முக்கியத்துவமிக்க சந்தையொன்று உள்ளடங்கலான பிரதேசங்களில் தொடர்ந்து இரண்டாவது நாளாக இந்த மோதல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

சிரியாவிலான மோதல்கள லெபனானிய டிரிபோலி நகரில் பதற்ற நிலையைத் தோற்றுவித்துள்ளன.

லெபனானிய படையினர் கடந்த வெள்ளிக்கிழமை 3 போராளிகளை கொன்று உள்ளூர் தலைவர் ஒருவரை கைது செய்ததையடுத்து மேற்படி வன்முறைகள் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3-5)

# பாகிஸ்தானில் விமான தாக்குதல்

## 20 தலிபான் தீவிரவாதிகள் பலி!

ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதியில் பாகிஸ்தான் விமானப் படை நேற்று முனதினம் நடத்திய திடீர் தாக்குதலில 20 தலிபான் தீவிரவாதிகள் உயிரிழந்தனர்.

மேலும் பலர் காயமடைந்தனர். தலிபான் தீவிரவாதிகளை ஒடுக்கும் பணியில் பாகிஸ்தான இராணுவம் முழுக்கவனம் செலுத்தி வருகிறது.

பழங்குடியினர் அதிகம் வசிக்கும் 7 மாவட்டங்களில் ஒன்றான கைபர் மாவட்டத்தில் நேற்று இந்த் அதிரடி தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில், 20 தீவிரவாதிகள் உயிரிழந்தனர். அவர்களின் 5 மறைவிடங்கள் அழிக்கப்பட்டுள்ளன என்று இராணுவ உயர் அதிகாரி தெரிவித்தார்.

கைபர் மாவட்டத்தில் பாரா பகுதியில் கைபர்-1 ஆப்பரேஷன் என்ற தாக்குதல் நடவடிக்கையை பாகிஸ்தான் விமானப்படை இந்த மாதம் தொடங்கியது. இந்த தாக்குதல் தொடர்கிறது. ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் தலிபான் தீவிரவாதிகளின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்தும் முயற்சியில் பாகிஸ்தான் இறங்கியுள்ளது. (இ-3-5)

# இராணுவ வளாகம் ஆப்கான் படையிடம்

தெற்கு ஆப்கானிஸ்தானில் அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் ஆயுதப்படையினர் பயன்படுத்திவந்த பெரும் இராணுவ வளாகம் ஒன்று உள்நாட்டு பாதுகாப்புப் படையினரிடம் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தலிபான் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக வெளிநாட்டுப் படைகள் ஆப்கானிஸ்தானுக்குள் சென்று 13 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், இந்தக் கட்டட வளாகம் ஆப்கான் படைகளிடம் கையளிக்கப்படுகின்றது.

ஆபகானிஸ்தானில்நேட்டோ படைகளைக் குறைக்கும் நடவடிக்கையின் முக்கிய கட்டமாக இந்த நிகழ்வு பார்க்கப்படுகின்றது.

பாஸ்ச்யன் படைத்தளத்தில் நேற்று முன்தினம் நடந்த் நிகழ்வில் பிரிட்டிஷ், அமெரிக்க மற்றும் நேட்டோ கொடிகள் இறக்கப்பட்டு, ஆப்கான் கொடி மட்டும் பறக்க விடப்பட்டுள்ளது.

ஹெல்மண்ட் மாகாணத்தில் பிரிட்டன் படைகளின் தாக்குதல் நடவடிக்கைகள் முடிவுக்கு வருவதை இன்றைய நிகழ்வு உணர்த்துவதாகவும், இது பிரிட்டன்-ஆப்கான் வரலாறுகளில் முக்கிய அத்தியாயம் என்றும் பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் மைக்கல் ஃபாலோன் கூறினார்.

ஆப்கானுக்குள் நுழைந்தது முதல் பிரிட்டன் இது வரை 453 படையினரை இழந்துள்ளது.

இதேவேளை, இந்த ஆணடில் மட்டும் ஆப்கான் படையினரில் நானகாயிரம் பேர் பலியாகியுள்ளதாக செய்தியாளர்கள்தெரிவித்தனர். (இ-3-5)




மத்திய பெல்கிரேடில் உள் ளூர் அறிவியலை வளர்க்கும் முகமாக கொண்டாடப்படும் Zombie Walk நிகழ்வை மக்கள் பேய்கள் போல் வேடமணிந்து கொண்டாடிவருகின்றனர்.

## ஐரோப்பிய வங்கிகள் தோல்வியடைந்துள்ளன

பொருளாதார நிலை மேலும் மோசமடைந்தால், வங்கிகள் அதனை எவ்வாறு தாக்குப் பிடிக்கும் என்பதை மதிப்பிடுவதற்கான சோதனையில், ஐரோப்பிய வலயத்தைச் சேர்ந்த பலவீனமான பல வங்கிகள் தோல்வி கண்டுள்ளன.

14 வங்கிகள் உடனடியாக பில்லியன் கணக்கான டொலர்கள் புதிய நிதியை தேடுவதுடன், இரு வாரத்துக்குள் தமது பலவீனங்களை திருத்துவதற்கான திட்டங்களை முன்வைக்க வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி நிர்வாகிகள் கூறியுள்ளனர்.

இப்படியான 4 பலவீனமான வங்கிகளை ஆகக் கூடுதலாக இத்தாலி கொண்டுள்ளது.

கடந்த ஆண்டின்இறுதியில் இப்படியான சோதனையில் தோலவியடைந்திருக்க வேண்டிய ஐரோப்பிய வலயத்தின் மேலும் 10 வங்கிகள் எப்படியோ முதலீட்டாளர்களிடம் இருந்து மேலதிக நிதியை பெற்றுவிட்டன. (இ-3-5)

## 7 நாளில் ரத்த நாளங்களை வளர்த்து சுவீடன் விஞ்ஞானிகள் புதிய சாதனை

இரண்டு தேக்கரண்டி இரத்தத்தைக் கொண்டு 7 நாட்களில் இரத்தநாளம் வளரச் செய்து விஞ்ஞானிகள் சாதனை புரிந்துள்ளனர்.

இரைப்பை உணவுக் குழாயிலிருந்து கல்லீரலுக்குச செல்லும் இரத்த நாளம் ஒரு சிறுவனுக்கு வளர்ச்சியடையாமல் இருந்தது. அவனுக்கு இரத்தநாளத்தை வளர்க்க மேற்கொண்ட முயற்சி வெற்றி பெற்றுள்ளது.

சுவீடன், கோதன்பெர்க் பல்கலைக்கழகத்திலுள்ள சல்கி ரேன்ஸ்கா அகடமி பேராசிரியர் மைக்கேல் ஓலாவ்ஸன் தலைமையிலான விஞ்ஞானிகள் இச்சாதனையைச் செய்துள்ளனர். இக குழுவல் சுசித்ரா சுமித்ரன்என்ற இந்திய வம்சாவளி விஞ்ஞானியும் இடம்பெற்றுள்ளார்.

"நோயாளியின் ஸ்டெம் செல்களைப் பயன்படுத்தி, புதிய இரத்த நாளத்தை வளரச் செய்து இரு உறுப்புகளையும் முறையாக இணைந்து செயற்பட வைத்துள்ளோம் என விஞ்ஞானி மைக்கேல் ஓலாவ்ஸன் தெரிவித்துள்ளார்.

எலும்பு மஜ்ஜையைத் துளையிட்டு ஸ்டெம்செல்களை எடுப்பதற்கு மாற்றாக புதிய முறை கையாளப்பட்டுள்ளது. இம்முறையில் 25 மில்லி (சுமார் இரு தேக்கரண்டிகள்) இரத்தம் தேவையான ஸ்டெம்செல்களைப் பெறுவதற்கு போதுமானதாக இருந்தது.

மேலும், புதிய இரத்த நாளம் வளர்வதற்கு அந்த இரத்தம் வெகுவாக ஊக்குவித்தது. அனைத்து நடைமுறைகளும் ஒரே வாரத்தில் நிறைவு பெற்றன என சுசித்ரா சுமித்ரன் தெரிவித்துள்ளார். (இ)

## சிரியாவில் வான்வழித் தாக்குதலில் 31 பேர் பலி



சிரியாவின் மத்திய மாகாணத்தில் கிளர்ச்சி படையினர் கட்டுப்பாட்டில் உள்ள இடத்தில்சிரியாநேற்று முன்தினம் வான்வழித்தாக்குதல்நடத்தியது. இதில் 31 பேர் கொல்லப்பட்டனர். இதில் 13 குழந்தைகளும் அடங்குவர் ணமனித உரிமைகள் கண்காணிப்புக் குழு நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

## இந்தோனேஷிய கடற்பரப்பில் மலேசிய விமானப் பாகங்கள்

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் இருந்து சீனத் தலைநகர் பீஜிங்குக்கு 239 பேருடன் கடந்த மார்ச் 8 ஆம திகதி புறப்பட்ட மலேசிய ஏர்லைன்ஸ் விமானம் நடுவானில் மாயமானது. அந்த விமானம் அவுஸ்திரேலிய கடற்பரப்பில் விழுந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

கடந்த 6 மாதங்களாக நடைபெறும் தேடுதல் வேட்டையில் இதுவரை எவ்வித தடயமும் கிடைக்கவில்லை. இந்நிலையில் இந்தோனேஷியாவின் கடற்பரப்பில் விமான பாகங்கள் மிதப்பதாகவும் அதனை உள்ளூர் மீனவர்கள் கண்டெடுத்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்த தகவல்களை உறுதி செய்ய அவுஸ்திரேலிய கடற்படை வீரர்கள் சமபவபகுதிக்கு விரைந்துள்ளனர். (இ-3-5)

# பிரேசிலில் நடந்த மறு தேர்தலில் டில்மாரூசேப் அமோக வெற்றி

தென் அமெரிக்க நாடான பிரேசிலில் கடந்த 5 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடந்தது. அதில் யாருக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

எனவே நேற்று முன்தினம் மீண்டும் மறுதேர்தல் நடத்தப்பட்டது. அதில் முதல் 2 இடங்களை பிடித்த தற்போதைய ஜனாதிபதியும், தொழிலாளர் கட்சி தலைவருமான டில்மாரூசேப், பிரேசிலின் சோசியல்ஜனநாயக கட்சியை சேர்ந்த ஏசியோ நெவெஸ் ஆகியோர் போட்டியிட்டனர்.

காலை 8 மணிக்கு தொடங்கி மாலை 5 மணி வரை வாக்குப்பதிவு நடந்தது. அதைத் தொடர்ந்து வாக்குகள் எண்ணப்பட்டன. முடிவில் டில்மாரூசேப் அமோக வெற்றி பெற்றார்.

இவர் பெரும்பான்மைக்குத் தேவையான 51 சதவீதம் வாக்குகள் பெற்றார். இவரை



எதிர்த்து போட்டியிட்ட ஏசியோ நெவஸ்சுக்கு 48 சதவீதம் வாக்குகள் கிடைத்தன.

டில்மாரூசேப் வெற்றி பெற்றதை அறிந்ததும் அவரது கட்சி தொண்டர்களும், ஆதரவாளர்களும் தலைநகர் பிரசிலியாவில் வெற்றி கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர். டில்மாரூசேப்பும் தனது மகிழ்ச்சியை கொண்டாடினார்.


அப்போது பிரேசில் எதிர்காலம சிறப்பானதாக அமைய அனைத்து மக்களும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும். அரசியல் சீரமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

தனது 2 ஆவது முறை பதவிக் காலத்தில் நாட்டை மிக சிறப்பாக வழிநடத்தப் போவதாக உறுதி அளித்தார். கட்சி தலைவர் ஜயிஷ் இனாசியோ லுலாடா சில்வாவுக்கு தனது நன்றியை தெரிவித்தார்.

டில்மாரூசேப் கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதியாக பதவி வகித்து வருகிறார். தற்போது அவர் 2 ஆவது முறையாக வெற்றி பெற்றதன் மூலம் மீண்டும் ஆட்சிப் பொறுப்பைஏற்கிறார். (இ-3-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த அரசிடம் ரணில் நான்கு கேள்வி



## பதிலை உடனடியாக வழங்குமாறும் கோரிக்கை

**தமிழீழ விடுதலைப் புலிகளிடம் அமெரிக்காவில் இருக்கும் 300 பெற்றோல் நிலையங்கள், 20 கப்பல்கள் தொடர்பில் இதுவரை நடவடிக்கை எடுக்காதது ஏன்? என்பது உட்பட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திடம் எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.தே.கவின் தலைவருமான ரணில் விக்ரமசிங்க நான்கு கேள்விகளை எழுப்பியுள்ளார்.**

ஐ.நா. பொது சபை கூட்டத் தொடரிற்காக அமெரிக்கா சென்ற போது புலம்பெயர் தமிழர் அமைப்புக்களை சந்தித்தது யார்?

ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தின் விடுதலைப் புலிகள் தடை நீக்க வழக்கில் அரசு தலையிடாமைக்கான காரணம் என்ன?

இதன் பின்பாவது இவ்வழக்கில் அரசு தலையிடுமா ?

விடுதலைப் புலிகளிடம் அமெரிக்காவில் இருக்கும் 300 பெற்றோல் நிலையங்கள், 20 கப்பல்கள் தொடர்பில் இதுவரை நடவடிக்கை எடுக்காதது ஏன்? என்ற நான்கு கேள்விகளை அரசிடம் தொடுத்த எதிர்க்கட்சி தலைவர் இக் கேள்விக்கு உடனடியாக பதிலை அரசு தர வேண்டும் என்றும் கோரினார்.

கொழும்பு மாநகர முதல்வரின் வாசஸ்தலத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற மகளிர் அணியுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புலம்பெயர் அமைப்புக்களுடன் தான் பேச்சுவார்த்தை நடத்தியதாக பொய் பிரசாரங்களை அரசாங்கம் செய்து வருகிறது.

நான் இங்கிலாந்திற்கு விஜயம் செய்த போது ஐ.தே.க. வின் இலண்டன் கிளை பிரதி நிதிகளையே சந்தித்தேன். ஆனால் எனக்கு எதிராக உண்மைக்கு புறம்பான செய்திகளை ஆளும் தரப்பினர் செய்து வருகின்றனர்.

புலம்பெயர் தமிழர் அமைப்பினை தான் சந்திக்க விரும்பினாலும் என்னுடன் நட்புறவை வளர்க்க அவர்கள் விரும்பவில்லை. புலம்பெயர் தமிழர் அமைப்புக்களுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே ஒட்டி உறவாடி வருகின்றார்.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது விடுதலை புலிகளுடன் ஒப்பந்தம் செய்து என்னை தோற்கடிக்க முயற்சித்த போது தமிழ் தேசிய கூட்டமைப்பு அதற்கு உடன்படவில்லை. இந்நிலையிலேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புலம் பெயர் தமிழர் அமைப்பின் உதவியை நாடி ஜனாதிபதி தேர்தலில் என்னை தோற்கடித்தார்.

இதேவேளை ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் விடுதலை புலிகள் மீதான தடை நீக்க வழக்கில் அரச தரப்பிலிருந்து எவரும் கலந்து கொள்ளவில்லை. அதற்கான காரணம் என்ன? எனவே இந்த வழக்கில் இன்னும் 3 மாதங்களில் மேன்முறையீடு செய்யாவிடின் விடுதலை புலிகளின் அமைப்பினுடைய பணங்கள் கே.பி.யினுடைய கணக்கிற்கு வந்து விடும்.

எனவே விடுதலை புலிகளின் உடைமைகளை பங்கு கொள்ளும் நோக்குடனா இந்த வழக்கில் அரசு தலையிடவில்லை.

இந்நிலையில் விடுதலை புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட 20 கப்பல்களில் 18 இந்தோனேஷியாவில் இருப்பதாக தெரிய வருகிறது. அவ்வாறாயின் ஏன் இவற்றை இலங்கை அரசினால் பெற முடியவில்லை என அவர் மேலும் கேள்விகளைத் தொடுத்தார். (இ)

# வாக்குகளை எதிர்பார்த்து வழங்கப்பட்ட இலஞ்ச திட்டமே வரவு செலவுத் திட்டம்

## ஜே.வி.பி.கிண்டல்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலின் போது முழு நாட்டுக்கும் பணம் விநியோகிக்கப்படும் என்று வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன. இது வரவு-செலவுத் திட்டம் அல்ல, வாக்குகளை எதிர்ப் பார்த்து வழங்கப்பட்ட இலஞ்ச திட்டமாகும் என்று மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) தெரிவித்துள்ளது.

முன்னணியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே முன்னணியின் பிரசார செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத், மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை கட்டியெழுப்பு வ த ற்கான எந்தவொரு வேலைத்திட்டமும் இல்லாமல் கடன் மலையை பெறுவதற்காக ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறும் நோக்கோடு சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளை மாத்திரம் கொண்டிருக்கும் ஜில்மாட்ட நடவடிக்கையாகும்.

எதிர்கால நோக்கின்றி இலக்கங்களால் மெழுகி பூசப்பட்டிருக்கும் வாக்குறுதிகள் அடங்கிய பொதியில் எவ்விதமான பிரயோசனமும் இல்லை என்றும் அவர் கூறினார்.

இலஞ்சம் கொடுத்து நடத்தப்படுகின்ற ஜனாதிபதித் தேர்தல் சட்டவிரோதமானது. அதேபோல, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையாகவும் போட்டியிட முடியாது. இறுதி வியாக்கியானத்தின் பிரகாரம் போட்டியும் சட்டவிரோதமானது போட்டியாளரும் சட்டவிரோதமானவர் என்றும் அவர் தெரிவித்தார்.

சட்டவிரோதமான ஜனாதிபதி தேர்தலை நடத்தவேண்டாம் என்பதே மக்கள் விடுதலை முன்னணியின் நிலைபாடாகும்.

நாட்டின் அடிப்படைச்சட்டத்தை எப்படியாவது எட்டி உதைத்து மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலை நடத்துவ ராயின் அவரை தோல்வியடைய செய்வதற்கு ஆகக்கூடிய தலையீடு களை மேற்கொள்வோம்.

சட்டவி ரோதமான வேட்பாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கையையும் எடுப் போம் என்றும் அவர தெரிவித்தார். (இ-3-5)

# இன்று ஒரு தகவல்

## பரதன்...

"என்னை யாரும் சரியாக புரிந்துகொள்கிறார்களில்லை சார்!'' என்றார் ஒருவர். ''இராமாயணத்தில் வரும் பரதனையே யாரும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையே" என்றேன்.

"என்ன சார் திடீரென்று இராமாயணத்துக்குப் போய் விட்டீர்கள்'' என்றார். இதோ பாருங்கள்! என்று எனக்கு வாசகர் ஒருவர் எழுதிய கடிதத்தை அவரிடம் காட்டினேன். அதில் இதைப்பற்றி அவர் எழுதியிருந்தார். நல்லதையே நினைத்து நல்லதையே செய்தால் கூட சந்தர்ப்ப சூழ்நிலைகள் கெட்ட பெயரை வாங்கிக் கொடுத்துவிடும். இராமாயணத்திலேயே ஒரு சிறந்த கதாபாத்திரம் - பரதன். அப்படிப்பட்ட பரதனை அவனுக்கு நெருக்கமாக இருந்தவர்களே சரியாகப் புரிந்து கொள்ளவில்லை.

ஏன், பெற்றதாயே சரியாகப் புரிந்துகொள்ளவில்லை! புரிந்து கொண்டிருந்தால் என் மகனுக்கே பட்டம் சூட்ட வேண்டும் என்று தன் கணவனிடம் கேட்டிருப்பாரா?

இது தன் பிள்ளைக்கு பிடிக்காது என்பது அந்தத் தாயாருக்குத் தெரியவில்லை! எல்லாவற்றையும் கேள்விப்பட்டு அவன் வந்து திட்டும் போதுதான் அவன் எப்படிப் பட்டவன் என்பது அவருக்குப் புரிகிறது! சரி... அப்பாவாவது அவனைச் சரியாகப் புரிந்துகொண்டாரா?

அதுவும் இல்லை!

அண்ணன் இருக்கும் போது தம்பி அரசாள விரும்புவானா என்ற விடயம் அவருக்குத் தெரியவில்லையே! தெரிந்திருந்தால் வரம் கேட்ட மனைவியிடம் "நீ எனக்கு மனைவியில்லை'' என்று சொன்னதோடு நிறுத்தாமல் ''உன்மகன் பரதன் எனக்கு மகனல்ல!'' என்று வேறு சொல்லிவிட்டாரே!

சரி... அமைச்சர்களாவது அவனைச் சரியாகப் புரிந்துகொண்டார்களா? அதுவுமில்லை! தந்தையின் மறைவு அவனுக்குத் தெரிவிக்கப்படவில்லை! மாமன் வீட்டிலிருந்து தற்செயலாக ஊருக்குத் திரும்பி வரும் போது அவரிடம் என்ன.. முடிசூட்டுவிழா ஏற்பாட்டைச் செய்யலாமா? என்று கேட்கிறார்கள்.

பரதனை குகன் கூட சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. இவன் தாயை வெறுத்து கோபமாகப் பேசிவிட்டு மரவுரி தரித்து அண்ணனைப் பார்ப்பதற்காக காட்டுக்கு வரும் போது அவனைத் தவறாகப் புரிந்துகொண்டு அவனோடு சண்டையிடத் தயாரானான். இராமன், இலட்சுமணனாவது பரதனைச் சரியாகப் புரிந்து கொண்டார்களா?

பரதனைக்கண்ட இலட்சுமணன் கோபப்படுகிறான். இராமர் அவனைச் சாந்தப்படுத்தி பரதனைக் கூப்பிட்டு, "தம்பி... அரசாட்சி உனக்குச் சுகம் தருகிறதா?'' என்று கேட்கிறார். அவனைப் புரிந்துகொண்டிருந்தால் அப்படிக் கேட்டிருப்பாரா? இப்படிப் பலராலும் புரிந்துகொள்ள முடியாமல் போன பரிதாபத்துக்குரிய குணச்சித்திரம் தான் பரதன்.

ஆனால் பரதனைப் புரிந்துகொண்ட சிலரும் இராமாயணத்தில் உண்டு. பரதனைக் கண்ட குகன் யுத்தத்துக்குத் தயாராகும் போது, வேடர்களையெல்லாம் போருக்கு வருமாறு அழைக்கிறான். அவர்களெல்லாம் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு மௌனமாக இருக்கிறார்கள். குகனுக்கு கோபம் வந்தது. "ஏன் இப்படி நிற்கிறீர்கள்?'' என்று கேட்கிறான். அதற்கு அவர்கள்,

"தலைவா! பரதனைப் பார்த்தால் சண்டைக்கு வருபவன் மாதிரித் தெரியவில்லையே! இவனும் இராமன் மாதிரி மரவுரி தரித்து தவக்கோலத்தில் அல்லவா வருகிறான்... இவன் எப்படி இராமனுக்கு எதிரியாக இருக்க முடியும்?'' என்கிறார்கள்.

விடயம் தெரிந்தவர்களாலேயே சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அந்தப் பாமர மனிதர்களான வேடர்கள் ஒரு பார்வையிலேயே புரிந்துகொண்டார்கள் பார்த்தீர்களா! என்று என்னிடத்தில் வந்து பேசிக்கொண்டிருந்தவரிடம் சொன்னேன். அவர் ''சார்... இப்ப நீங்கதான் என்னை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை!'' என்றார். "என்ன சொல்கிறீர்கள்?'' என்றேன்.


"இவ்வளவு விபரமும் உங்களுக்கு எழுதி அனுப்பிய வாசகரே நான்தான் சார்... என்னிடமே கதை அளக்கிறீர்களே!'' என்கிறார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பூங்காவில் குரங்குகள்!



...பயந்துபோன சில குரங்குகள் சீறிவிட்டு மரத்தின்மீது ஏறி உட்கார்ந்தன. தைரியமிக்க சில குரங்குகள் எகிறிப் போய்ச் சிறுமியின் கையிலிருக்கும் பையைப் பிடுங்க முயற்சி செய்து சத்தமிட்டன.

சிறுமியோ பையை விடாமல் இறுக்கமாகப் பிடித்துக்கொண்டு அழுது கொண்டிருந்தாள். அவளைச் சற்றும் நகரவிடாமல் செய்தன அந்தக் குரங்குகள்.

இன்னும் கொஞ்சம் தாமதித்தாலும் குரங்குகள் அந்தச் சிறுமியைக் கடித்துக் குதறிவிடும் போல் இருந்தது. என்ன செய்வதென்று புரியாமலும் அருகில் செல்லவும் பயந்தும் கூட்டத்தினர் ஆளாளுக்கொரு விமர்சனம் செய்துகொண்டு அங்கேயே நின்றனர்.

குரங்குகளின் அட்டகாசத்தைக் குறைக்கும் பொருட்டு போடப்பட்டிருந்த கம்பி வேலிவேறு அவர்களை அருகில் செல்ல முடியாமல் தடுத்தது. சுரேஷ் மிகவும் தவித்தான்.

எப்படியும் அந்தச் சிறுமியைக் காப்பாற்றியே தீர வேண்டும் என்ற முடிவோடு பக்கத்தில் நின்றிருந்த ஒருவரிடம் இருந்து நீண்ட குச்சியை வாங்கினான்.

மெல்ல நகர்ந்து சிறுமிக்கு அருகில் நின்ற குரங்கை விரட்டப்போனான். அது சீறிக் கொண்டு அவன் மீது பாய்ந்தது. சற்றே நகர்ந்து தப்பித்தான்.

சட்டென அவன் கண்ணில் தோட்ட வேலை செய்யும் பெண்ணொருத்தி கையில் வைத்திருந்த வெற்றிலைப் பைபட்டது. உடனே அதைப்பிடுங்கிக் குரங்குகள் இருந்த இடத்தில் வீசினான். அவ்வளவுதான். குரங்குகள் அத்தனையும் அந்தப் பை விழுந்த இடத்துக்குத் தாவின. சிறுமி தனித்து விடப்பட்டாள். கண் இமைக்கும் நேரத்தில் வேலிக்குள் குதித்து, அந்தச் சிறுமியைக் கையைப் பிடித்து இழுத்தான். அவள் நகருவதற்குள் இரண்டு குரங்குகள் அவனை நோக்கிப் பாய முற்பட்டன.

என்னவோ இன்றோடு நம் கதை முடியப்போகிறது என்ற எண்ணத்தோடு அசையாமல் அப்படியே நின்ற சுரேஷ் திடீரென அந்தச் சிறுமியின் கையிலிருந்த பையைப்பிடுங்கிக் கீழே எறிந்தான்.

குரங்குகள் வேகமாக அந்தப் பையின் மீது தாவின. சிறுமி துடித்துப் போனாள். கதறினாளே தவிர எதுவும் பேசவில்லை. அவளது அழுகை சுரேஷையும் அழச் செய்தது.

மன்னித்துவிடு தங்கையே, உன்னைக் காப்பாற்ற வேறு வழியில்லை என்று சொல்லிக் கொண்டே மெதுவாக அவளை வெளியே அழைத்து வந்து பெரியவர்களிடம் ஒப்படைத்தான்.

அவள் யார், எங்கிருந்து வந்தாள், ஏன் வந்தாள் என்ற விபரங்களைக் கேட்டவர்களுக்கு அவள் ஒன்றுமே பதில் சொல்லவில்லை. கண்களில் மிரட்சி, பையை மட்டும் காட்டிக் காட்டி அழுதாள். உதடுகள் மட்டும் துடித்தன.

பயத்தில் பேச முடியவில்லை என்று சொல்லி கூட்டத்திலிருந்த பெண்கள் அவளை அணைத்தபடி ஓரமாக அழைத்துச் சென்று உட்கார வைத்துத் தண்ணீர் கொடுத்தனர். அதற்குள் ஒருவர் பட்டாசுகளுடன் வந்து சேர்ந்தார். தாமதிக்காமல் தீ வைத்துப் பட்டாசுகளை வெடிக்கச் செய்தார். அவ்வளவுதான். குரங்குகள் திசை தெரியாமல் பஞ்சாய்ப் பறந்து மறைந்தன. சுரேஷ் வேகமாகப்போய், அவளது பையிலிருந்து குரங்குகள் கீழே எடுத்தெறிந்த பொருட்களை எல்லாம் எடுத்து மீண்டும் பைக்குள் வைத்தான். ஒரு புத்தகம், ஒரு நோட்டு, உடைந்து போன சீப்பு, ஒரு ஜாமெட்ரி பாக்ஸ், அதில் சில சில்லறைகள், ஒரு லேமினேஷன் செய்யப்பட்ட அட்டை ஒரு கயிறு, கழுத்தில் அணியும் மணி என சின்னச் சின்னப் பொருட்கள். தின்பண்டங்கள் எதுவுமே இல்லை. பிறகு ஏன் குரங்குகள் இவ்வளவு அட்டகாசம் செய்தன என்று அவனுக்குப் புரியவில்லை. லேமினேஷன் செய்யப்பட்டிருந்த அட்டையில் ஏதோ எழுதியிருந்தது. சுரேஷ் மெல்ல அந்த அட்டையை மட்டும் எடுத்துப் படித்துப் பார்த்தான். அவனது கண்கள் குளமாயின. இந்த அட்டையை எடுத்துவரும் சு.செல்வி ஒரு பிறவி ஊமை. பெற்றோரை இழந்து இவளுக்கு உங்களால் முடிந்த உதவியைச் செய்யவும் இதைப் படித்தவுடன் சுரேஷ் உதடுகள் துடிக்க அந்தச் சிறுமியைப் பார்த்தான். திமிர் பிடித்தவள் ஒரு வார்த்தையாவது பேசுகிறாளா பார் என்று சொன்னவர்களை நிமிர்ந்து பார்த்து அந்த அட்டையைக் காட்டினான்.

அதற்குள் அந்தச் சிறுமி எழுந்து வந்து அவனிடமிருந்த பையை வாங்கிக் கொண்டு இரு கைகளையும் கூப்பி வணங்கிக் கண்களால் நன்றி சொன்னாள். தன் சட்டைப் பையில் வைத்திருந்த சில்லறைகளை எடுத்து அவளது பையில் போட்டான். கூட்டத்தினர் சுரேஷின் தைரியத்தையும், உதவிசெய்ய வேண்டுமென்ற நல்ல உள்ளத்தையும் பாராட்டினர். அப்போது, அங்கே... பூங்காவின் பொறுப்பு அதிகாரி வந்து சேர்ந்தார்.

கூட்டத்தினர் சிறுமியை அவரிடம் ஒப்படைத்தனர். நடந்ததைக் கூறினர். சம்பவம் முழுவதையும் கேட்டறிந்த அதிகாரி, சுரேஷைப் பாராட்டினார். அவரிடம் விடைபெற்ற சுரேஷ் மனநிறைவோடு தான் புத்தகத்தை விட்டு வந்த இடம் நோக்கி நடந்தான். விரைவில் இந்தக் குரங்குகளின் அட்டகாசத்துக்கு ஒரு முடிபு எடுத்துவிட வேண்டுமென்று சொல்லிக் கொண்டே அதிகாரி அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு தன் அலுவலகம் நோக்கி நடந்தார்.

(முற்றும்)

## 10.2014 28 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 306 - மாக்சென்டியஸ் உரோமப் பேரரசன் ஆனான்.
- 312 - முதலாம் கொன்ஸ்டண்டீன் மாக்செண்டியசைத் தோற்கடித்து உரோமப் பேரரசனானான்.
- 1492 - ஸ்பெயின் நாட்டுக் கடலோடியான கொலம்பஸும் அவரது கூட்டத்தினரும் வழி தவறிச் சென்று கியூபாவில் கரை இறங்கினர்.
- 1775 - அமெரிக்கப் புரட்சிப் போர்: பொஸ்டனிலிருந்து பொதுமக்கள் வெளியேறுவதை பிரித்தானியா தடுத்தது.
- 1886 - நியூயோர்க்கில் அமெரிக்க அதிபர் குரோவர் கிளீவ்லாண்ட் விடுதலைச் சிலையைத் திறந்து வைத்தார்.
- 1918 - மேற்கு கலீசியாவில் புதிய போலந்து அரசு அமைககப்பட்டது.
- 1922 - முசோலினி தலைமையில் இத்தாலிய பாசிஸ்டுகள் உரோம் நகரை சென்றடைந்து இத்தாலிய அரசைக் கைப்பற்றினர்.
- 1942 - கனடா முதல் அலாஸ்கா வரையான அலாஸ்கா நெடுஞ்சாலை அமைக்கப்பட்டது.
- 1942 - போலந்தின் கிராக்கொவ் நகரிலிருந்து 2,000 யூத சிறுவர்களும் 6,000 பெரியவர்களும் நாசிகளினால் வதைமுகாமுக்கு அனுப்பப்பட்டனர்.
- 1948 - சுவிட்சர்லாந்து இயற்பியலாளர் போல் முல்லர் டிடிரியைக் கண்டுபிடித்தமைக்காக நோபல் பரிசு பெற்றார்.
- 1962 - கியூபாவிலிருந்து சோவியத் ஏவுகணைகளை அகற்றுவதாக சோவியத் தலைவர் நிக்கிட்டா குருஷேவ் அறிவித்தார்.
- 1971 - ஐக்கிய இராச்சியம் தனது முதலாவது (2007 வரை ஒன்றே ஒன்றுமான) "புரொஸ்பெரோ" என்ற செய்மதியை விண்ணுக்கு ஏவியது..
- 1972 - முதலாவது ஏர்பஸ் A300 பறக்க விடப்பட்டது.
- 1985 - சண்டினீஸ்டாவின் டானியேல் ஒர்ட்டேகா நிக்கராகுவாவின் அதிபரானார்.
- 1985 - மிக்கைல் கொர்பச்சோவ் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஆனார்.
- 2001 - கேரளாவில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக நாகர்கோயில் பகுதியில் இலேசான நில அதிர்வு ஏற்பட்டது.

### பிறப்புகள்

- 1955 - பில் கேட்ஸ், மைக்ரோசாப்ட் நிறுவனர், கணிப்பொறி மென்பொருள் வல்லுனர்
- 1956 - மஹ்மூத் அஹ்மதிநெஜாத், ஈரான் குடியரசுத் தலைவர்

### இறப்புகள்

- 1627 - ஜஹாங்கீர், இந்தியாவின் முகலாயப் பேரரசின் மன்னன் (பி. 1569)
- 1704 - ஜான் லாக், ஆங்கிலேய தத்துவவியலாளர் (பி. 1632)
- 1900 - மாக்ஸ் முல்லர் ஜேர்மனிய மொழியியலாளர் (பி. 1823)
- 1997 - [illegible] இசை வீணை வாத்தியக்கலைஞர் (பி: 1920)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்

107

அசார் ஆடக்கூடாது என்று ஏன் சச்சின் அவ்வளவு உறுதியாக இருந்தார் என்ற உண்மையும் நாட்டு மக்களுக்குப் புரிந்தது.

இதற்கு இடையே மனோஜ் பிரபாகருக்கும் அணியின் பயிற்சியாளர் கபில்தேவிற்கும் இடையே மனக்கசப்பு ஏற்பட கபில்தேவ் செய்தியாளர் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து மனோஜ் பிரபாகர் மீது சில குற்றச்சாட்டுக்களைக்கூறினார். இதற்குப் பதிலடியாக மனோஜ் மற்றொரு பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தி அதில் 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய- இலங்கை போட்டியில் இலங்கை வெற்றி பெற உதவுமாறும், அதற்கு லஞ்சமாகக் கணிசமான தொகையைத் தனக்கு தருவதாகவும் கூறினார் என்று நம்ப முடியாத பழியை கபில்தேவ் மீது சுமத்தினார். பாவம் கபில்தேவ், நொந்தே போய்விட்டார். பிபிசியின் கரண் தாபர் கிடுக்கிப்பிடி போடுவதில் வல்லவர். கபில்தேவுடன் அவர் நடத்திய

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

தனது நாட்டிற்காக விளையாடவும் காசு வாங்கிக்கொண்டு, அதே சமயம் அந்நிய நாட்டுக்காரன் ஜெயிக்க அவனிடமும் காசு வாங்கிக் கொண்டு விளையாட்டுக்கும் விசுவாசம் இல்லாமல் சொந்த நாட்டுக்கும் விசுவாசம் இல்லாமல் நாலாந்தர சூதாடியாக மாறிய அசாருதீன் கிரிக்கெட் வாழ்க்கை படுகேவலமாக முடிபிற்கு வந்தது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## மேட்ச் பிக்சிங் சச்சின் குற்றச்சாட்டு உண்மையானது!



இந்தப் பிரச்சினை குறித்த பேட்டியில் கபில்தேவ் குழந்தைபோல் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்துவிட்டார். பார்த்தவர்கள் அனைவருமே கபில்தேவ் மீது மனோஜ்பிரபாகர் ஏன் இப்படிப்பட்ட அபாண்டத்தைச் சுமத்த வேண்டும் என்று குழம்பினர்.

இந்தியா, பாகிஸ்தான் மற்றும் இலங்கை நாடுகளுக்கு இடையே டாக்காவில் நடைபெற்ற பெப்சி கோப்பை போட்டியில் பங்களாதேஷுடனான போட்டியில் மட்டுமே இந்தியா வென்றது. பெப்சி கோப்பையை இந்தியா இழந்தது. சச்சின் அடித்த 93 ரன்கள் பயனின்றிப் போனது. அடுத்த நைரோபியில் மினி உலகக்கோப்பைப் போட்டிகள் நடைபெற்றன. இறுதிப்போட்டிவரை வந்த இந்திய அணி கோப்பையை வெல்ல முடியாமல் திரும்பியது. அடுத்த ஷார்ஜாவில் இந்தியா, இலங்கை, ஜிம்பாப்வே நாடுகளுக்கு இடையேயான கோக்க கோலா முத்தரப்புப் போட்டிகள் நடைபெற்றன. இலங்கைக்கு எதிரான போட்டியில் சச்சின் தனது இருபத்தி ஆறாவது செஞ்சுரியை அடித்தார்.

மேட்ச் ஃபிக்சிங் விசாரணை தொடங்கியதும் சி.பி.ஐ. எல்லோரையும் விசாரிக்கக் கடமைப்பட்ட அமைப்பு என்பதால் சச்சினையும் அழைத்து விசாரித்தது. மேட்ச் ஃபிக்சிங் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. மேலும் என்னிடம் வந்து பேரம் பேசும் துணிவும் எவருக்கும் இருக்காது. விளையாடுவதற்காக எனக்கு கிரிக்கெட் வாரியம் ஏகப்பட்ட பணம் தருகிறது. அதுமட்டும் இன்றி விளம்பர நிறுவனங்களில் இருந்தும் பணம் கோடிக்கணக்கில் சம்பாதிக்கிறேன். எனவே, மேட்ச் ஃபிக்சிங் மூலம் பணம் சம்பாதிக்க வேண்டிய கட்டாயம் எனக்கு இல்லை. அப்படியே யாராவது என்னை அணுகினால்; அடுத்த வினாடி அவர் ஜெயிலில் இருப்பார் என்று உணர்ச்சிவசப்பட்டவராக சற்று காட்டமாகவே பதிலளித்தார். இதற்கு இடையே ஒரு பத்திரிகை முதல் பக்கத்தில் ஒரு புரோக்கர் மேட்ச் ஃபிக்சிங் செய்ய எனக்கு ரூ 40 லட்சம் கொடுக்க முன்வந்தார் என்று ஒரு கட்டுரை வெளியானது. இதில் எனக்கு என்பது சச்சினை பேட்டி கண்ட நிருபரைத்தான் குறிக்கும். ஆனால், எனக்கு என்றதை எல்லோரும் சச்சின் என்று தவறாகப் புரிந்து கொண்டு அந்த புரோக்கர் யார் என்று கேள்விக் கணைகளால் சச்சினைத் துளைத்து எடுத்தனர். கிரிக்கெட் உலகின் முக்கிய வி.ஐ.பி. விளையாட்டு வீரர்களை அறிமுகம் செய்து வைக்கக் கட்டுரையை எழுதிய நிருபருக்கு ரூ 40 லட்சம் வழங்க ஒரு புக்கி தயாராக இருந்தார் என்ற செய்தியை அனைவரும் தவறாகப் புரிந்து கொண்டனர். அந்த நிருபர் பின்னர் கிரிக்கெட் வாரியத்திற்கு கடிதம் எழுதி எனக்கு என்று நான் குறிப்பிட்டது நிருபராகிய என்னைத் தானே தவிர சச்சினை அல்ல. சச்சின் அப்பாவி. அவரைப்போல் கிரிக்கெட் விளையாட்டிற்காக தன் வாழ்க்கையையே அர்ப்பணித்தவர் எவரும் இல்லை.

**கே. ரமேஷ்** (தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

முதற்படியாக இதைப் பற்றி உங்களின் உள் ஆழத்தில் குறைந்தபட்சம் விழிப்புடன் இருங்கள்; பிறகு அது தானாகவே நிகழும். விழிப்புணர்வே எந்தப் பூட்டையும் திறக்கும் திறவுகோலாகும்.

புரிந்து கொள்ளுங்கள், நாம- ரூபங்களுக்கு அப்பாற்பட்டு நீங்கள் அன்பு செலுத்தும்போது நீங்கள் எதையும் இழக்கவில்லை. நீங்கள்

## கவனத்தேவையை விட்டுவிடுதல்

எது இல்லையோ- உங்களைப் பற்றிய தவறான கற்பனைகள்- அதைத் தான் இழக்கிறீர்கள். அது இழக்க வேண்டியதுதான். ஆனால், நீங்கள் சம்பாதித்தது உண்மைத் தன்மையை; அதனால் விசுவாசமாயிருங்கள். முழுமையில் கலக்க நேரும் பொழுது பயப்படாதீர்கள்.

முழுமையுடன் கலக்கும் சந்தர்ப்பத்தை ஒரு போதும் தவிர்த்துவிடாதீர்கள். வெறுமனே (எது நடந்தாலும் சரி என்று) விட்டுவிடுங்கள்; உள்ளே நிகழும் மாற்றத்தைக் கவனியுங்கள். பிறகு எவ்வளவு முட்டாள்தனமாக அஹங்காரத்தின் வழிகளைப் பிடித்துக் கொண்டிருந்தோம் என்று உணர்வீர்கள்;

அஹங்காரத்தின் முகத் திரைக்குப் பின்னால் இருந்ததால் எவ்வளவு விடயங்களைத் தவறவிட்டிருக்கிறோம் என்பதை உணர்வீர்கள்.

உண்மையான அன்பு கணக்குப் பார்க்காது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். மூளை கணக்குப் பார்க்கும் இதயம் பார்க்காது. நீங்கள் மூளையிலிருந்து இதயத்திற்குச் செல்லும் காலம்



வந்துவிட்டது. நீங்கள்; இதுவரை மூளை சொல்வதை நிறையக் கேட்டுவிட்டீர்கள். இனிமேலாவது இதயம் [illegible] சொல்வதைக் [illegible] பின்னர் வருத்தப்பட நேராது. இதயத்துடன் வாழும் பொழுது எதற்காகவும் வாழ்க்கையில் வருத்தப்பட நேராது. ஏனெனில் நீங்கள் பரிபூரணமாகவும் முழுமையாகவும் வாழ்வீர்கள்.

மூளையுடன் உங்களால் உண்மையான அன்பை ஒருபோதும் அனுபவிக்க முடியாது. அதை இதயத்தால் மட்டுமே அனுபவிக்க முடியும். அன்பை உங்கள் இருப்புத் தன்மையின் மையத்திலிருந்தே அனுபவிக்க முடியும். உங்கள் இருப்புத் தன்மையின் மையமானது முழுமையான அமைதியில் இருக்கிறது; அதற்கு எந்தவிதமான வார்த்தைகளோ அல்லது எண்ணங்களோ தெரியாது. எண்ணத்தால் அதை ஒரு போதும் ஊடுருவிச் செல்ல முடியாது. அதற்கு அன்பைத் தவிர வேறு எந்த மொழியும் தெரியாது. அதனால்தான் காலங்காலமாக குருமார்கள் உங்களை

**ஆன்மீகம் 57**

நீங்களே கண்டுபிடிக்க, உங்களுக்குள் ஆழமாகச் செல்லுங்கள் என்று சொல்கிறார்கள். இந்த மையம்தான் உங்களுடைய உண்மையான இயல்பு; உண்மையில் இதுதான் நீங்கள். ஆனால் நீங்கள் உங்களை எல்லாவிதமான இடங்களிலும் உறவுகளிலும் மனிதர்களிலும் தேடிக்கொண்டு இருக்கிறீர்கள். நீங்கள் தொடர்ந்து தவறவிட்டுக் கொண்டே இருக்கிறீர்கள். நீங்கள் உள்ளே பார்க்கும் காலம் வந்துவிட்டது; வெளியே தேடுவதை நிறுத்தும் காலமும் வந்துவிட்டது. நீங்கள் உங்களை போதுமான அளவு ஏமாற்றிக்கொண்டுவிட்டீர்கள். முன்னேறிச் செல்லுங்கள்.

(தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாளித்துவத்துக்கு எதிரான போரில் பொலிவியாவைப் பின்பற்றுமா உலகம்?



லத்தீன் அமெரிக்க நாடான பொலிவியாவில் சென்ற வாரம் நடந்த அதிபர் தேர்தலில் ஈவோ மொராலிஸ் 60% வாக்குகள் பெற்று மூன்றாம் முறையாக அமோக வெற்றி பெற்றிருக் கிறார்.

ஈவோ மொராலிஸ் பொலிவியாவின் பெரும்பான்மையான ஆனால், காலங்காலமாக ஒடுக்கப்பட்ட பழங்குடியின மக்களிலிருந்து தோன்றிய முதல் அதிபர்.

பலகாலமாக அமெரிக்க ஏகாதிபத்யமும் பெருநிறுவன அசுரர்களும் பொலிவியாவைக் கொடிய சுரண்டலுக்கு உள்ளாக்கி, தங்கள் கைப்பாவை அரசுகள் மூலம் நாட்டை ஆண்டு கொண்டிருந்தனர்.

அந்த சகாப்தத்தை 2005 இல் முடிவுக்குக் கொண்டுவந்து, பெரும் மக்கள் ஆதரவுடன் மொராலிஸும், அவர் தலைமையிலான சோஷலிஸத்தை நோக்கிய இயக்கமும் வெற்றி கண்டன.

முந்தைய இருண்ட சகாப்தத்தில் பொவிலிய மக்கள் கொடும் இழப்புகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் உள்ளானார்கள்.

அனைத்து வளங்களும் பெரும் முதலாளிகளுக்குத் தாரைவார்க்கப்பட்டன. நவதாராளமயம் (நியோ லிபரலிஸம்) தலைவிரித் தாடியது.

சந்தையின் மகிமை தாரக மந்திரமாக ஓதப்பட்டது. தண்ணீர் முதற்கொண்டு அனைத்தும் தனியார்மயமாக்கப்பட்டன. ஏழ்மையும் கொள்ளையும் எல்லை மீறியபோது, மக்கள் இயக்கங்கள் வெடித்துக் கிளம்பின. தண்ணீருக்கான போராட்டம், எரிவாயுவைக் காப்பதற்கான போராட்டம் என்று நாடு கொதித்தது. அந்தக் கொந்தளிப்பின் குழந்தையாக, அதன் தலைவராக மொராலிஸ் எழுந்தார்.

2009 ஆம் ஆண்டு புதிய அரசியல் சாசனம் பிரகடனப்படுத்தப்பட்டது. அதில் இந்தியாவையும் மற்ற பல நாடுகளையும் ஆட்டிப்படைக்கும் சித்தாந்தமான நவதாராளமயம் கடுமையாக எதிர்க்கப்பட்டு, பொருளாதார நிர்வாகத்தில் அரசுக்குத் தலைமை ஸ்தானம் அளிக்கப்பட்டது. சமூக, பொருளாதாரச் சீர்திருத்தங்கள் வலியுறுத்தப்பட்டன. ஏழ்மை ஒழிப்புக்கான திட்டங்கள் முன்னுரிமை பெற்றன.

### மக்களுக்காகத்தான் நாடு

கடும் ஏழ்மையிலும் எழுத்தறிவின்மையிலும் ஆழ்ந்து கிடந்த நாடு பொலிவியா. கடந்த ஒன்பது ஆண்டுகளில் ஏழ்மை ஒழிப்பை முன்னிறுத்தி, வியத்தகு வளர்ச்சியையும் அனைத்து மக்களும் நலனடையும் வகையிலான ஜனநாயகத்தையும் நிறுவி அந்த நாடு வெற்றி கண்டிருக்கிறது.

சோஷலிஸத்தை நோக்கித் திரும்பிய புதிய எழுச்சிப் பாதையினால் தான் இந்த வரலாற்றுச் சாதனை சாத்தியமாயிற்று.

மொராலிஸின் ஆட்சியில் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு 2006 இல் இருந்ததைவிட, 2012 இல் இருமடங்காக அதிகரித்திருக்கிறது. அதனினும் மகத்தானது ஏழ்மை ஒழிப்பில் அதன் சாதனை. ஏற்றத்தாழ்வுகளும் குறைந்து வருகின்றன. சமுதாய ஏணியின் உச்சியில் இருந்த 20 சதவீதத்தினரின் கையில் இருந்த தேச வருமானம் குறைந்து, கீழ்த்தட்டில் உள்ள 20 சதவீதத்தினரின் பங்கு அதிகரித்திருக்கிறது. மிகுந்த ஏழ்மையில் வாடிய மக்களுக்கு நாட்டின் செல்வத்தின் கணிசமான பகுதியை மாற்றி அளிப்பதில் பொலிவியா வெற்றி கண்டிருக்கிறது என்று ஐ.நா. சபையின் வளர்ச்சி அமைப்பு பாராட்டுகிறது.

பணவீக்கம் பெருமளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு, லத்தீன் அமெரிக்காவிலேயே குறைந்த பணவீக்கம் உடைய நாடாக பொலிவியா மாறியிருக்கிறது.

இந்தப் பொருளாதார வளர்ச்சியின் முதல் ஆயுதமாக அமைந்தது அரசுடைமையாக்கும் கொள்கை. பொலிவியாவின் பெரும் வளமான இயற்கை எரிவாயு அதற்கு முன் அமெரிக்க உள்ளூர் பெருமுதலாளிகளின் வசம் இருந்தது. அது 2006 இலிருந்து படிப்படியாக அரசுடமையாக்கப்பட்டது. விளைவு: உற்பத்தி இருமடங்குக்கும் அதிகமாயிற்று. தொடர்ந்து இத்தாலிய முதலாளிகளின் கையிலிருந்த தொலைத் தொடர்பு சாதனத் தொழில் தகரம், துத்தநாகம் போன்றவற்றின் உற்பத்தி அனைத்து அரசுடைமைக்கப்பட்டன.

### ஏற்றம் பெறும் வாழ்க்கை

அத்துடன், அடித்தட்டு மக்கள் அனைவரும் பயனடையும் பிரம்மாண்டமான நலத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. குறிப்பாக, கர்ப்பிணிப் பெண்களின் மருத்துவ வசதிக்கும், பிரசவத்துக்குப் பின் தாய்- சேய் இருவர் நலனுக்குமான பண உதவி வழங்கியது; கல்விக்கான பெரும் நிதி ஒதுக்கீடு செய்தது; தோழமை நாடுகளான கியூபா, வெனிசுலாவின் உதவியுடன், அனைத்துக் குழந்தைகளும் தரமான கல்வி பெறும் திட்டங்கள் உருவாக்கியது; 60 வயதுக்கு மேற்பட்டோருக்குக் கண்ணியமான ஓய்வூதியம் வழங்கியது ஆகியவை பெரும்பாலான மக்களின் வாழ்க்கையில் மறக்க முடியாத முன்னேற்றத்தைக் கொண்டு வந்தன.

சிறு விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட நிலப் பட்டாக்களின் எண்ணிக்கை நான்கு மடங்கு உயர்ந்தது. அதேபோல் பெண்களுக்கு பொலிவியாவில் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தையும் பாராட்டியாக வேண்டும்.

நாடாளுமன்றத்தில் 28% பெண்கள்; செனட்டில் 47% பெண்கள்; அமைச்சரவையில் பாதி (10 பேர்) பெண்கள்; அதில் மூவர் பழங்குடியினர்.

### முழு வேலையுடமை

கல்விக்காக மொராலிஸ் மேற்கொண்ட இயக்கம் பெரும் வெற்றி கண்டிருக்கிறது. பொலிவியா எழுத்தறிவின்மையை முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டது என்று யுனெஸ்கோ அறிவித்திருக்கிறது.

அரசு பிரமாண்டமான கட்டமைப்புத் திட்டங்களைப் பொதுத்துறையின் வழியாக மேற்கொண்டதன்மூலம் பொலிவியா அநேகமாக முழு வேலையுடைமையை அடைந்துவிட்டது என்று சொல்லப்படுகிறது. இது மக்கள் நலனுக்காகப் பெருமளவு செலவு செய்யும் அரசு, நமக்கெல்லாம் உபதேசம் செய்வதைப் போல் சிக்கனம் பிடிக்கும் அரசு அல்ல.

இத்தனைக்குப் பின்னும், இன்று உலகிலேயே அதிக சதவீதம் நிதி சேமிப்பு கொண்ட நாடு என்று பன்னாட்டுச் செலாவணி நிதியம் பொலிவியாவுக்குச் சான்றிதழையும் பாராட்டு தலையும் வழங்கியிருக்கிறது. ஆனால், பொலிவிய அரசு அந்த அமைப்பைச் சந்தேகத்துடன் பார்த்து, இன்னும் அதிகமாகச் செலவழிக்கலாமோ என்று யோசித்துவருகிறது. இவை அனைத்துமாகச் சேர்ந்து, அரசு மக்களின் பெரும் ஆதரவைப் பெற்றிருக்கிறது.

### முதலாளித்துவ இந்தியா

இந்தியா இன்று கடைப்பிடிக்கும் பாதை இதற்கு எதிர்மறையானது என்பது சொல்லத் தேவையில்லை: கடைந்தெடுத்த நவதாராளமயம், அனைத்தும் தனியார்மயம், பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாருக்கு விற்றல், அந்நிய, உள்நாட்டுப் பெரும் முதலாளிகளின் தேவைக்கேற்ற கொள்கைகள், வேலைவாய்ப்பை உருவாக்காத வளர்ச்சி, உலகிலேயே அதிக அளவில் தனியார்மயமாக்கப்பட்ட கல்வி, சுகாதார அமைப்புகள், அரசின் முதலீட்டையும் செலவையும் குறைக்கும் சிக்கனம் என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

லத்தீன் அமெரிக்கா முழுவதையும் தன் உடும்புப் பிடியில் வைத்திருந்த அமெரிக்காவின் பெரும் எதிர்ப்புகளுக்கு இடையில்தான் பொலிவியாவின் சாதனைகள் சாத்தியமாகியிருக்கின்றன. சமீபத்தில் நடந்த தேர்தலிலும் மொராலிஸை எதிர்த்த வேட்பாளர், அமெரிக்காவின் பெரும் முதலாளிகளின் பிரதிநிதியாகத்தான் போட்டியிட்டார். நாட்டின் பல வளங்களும் நிறுவனங்களும் இன்னும் பெரும் முதலாளிகளின் கையில் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, நாட்டின் ஊடகங்கள் இன்னும் வலதுசாரி சக்திகளான பெரும் முதலாளிகளின் கையில்தான் இருக்கிறது. அவையெல்லாம் மொராலிஸுக்கு எதிரான பிரச்சாரத்தில் தொடர்ந்து ஈடுபடுகின்றன. ஆனால், பெருநிறுவன ஊடகங்கள் செய்யும் பொய்ப் பிரசாரத்துக்கு மக்கள் வீழ்ந்துவிடுவதில்லை.

### கொடிய எதிரி

வட அமெரிக்க சாம்ராஜ்யத்தின் கொடும் கொலைப் பிடியிலிருந்தும், பன்னாட்டுச் செலாவணி நிதியத்தின் பொருளாதார ஆதிக்கத்திலிருந்தும் தப்பியதால்தான், தன் நாட்டை உயர்த் முடிந்தது என்று மொராலிஸ் கூறிகிறார். முதலாளித்துவம் மனித சமுதாயத்தின், சுற்றுச்சூழலின், இந்த பூமியின் கொடிய எதிரி என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை என்று மொராலிஸ் கூறுவதை நாம் கவனிக்க வேண்டும்.

அத்துடன், பொலிவியாவின் மிகப்பெரும் பலம் லத்தீன் அமெரிக்க நாடுகள் சிலவற்றிடையே தோன்றியிருக்கும் அற்புதமான ஒருமைப்பாடும் தோழமையும் இன்று கியூபா, வெனிசுலா, பிரேசில், ஆர்ஜெண்டீனா, உருகுவே, சிலி உள்ளிட்ட லத்தீன் அமெரிக்க நாடுகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் இடதுசாரி புரட்சிப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றன.

தங்களுக்குள்ளாக வலிமைமிக்க கூட்டு அமைப்பையும் அந்த நாடுகள் உருவாக்கியுள்ளன. அதன் ஒரு அத்தியாயம்தான் பொலிவியாவின் எழுச்சியும், மக்கள் ஆதரவு அரசியலும், மொராலிஸ் வணங்கும் முன்னோடிகள் கியூபாவின் ஃபிடல் காஸ்ட்ரோவும் சேகுவராவும் சமீபத்தில் மறைந்த வெனிசுலாவின் சாவேஸும்.

புகழ்பெற்ற அரசியல் சிந்தனையாளரும், உலக ஆன்மாவின் குரல் என்று போற்றப்படுபவருமான நோம் சாம்ஸ்கி சொல்கிறார். பொலிவியா தனது சிறந்த முன்னுதாரணத்தினால், உலக முதலாளித்துவத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாகியிருக்கிறது. உலக முதலாளித்துவத்துக்கு அச்சுறுத்தல்; நம்மைப் போன்ற நாடுகளின் மக்களுக்கு வழிகாட்டி.

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளவத்தையில் ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் 42 ஆவது ஒழுங்கைக்கு அருகிலுள்ள கடற்கரையில் அடையாளம் காணப்படாத நிலையில் ஆண ஒருவரினுடைய சடலம் நேற்று திங்கட்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மரணமடைந்த நபர் தொடர்பில் அடையாளம் காணும் வகையில் வெள்ளவத்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும்பொலிஸார் தெரிவித்தனர்.(இ-3-5)

# அவுஸ். அரசாங்கத்தின் அலட்சியத்தால் புகலிடக் கோரிக்கையாளர்கள் நிர்க்கதி

கடந்த 2 வருடங்களாக புகலிடம் கோரி அவுஸ்ரேலியாவுக்கு படகு மூலம் வந்தவர்களை, இதுவரைக்கும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் அடிமை போல் வைக்கப்பட்டுள்ளனர்.

இதில் அநேகமானோரின் விசாக்கள் முடிவடைந் தும் இதுவரைக் கும் புதுப்பிக்கவும் இல்லை.

படகில்வந்ததன்காரணமாக தற்போது அகதிகள் இருககின்றார்களா என்ற ஒரு பாரிய கேள்வி உருவாகி உள்ளது.

இதன் அடிப்படையில் எங்களுக்கு விரும்பினால் நேரம் இருந்தால் அகதிகளின் விண்ணப்பம் பரிசீலிக்கப்படும். இல்லையேல் சொந்த நாட்டுக்கு போகலாம் என்ற அடிப்படையில் அகதிகளை கையாளும் விதம் மிகவும் வேதனை அளிப்பதாக புகலிடம் கோருவோர் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் உயர் நீதிமன்றம் அறிவித்த தீர்ப்பு மற்றும் மனித உரிமை ஆணையாளர் அறிவிப்பு என்பனவற்றுக்கு மதிப்பளிக்காமல் அகதிகளை அடிமை போல் நடத்தப்படுகின்றனர்.

இதன் காரணமாக மிகவும் மோசமான நிலையில் புகலிடம் கோருவோரின் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளதாக அகதி ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். (இ-3-5)

## ரயிலுடன் கப் மோதி விபத்து

### நால்வர் காயம்

கந்தானை, ரயில்வே கடவையில்கப்ரக வாகனமொன்று ரயிலுடன் நேற்று முன்தினம இரவு 10 மணியளவில் மோதி விபத்துக்குள்ளானதில் 4 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் இராகமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை கந்தானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-3-5)

# வடக்கு சபையின் செயற்றிறனின்மை பற்றி அரசாங்கம் அதிருப்தியுடனேயேயுள்ளதாம்

## அமைச்சர் சுசில் தெரிவிப்பு

(கொழும்பு)

வட மாகாண சபையில் ஆட்சி செய்கின்றவர்கள் புலம்பெயர் மக்ளின் தேவைக்கு ஏற்பவே செயற்பட்டு வருகின்றனர்.

அவர்கள் வடக்கு மக்களுக்கு சேவையாற்றுவதை விடுத்து புலம் பெயர் மக்களின தேவையை நிறைவேற்றி வருகின்றனர்.

வட மாகாண சபையின் செயற்றிறனின்மை தொடர்பில் அரசாங்கம் அதிருப்தியுடனேயே உள்ளது என்று அமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளருமான சுசில பிரேம்ஜயந்த தெரிவித்தார். வட மாகாண சபைக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் பெரும் பங்கு இதுவரை செலவிடப்படாமல் உள்ளது.

வட மாகாண சபையை நிர்வகிக்கின்றவர்களுக்கு மக்களுக்கு சேவையாற்றத் தெரியவில்லை. அல்லது சேவையாற்றும் எண்ணம் அவர்களுக்கு இல்லை. வட மாகாண சபையின் ஊடாக மக்களுக்கு சேவையாற்றுவதறகு பதிலாக அவர்கள் வேறு எதனையோ செய்து கொண்டிருக்கின்றனர் என்றும் அவர குற்றம்சாட்டினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஆளும் கூட்டணியினால் நடத்தப்பட்ட விசேட செய்தியாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதாவது மாகாண சபையின் ஊடாக மக்களுக்கு அதிக சேவையை வழங்க யதார்த்த பூர்வமானயோசனைகளுடன் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட கூட்டமைப்பு முன்வரவேண்டும் என்று ஜனாதிபதி வரவு செல வுத்திட்டத்தின்போது ஏன் அழைப்பு விடுத்தார் என்றே ஊடகவியலாளர்கள் அமைச்சரிடம் கேள்வியெழுப்பினர்.

வட மாகாண சபையை நிர்வகிக்கின்றவர்களுக்கு வடக்கு மக்களுக்கு சேவையாற்றும் எண்ணம் இல்லை. மாறாக அவர்கள் வடக்கு மக்களுக்கு சேவை செய்வதை விடுத்து புலம்பெயர் மக்களின் தேவையை நிறைவேற்றிவருகின்றனர்.

இதனால் வட மாகாண சபை செயற்திறனற்று காணப்படுகின்றது.

வட மாகாண சபைக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் பெரும் பங்கு இதுவரை செலவிடப்படாமல் உள்ளது. இங்கு ஒரு விடயம் நன்றாக தெரிகின்றது. அதாவது வட மாகாண சபையை நிர்வகிக்கின்றவர்களுக்கு மக்களுக்கு சேவையாற்றத் தெரியவில்லை. அல்லது சேவையாற்றும் எண்ணம் இல்லை. வட மாகாண சபையின் ஊடாக மக்களுக்கு சேவையாற்றுவதற்கு பதிலாக அவர்கள் வேறு எதனையோ செய்து கொண்டிருககின்றனர்.



இந்த விடயத்தில் மத்திய அரசாங்கம் திருப்தியற்ற நிலையிலேயே உள்ளது. எனினும் வட மாகாண சபை மக்களுக்கு சேவையாற்றாவிடினும் மத்திய அரசாங்கம் வடக்கு மக்களுக்கு சேவையாற்றிவருகின்றது. குறிப்பாக வெளிநாட்டு கடனைப் பெற்று மத்திய அரசாங்கம் வடக்கு மக்களுக்காக ரயில் பாதையை நிர்மாணித்தது.

இந்த வரவு செலவுத் திட்டத்திலும் மாகாண சபைகளுக்கு பல வேலைத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் வட மாகாண சபையும் உள்ளடங்குகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3-5)

## சாதாரண தரப் பரீட்சைக்கு 507784 பேர் தோற்றுவர்

இவ்வாண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீடசையில் 5 இலட்சத்து 77 ஆயிரத்து 84 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எம். எம்.என். ஜெயந்த புஷ்பகுமார தெரிவித்தார்.

திட்டமிட்டபடி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 9 ஆம் திகதியிலிருந்து 18 ஆம் திகதி வரை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை நடைபெறு மெனவும் அவர் தெரிவித்தார். 2015 ஜனவரி மாதத்தில் பாப்பரசரின் இலங்கை வருகையும் ஜனாதிபதித் தேர்த லும் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுவதால், பரீட்சை தினங்களிலும் மாற்றம் வரலாம் என கருதப்பட்டது. இந் நிலையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இதற்கமைவாக க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையானது 1176 நிலையங்களில் நடைபெறவுள்ளது. இப்பரீட்சைக்கான நேர அட்டவணையை திணைக்களத்தின் www.doenets.lk எனும் இணையத்தள முகவரியில் பார்வையிடலாம். இது வரை இத்திகதிகளில்எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. அதனால் திட்டமிட்டபடி டிசெம்பரில் உரிய காலப்பகுதியில் க.பொ.த சாதாரணதரப பரீட்சை நடைபெறும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் எம். எம்.என். ஜெயந்த புஷ்பகுமார மேலும் தெரிவித்தார். (இ-3)

## தங்க காற்சட்டை அணிந்திருந்தவர் கைது

தங்கத்தை வைத்து தைக்கப்பட்டிருந்த காற்சட்டையை அணிந்து கொண்டும் தங்கத்துண்டுகளை மலவாயில் மறைத்து வைத்துக்கொண்டும் இந்தியாவை நோக்கி பயணிக்க விருந்த இலங்கை பிரஜையொருவரை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் சுங்கப்பிரிவினர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கைதுசெய்துள்ளனர். கொழும்பு, குணசிங்கபுரத்தை சேர்ந்த 34 வயதான புடவைக் கடை வர்த்தகரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட தங்கத்தின் நிறை 289கிராம் என்றும் அதன பெறுமதி 14 இலட்சத்து 5 ஆயிரத்து 200 ரூபாய் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். சந்தேகநபர் இலங்கை விமான சேவைக்கு சொந்தமான யு.எல்173 என்ற விமானத் திலேயே பெங்களூரை நோக்கி பயணிப்பதற்கு வருகை தந்துள்ளார்.(இ-3-5)

# சொர்க்கம் என்பது... சுத்தம் உள்ள வீடுதான்!

### Health Care மருத்துவ உலகம்

#### உங்கள் நலம் உங்கள் கைகளில்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

**குப்பைத் தொட்டி கிருமிகளின் பெட்டி!**

மக்கும் குப்பை மக்காத குப்பை என அரசு பிரித்து வைக்கச் சொன்னாலும் நம் வீட்டில் அனைத்தும் ஒன்றாகவே சேகரிக்கப்படுகின்றன. ஞாயிற்றுக் கிழமைகளில் இறைச்சி மீன்களைச் சுத்தம் செய்து குப்பைத் தொட்டியில் போடுகிறோம். அடுத்த நாள்வரை அவை வீட்டிலே இருப்பதால் கரப்பான் பூச்சி ஈக்களில் ஆரம்பித்து பூரான், எலி வரைக்கும் சமையலறைக்குள் எளிதாக உள் நுழைந்து விடுகிறது. நாப்கின்கள், டயப்பர்கள் அழுகிய பொருட்கள் என எல்லாவற்றையும் குப்பைத் தொட்டியில் மணிக்கணக்காக சேமித்து வைத்து கிருமிகளை வீட்டுக்குள்அழைத்துக்கொண்டே இருக்கி றோம். இதனால் எலிக் காய்ச்சல் டெங்கு டைபாயடு, வைரஸ் காய்ச்சல் வயிற்றுக் கோளாறுகள் எல் லாமே இங்கிருந்துதான் ஆரம்பம்.

**கைப்பையிலும் கவனம்!**

வெளியே கொண்டுசெல்லும் கைப்பைகள் வழியாக கிருமிகளை எளிதாக வீட்டுக் குள் எடுத்து வந்துவிடுகிறோம். புகையிரத நிலையம், பேருந்து நிலையம் பெஞ்சுகளில் வைக் கப்படும் பை கொஞ்சமும் தயக்கம் இல்லாமல் நம் படுக்கையிலும் டைனிங் டேபிளிலும் பிரதான இடத்தைப் பிடித்து விடும். வெளியில் இருந்து திரும்பியதும் உடனே குளித்துவிட்டு வீட்டுக்குள் வருபவர்கள்கூட இந்தப் பை அபாயத்தைப் புரிந்துகொள்வது இல்லை. கைப்பைகளைத் தினமும் கழுவ முடியாதுதான். ஆனால் கிருமிநாசினி கொண்டு துடைத்துப் பயன்படுத்தலாம்.



**துவைத்தாலும் போகாது!**

உள்ளாடையில் மட்டுமே 100 மில்லியன் கிருமிகள் உள்ளன என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். இதில் நோய்களை பரப்ப கூடிய ஹெபடைடிஸ் ஏ (Hepatitis A) நோரோ வைரஸ் (Noro virus) ரோட்டா வைரஸ் (Rotavirus) சால்மோனெல்லா (Salmonella) மற்றும் ஈ-கோலை (E.Coli) போன்றவை மிகவும்ஆபத்தானவை. சலவை இயந்திரத்தில் உடைகள், உள்ளாடைகள், தரையில் போடும் துணி மேட், கிச்சன் டவல், பாத்ரூம்டவல்என அனைத்தும் கலந்து துவைப்பதால் நுண்கிருமிகள் அனைத்திலும்பரவ வாய்ப்பு இருக்கிறது.

உதாரணத்துக்கு சமயலறை உடைகளுக்கு பரவும் பாத்ரூம் டவல் கிருமிகள் உள்ளாடைகளுக்குப் பரவும். இவை ஒரு மணி நேரம்சலவை இயந்திரம் துவைக்கப்பட்டாலும் கிருமிகள் போகாது.

150 டிகி ரிக்கு மேலுள்ள வெந் நீரின சூட்டினால் மட்டுமே இந்தக் கிருமிகளை நீக்க முடியும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் மாறிவிட்டான்

## மனித இயல்பை வெளிப்படுத்தும் கைலாகு

இன்று, நாம் ஒருவரை ஒருவர் முதல் முறையாக சந்திக்கும் போதெல்லாம் கைகளைக் குலுக்கி வாழ்த்துத் தெரிவிப்பதை வழக்கமாக வைத்திருக்கிறோம். கைகுலுக்குவது எப்படித் தொடங்கியது?

திறந்த உள்ளங்கையைக் காட்டுவது உண்மையும், நேர்மையும், சார்ந்திருப்பதை உணர்த்துவதாக வரலாறு முழு வதும் வழங்கப்படுகிறது. சப்தம் ஏற்கிறபோது உள்ளங்கையை முன்னால் நீட்டியும், நெஞ்சில் வைத்தும் உறுதிமொழியை உரக்கச் சொல்கிறோம். நீதிமன்றத்தில் கூட புனிதப் புத்தகத்தின் மீது



வலது உள்ளங் கை யை காற்றில் நீட்டி உண்மையைச் சொல்வதாக வாக்குமூலம் அளிப்பதும் வாடிக்கை. அப்படிப்பட்ட தன்மை கொண்டதுதான் கைகுலுக்குவதும். அது இப்போது முளைத்த நாகரிகச் செயல் அல்ல. குகைகளில் வாழுகிறபோதே மனிதனிடம் தொடங்கியது இந்தப் பழக்கம். இரண்டு குகை மனிதர்கள் சந்தித்தால் அவர்கள் கைகளில் எந்த ஆயுதமும் இல்லை என்பதைக் காட்டுவதற்காக உள்ளங்கையைத் திறந்து காண்பிப்பது அப்போதே புழக்கத்தில் இருந்தது. பிறகு அது மருவி கைகுலுக்கலாக ஆங்கிலம் பேசும் நாடுகளில் ஏற்பட்டது. வாழ்த்துச் சொல்வதற்கும் வழியனுப்புவதற்கும் இந்தச் செய்கை பயன்பட்டது. கைகளைக் குலுக்கும்போது ஐந்திலிருந்து ஏழு முறை மேலும் கீழும் ஆட்டுவது வழக்கம்.

தமிழகச் சூழலில் கைகுலுக்குவது பாதியில் வந்தது. வணக்கம் சொல்வது ஆதியில் இருந்தது. அதுவும் கைகளில் ஆயுதம் இல்லை என்பதைக் காட்டுவதற்காகத்தான். அதே நேரத்தில் அப்படிக் கூப்புகிற கைகளுக்குள்ளும் கூர்மையான ஆயுதம் ஒளிந் திருக்கலாம் என்பதை திருவள்ளுவர் எச்சரிக்கைச் செய்கிறார். அப்படிப் பட்ட நிகழ்வை நாம் சரித்திரத்தில் சந்தித்திருக்கிறோம்.

""தொழுதகை உள்ளும்
படைஒடுங்கும் ஒன்னார்
அழுதகண்ணீரும்
அனைத்து"" என்பது வள்ளுவம்.

எப்போதும் பொருந்துகின்ற இத்திருக்குறள் சிலரின் புன்னகையும் போலியானது, கண்ணீரும் கசடானது என்பதைக் கற்றுத் தருகிறது. வணக்கம் வைப்பதில் ஒரு வசதி உண்டு. எத்தனை பேருக்கு வேண்டுமானாலும் ஒரே சமயத்தில் தெரிவித்து விடலாம். மேடையில் தோன்றுகிறபோது அரங்கத்தில் இருக்கின்ற ஆயிரம் பேரையும் ஒரே கைகூப்பால் வணங்கி விடலாம். அத்தனை பேருடன் கைகுலுக்குவதை சிந்தித்துக் கூடப் பார்க்க முடியாது.

கும்பிடுவது கைகுலுக்குவதை விடமரியாதையான வெளிப்பாடு. அடுத்தவர்களோடு கைகுலுக்கினால் தொற்றுநோய் வந்துவிடுமோ என்று கையுறை அணிந்துகொண்டு கைகுலுக்கிய இந்திய மகாராஜாக்கள் இருந்தார்கள். வணக்கம் தெரிவிப்பதில் இந்தப் பதற்றங்கள் ஏதும் ஏற்படுவதில்லை. கைகளை குலுக்கும் போது நம்மையும் அறியாமல் வியர்வையின் மூலமும் குலுக்கும் விதத்தின் மூலமும் நம் ஆளுமையை மற்றவர்களுக்கு உணர்த்தி விடுகிறோம்.

கைகளின் மூலம் நாம் பலவற்றை சொற்களில்லாமலேயே சொல்கிறோம். "ஆள் காட்டி விரலைக் கட்டை விரலின் மீது வைத்து எதிரே இருப்பவர்களுக்குக் காட்டினால் நன்றாக இருக்கிறது' என்று பொருள். அதைப்போலவே, "ஆள்காட்டி விரலையும் நடுவிரலையும் மட்டும் ஆங்கில "வி' வடிவத்தில் காட்டினால் வெற்றி' என்று அண்மைக் காலமாக மக்களிடம் நிலவி வரும் கருத்து. இரண்டாம் உலகப் போரின் போது வின்ஸ்டன் சர்ச்சில், இங்கிலாந்து வெற்றி பெற்றபோது இந்த சமிக்ஞையைப் பயன்படுத்தினார். இப்போது அதை பல தலைவர்கள் பயன் படுத்தி வருகிறார்கள். இந்தச் சமிக்ஞையை உள்ளங்கை வெளியே தெரிவதுபோல காட்டினால் அது வெற்றியையும் அமைதியையும் குறிக்கும். மாற்றிக் காட்டினால் அதற்குத் தவறான அர்த்தம் உண்டு. அடுத்தவர்களை அவமானப்படுத்துவதாகப் பொருள்.

மன்னர் ஐந்தாம் ஹென்றி அப்போது பெரும் சக்திவாய்ந்த நாடாக இருந்த ஃபிரான்ஸுடன் போரிட நேர்ந்தது. ஃபிரான்ஸ் நாட்டு மக்களோ, தங்களுக்குத்தான் வெற்றி கிட்டும் என்ற இறுமாப்பில் இருந்தனர். அவர்கள் இங்கிலாந்து சிப்பாய்களைப் பார்த்து, "நாங்கள் வெற்றிபெற்ற உடன் உங்கள் கைகளில் இருக்கிற ஆள்காட்டி விரலையும் நடு விரலையும் அறுத்துவிடுவோம்' என்று எச்சரிக்கை செய்தனர். அதனால் ஹென்றி, வீரர்களுக்கு எழுச்சி உரையாற்றி உற்சாக மூட்டினார். அவர்கள் புயலைப் போல் வேகத்துடன் போராடி வெற்றியை நிறுவினர். அவர்கள், தோற்ற ஃபிரான்ஸ் வீரர்களிடம் நடுவிரலையும் ஆள்காட்டி விரலையும் காட்டி, "எங்கள் விரல் பத்திரமாக இருக்கிறது உங்களால் ஒனறும் செய்ய முடிய வில்லையே' என்று சமிக்ஞை செய்ததாகவும் அப்போதுதான் அது வெற்றியைக் குறிக்க ஆரம் பித்ததாகவும் சில புனைவுகள் உண்டு.

கைகுலுக்குவது அனிச்சமான செயல் அல்ல. ஆனால் எப்படிக் குலுக்குகிறோம் என்பது நம்மை மீறி வெளிப்படும் குறியீடு. ஒருவர் கைகுலுக்குவதை வைத்தே அவருடைய குணாதிசயத்தைக் கண்டுகொள்ளலாம். உள்ளங்கையை வைத்தே உள்ளத்தை அறிய உதவுவதுதான் கைகுலுக்குவது. வர்த்தகப் பரிமாற்றங்களிலும் பேச்சுவார்த்தைகளிலும் கைகுலுக்கும்போது மரபு சார்ந்த செயலாக மட்டும் இல்லாமல், எதிராளியை இனம் காணும் யூகமாகவும் இருக்கிறது.

ஒருவர் கைகுலுக்கும்போது நம்முடைய கையை அழுத்தமாகப் பிடித்து நேராகக் குலுக்கினால் உறுதியானவர், பிடிவாதக்காரர், நம்பகத்தன்மை உடையவர், சொன்ன சொல்லைக் காப்பாற்றுபவர் என்று அறிந்து கொள்ளலாம். ஒருவரிடம் வர்த்தகம் பேசச் சென்றால் அவர் முதலிலேயே அப்படிக் கைகுலுக்கினால் அவர் ஒப்பந்தத்தை மீற மாட்டார் என அறியலாம். நேர்காணலுக்கு ஒருவர் வரும்போது அப்படிக் கைகுலுக கினால் அவ்வரை நம்பி நிறுவனம் பணியில் நியமிக்கலாம்.

கைகுலுக்குபவர் முழுவதுமாக கைகுலுக்காமல் விரல்களை மட்டும் தொட்டு கைகுலுக்கினால் அவர்கள் மேம்போக்கானவர்கள். அவர்களுக்கு என்று நிலையான புத்தி இருக்காது. அவர்கள் சொன்னதைக் காப்பாற்றுவார்கள் என்பது நம்ப முடியாது. 10-ம் தேதி அன்று சரக்கு வரும் என்று சொன்னால் நிச்சயமாக வராது, அவர்கள் சொல்வதை "ஒரு சிட்டிகை உப்போடுதான் உட்கொள்ள வேண்டும்' என்று பொருள்.

சிலர் கைகுலுக்கும்போது அவர்கள் கையை மேலே வைத்துக் கைகுலுக்க முற் படுவார்கள். இப்படிப்பட்டவர்கள் "நம்மீது ஆதிக்கம் செலுத்த விரும்புகிறார்கள்' என்று பொருள். இதை அனுமதிக்கக் கூடாது. நாம் அப்படிப்பட்டவர்களோடு கைகுலுக்கும்போது தோசை திருப்புவதைப் போல அவர்கள் கையைத் திருப்பி நம் கையை மேலே வைத்து "நான் ஒன்றும் அடிபணிந்து போகிறவன் அல்லன்' என்று உணர்த்த வேண்டும். அப்போது அவர்கள் உயர்வு மனப்பான்மையை உதிர்த்து விடுவார்கள்.

சிலர் கைகுலுக்கும்போதே தங்கள் கையை கீழே வைத்து உள்ளங்கையைக் காட்டிக் கொணடு கைகுலுக்குவார்கள். இவர்கள் இயல்பிலேயே யாரிடமும் அடங்கிப் போகும் தன்மை உள்ளவர்கள். பலரோடு போராடவும் எதிர்நீச்சல் போடவும் அவசியமான பணிகளில இவர்களை நியமிக்கக்கூடாது.

சிலர் கைகுலுக்கும்போதே நம் கையை பிடித்து இழுத்து நம்மை அவர்களுக்கு நெருக்கமாக வர வழைப்பார்கள். அவர்கள் தங்கள் ஆதிக்கப் பகுதியில் இருக்கவே விரும்புகிறார்கள். அவர்கள் பாதுகாப்பின்மை கொண்டவர்கள். இவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தப் பொது வான இடத்தைத் தேர்ந்தெடுப்பது நல்லது.

சிலர் முன்னே வந்து கை குலுக்குவார்கள். அவர்கள் எல்லா இடங்களிலும் ஐக்கியப்படுத்திக் கொள்ள தயாரானவர்கள்.

கைகுலுக்கல்களில் மூன்று விதமான பாணிகள் கவனிக்கத்தக்கவை. அவை, கையுறை கைகுலுக்கல், கருவாட்டு கை குலுக்கல், கைவிரல் முறி கைகுலுக்கல் என்று சொல்லப்படும்.

கையுறை கைகுலுக்கல் என்பதை "அரசியல்வாதி கைகுலுக்கல்' என்றும் சொல்வார்கள். நாம் ஒரு கையை நீட்டினால் அவர்கள் இரண்டு கைகளையும் நீட்டி நம் ஒரு கையைப் பிடித்து கையுறையைப்போல அவர்கள் கைகளை ஆக்கிக்கொண்டு குலுக்குவார்கள். நன்றாகத் தெரிந்தவர்களிடம் மட்டும்தான் இப்படி கைகுலுக்கவேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் சந் தேகப்படுவார்கள்.

சிலரிடம் கைகுலுககும்போது அந்தக் கையில் உயிர்ப்பு இருக்காது, சுரத்தில்லாமல் செத்த மீனைப்போல கைகளை நீட்டுவார்கள். அழுத்தமாகவும் அது இருக்காது. இப்படிப் பட்டவர்கள் பலவீனமானவர்கள் என்பதோடு தங்களைக் காத்துக் கொளவதிலேயே கவனம் செலுத்துபவர்கள் என்று தெரிந்து கொள்ளலாம். இவர்கள் பழக்கம் நம்பகத்தன் மையானதல்ல. இவர்கள் உண்மையுடன் சிநேகம் கொள் ளமாட்டார்கள்.

சிலர் அவர்களுடைய ஆளுமையைக் காட்ட நம் கை வரல்கள் முறிந்துபோகிற மாதிரி கைகுலுக்குவார்கள். அது அவர்களிடம் ஒளிந்து கொண்டிருக்கும் ஒரு விதமான கோபம், பொறாமை போன்றவற்றை வெளிப்படுத்துவதாக இருக்கும். அந்த மாதிரி நேரங்களில்நாம்"ஆ' என்று வலியை வெளிப்படுத்தி இனிமேல் அவர்கள் அப்படிச் செய்யாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

சிலர் நம் மணிக்கட்டைப் பிடித்தும் கை முழங்கையைப் பிடித்தும் இன்னொரு கையால் தோளைப் பிடித்தும் தங்களுடைய நெருக்கத்தை வெளிப்படுததுவார்கள். இவற்றையெல்லாம் மிக நெருங்கிய நண்பர்களிடமும் உறவினர்களிடமும் மட்டுமே நாம் வெளிப்படுத்தலாம்.

கைவினைஞர்களுக்கும், ஓவியர்களுக்கும் விரல்கள் மிகவும் முக்கியமானவை. அவற்றில் சிறிது வலி ஏற்பட்டாலும் சிங்கம் அசிங்கமாகிவிடும். எனவே அவர்களிடம் நாம் கைகுலுக்குவதைத் தவிர்ப்பதே நல்லது.

கை முறிவதுபோல கை குலுக்குபவர்களை யாரும் பணியில் வைத்துக்கொள்ள மாட்டார்கள். பலம், உறுதி, முழுமை, நேரம் ஆகியவற்றைக் கொண்டு "கைகுலுக்கல் குறியீடு' ஒன்றை அறிஞர்கள் தயாரித்திருக் கிறார்கள். அதை வைத்து ஒருவருடைய குணாதிசயங்களைக் கூறி விடலாம். இந்தக் கைக்குள் தான அத்தனையும் ஒளிந்துள்ளது என்பது உண்மை அல்லவா?

**யூனியர் விகடன்**

# இன வன்முறை சூழல் சமூகங்களை சந்தேகத்துடனே பார்க்க வைத்தது

கடந்த காலத்தில் நிலவிய இன வன்முறைச்சூழல் சமூகங்களை சந்தேகத்துடன் பார்க்கவைத்தது. தற்போது அந்நிலை படிப்படியாக மாறி வருவதாக காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் தலைவர் எம்.ஐ.சுபைர் தெரிவித்தார்.

காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தினுடைய நல்லிணக்கக்குழுவின் ஏற்பாட்டில், ஹஜ் பெருநாள் மற்றும் தீபாவளி ஒன்றுகூடல் அஷ்ஷஹீத் அகமட்லெவ்வை மண்டபத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 30 வருடங்களாக நிலவிய யுத்த சூழ்நிலையும் சமூகங்களை பிரித்துவைத்திருந்தது. தற்போது இந்நிலையும் மாறி, சமூகங்கள் பழையவாறு ஒற்றுமையை கட்டியெழுப்பி வருகின்றன.

எமது பிராந்தியத்தில் தமிழ், முஸ்லிம் சமூகங்களின் ஒற்றுமை முக்கியமானதாகும். இந்த இரண்டு சமூகங்களும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு தங்களுக்குள் இருக்கின்ற அனைத்து வேறுபாடுகளையும் களைந்து வாழ வேண்டும்.

தமிழ், முஸ்லிம் சமூகங்களின் ஒற்றுமையை பிட்டும் தேங்காய்ப்பூவுக்கும் ஒப்பிடுவார்கள். பிட்டும் தேங்காய்ப்பூவும் ஒன்றுடனொன்று கலந்து எவ்வாறு உள்ளதோ, அவ்வாறே இப்பிராந்தியத்திலுள்ள தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமையாகும்.

ஒற்றுமையை மேலும் வளர்த்தெடுக்கும் வகையில் காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் நல்லிணக்கக்குழு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம் சுதந்திரமாக செயற்படும் நிறுவனமாகும் என்றார். (இ-3-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மன்னிக்கவும் நான் சாக விரும்புகிறேன்' பொறியியற்றுறை மாணவன் தற்கொலை

## கேலிக்கையாக லைக் போட்ட 28 பேர்

(சென்னை)

பேஸ்புக்கில் தகவல் தெரிவித்துவிட்டு பொறியியல் மாண்வர் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் இந்தியாவின் மதுரை பகுதில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

மதுரை தெற்குமாசி வீதி மஞ்சனக்காரத் வீதியைச் சேர்ந்தவர் அபுதாகிர். தகரப்பட்டறை கூலித் தொழிலாளி. இவரது மகன் ஷேக் முகமது (வயது -18). பொறியியல் கல்லூரியல் 2ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பம் படித்து வந்தார்.

சக மாணவர்களிடமும், வீட்டருகே உள்ளவர்களிடமும் நெருங்கப் பழகும் குணமுடைய இவர, தீபாவளியன்று அதிகாலை 2.10 மணிக்கு தனது பேஸ்புக் பக்கத்தில் 'ஸ்வீட் எடு.. கொண்டாடு.' என குறிபபிட்டு நண்பர்களுக்கு தீபாவளி வாழ்த்து அனுப்பியுள்ளார்.

இந்நிலையில், தீபாவளியன்று ஷேக்முகமது தந்தை அபுதாகிர், தாய் ஷகிலா பேகம், தரம் 8 படிக்கும் தங்கை ஹாஜிராபானு ஆகியோர் உறவினர் வீட்டுக்குச் செனறுவிட்டனர் அன்றைய பொழுதை நண்பர்களுடன் கழித்த ஷேக் முகமது இரவு வீட்டில் தனியாக இருந்துள்ளார்.

இதன்போது, இரத்தக் கறைகளுடன் கூடிய ஒரு இளைஞர் 'மன்னிக்கவும். நான் சாக விரும்புகிறேன்' என்று சுவரில் இரத்தத்தால் எழுதிக் கொண்டிருப்பது போன்ற புகைப்படத்தை தனது பேஸ்புக் சுயவிபர படமாக இரவு 10.12 மணிக்கு பதிவேற்றம் செய்துள்ளார். மேலும் தன்னுடைய பெயருக்கு கீழே அதிர்ஷ்டமில்லாத நபர என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இதை நண்பர்கள் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. 28 பேர் கேலிக்கையாக 'லைக்' கொடுத்துள்ளனர். அதன்பின் மறுநாள் காலை நீண்ட நேரமாகியும் ஷேக்முகமது வீட்டை விட்டு வெளியே வரவில்லை. கையடக்கத் தொலைபேசி அழைப்புக்கும் பதில் அளிக்கவில்லை. சந்தேகமடைந்த நண்பர்கள் வீட்டுக்குச் சென்று பார்த்தபோது, சேலையால் தூக்கிட்ட நிலையில் ஷேக் முகமது தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது.

கல்லூரிக்கு கட்டணம் செலுத்த பணம்இல்லாததால்ஷேக்முகமது தற்கொலை செய்து கொணடதாக கூறி பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர். தற்கொலைக்கு வேறு காரணம் உள்ளதா என பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.(இ-3-5)

## மாற்றுத் திறனாளிகளுக்கு எதிரான தடையை நீக்கி தமிழக அரசு உத்தரவு

மாற்றுத் திறனாளிகள் தங்கள் உடலமைப்புக்கேற்ப வாகனங்களை மாற்றுருவப்படுத்தவும்,ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கும் இருந்த தடைகளை நீக்கி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

வாகனம் ஓட்ட முறையான பயிற்சி பெற்றவர் என்பதற்கு ஒரே சானறு, ஓட்டுநர் உரிமம்தான். ஆனால், மோட்டார் வாகன சட்டத்தின்படி, மாற்றுத் திறனாளிகளுக்கு ஓட்டுநர் உரிமம் வழங்குவதில் நிறைய நடைமுறைச் சிக்கல்கள் இருந்தன.

இதன் காரணமாக தமிழகத்தில் மூன்று சக்கர மோட்டார் வாகனங்கள ஓட்டுவோரில் (அரசின் விலையி ல்லா வாகனம் பெற்றவர்கள் உட்பட) சுமார் 85 சதவீதம் பேரிடம் ஓட்டுநர் உரிமம் இல்லை. அதேபோல, வாகனத்தை தங்கள் உடலமைப்புக்கேற்ப மாற்றுருவம் செய்த மாற்றுத் திறனாளிகளுக்கு தமிழகத்தில் ஓட்டுநர் உரிமம் வழங்கப்படுவதில்லை.

ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனம் ஓட்டி, விபத்தில் சிக்கி மாற்றுத் திறனாளி காயமடைந் தாலோ, வாகனம் சேதமடைந்தாலோ காப்பீடு மூலம் இழபபீடு பெற முடியாத நிலை தொடரகிறது.

தமிழகம் முழுவதும் நிலவிய இந்தப் பிரச்சினையை தமிழ்நாடு மாற்றுத் திறனுடையோர் சங்கங்களின் கூட்டமைப்பு உள்ளிட்ட அமைப்புகள் தமிழக போக்குவரத்து ஆணையர் சத்யவிரத சாகுவின் கவனத்துக்கு கொண்டு சென்றன.

இதைத் தொடர்ந்து, 2 புதிய ஆணைகளை போக்குவரத்து ஆணையகம் பிறப்பித்து, அதன் நகல்களை அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களுக்கும் அனுப்பியுள்ளது.(இ)

## மகாராஷ்டிர முதலமைச்சர் பதவிக்கு பா.ஜ.க.முன்னிறுத்துபவருக்கு ஆதரவு

(சென்னை)

பா.ஜ.க. முன்னிறுத்தும் யாரை வேண்டுமானாலும் மகாராஷ்டிரா்வின் அடுத்த முதல்வராக ஆதரிக்க தயார் என சிவசேனா கட்சி தெரிவித்துள்ளது.

மகாராஷ்டிரா சட்டப்பேரவைத் தேர்தலில் பா.ஜ.கவுக்கு தனிப் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், சிவசேனா கட்சியுடன் தேர்தலுக்குப் பிந்தைய கூட்டணியை ஏற்படுத்தியது.

இந்நிலையில், பா.ஜ.கவுடனான சமரசத்திற்குப் பின்னர், மகாராஷ்டிரா முதல்வர் பதவி தொடர்பான தனது கெடுபிடியை வெகுவாகவே தளர்த்தியுள்ளது சிவசேனா.

இதை உறுதிப்படுத்தும் வகையில்,பா.ஜ.க. முன்னிறுத்தும் யாரை வேண்டுமானாலும் மகாராஷ்டிராவின் அடுத்த முதல்வராக ஆதரிக்க தயார் என சிவசேனா கட்சி தெரிவித்துள்ளது.

சிவசேனாவின் அதிகாரபூர்வ பத்திரிகையான சாம்னாவில் வெளியாகயுள்ள தலையங்கத்தில், பா.ஜ.க. தலைவர் தேவேந்திர பத்நவிஸ் குறித்த சில கருத்துகளை முன் வைக்கப்பட்டுள்ளது. அதில், நிதின் கட்காரியை சந்தித்து தேவேந்திர பத்நவிஸ் ஆசி பெற்றார், பின்னர் ஆர்.எஸ்.எஸ்.தலைவர் மோகன் பகவத்திடமும் ஆசி பெற்றார். அவர் யாரிடம் வேண்டுமானாலும் ஆசி பெறட்டும், மக்கள் ஆதரவையும், ஆசியும் பெற்ற யாரை வேண்டுமானாலும் மகாராஷ்டிரா முதல்வராக ஆதரிக்கத் தயாராக இருக்கிறது சிவசேனா.

முதல்வர் யார் என்பதை பா.ஜ.க. மேலிடமே முடிவெடுக்கும். பா.ஜ.க. முனனிறுத்தும் யாரை வேண் டுமானாலும் முதல்வாராக ஆதரிக்க சிவசேனா தயாராக இருக்கிறது. மகாராஷ்டிராவில் காங்கிரஸ் - தேசியவாத காங்கிரஸ் கட்சிகளின் ஆதக்கத்தை அழித்து பா.ஜ.க. வெறறி பெற்றுள்ளது வரவேற்கத்தக்கது என தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ-3-5)




# காங்.தலைவி சோனியா,அத்வானி,முலாயம் உட்பட 401.எம்.பிக்கள் சொத்து விபரம் அறிவிக்கவில்லை

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, துணைத் தலைவர் ராகுல் காந்தி, பா.ஜ.க தலைவர்கள் எல். கே.அத்வானி, ராஜ்நாத் சிங் உட்பட தற்போதைய மக்களவையின் 401 எம்.பிக்கள் இதுவரை தங்கள் சொத்து மற்றும் கடன் விபரங்களை அறிவிக்காமல் உள்ளனர்.

தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் மக்களவை செயலாளர் அளித்துள்ள பதிலில் இந்த விபரம் தெரியவந்துள்ளது.

மக்களவை உறுப்பினர்கள் சொத்து அறிவிப்பு விதிகள் 2004 இன் கீழ் ஒரு உறுப்பினர் பதவியேற்ற 90 நாட்களுக்குள் சொத்து விபரங்களை மக்களவை செயலாளரிடம் அளிக்க வேண்டும். ஆனால் செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி வரை இந்த எம்.பிக்கள் சொத்து விபரங்களை எங்களிடம் அளிக்கவில்லை என்று மக்களவை செயலகம் கூறியுள்ளது.

மத்திய அமைச்சர்கள் சுஷ்மா சுவராஜ், உமா பாரதி, நிதின் கட்காரி, சமாஜ்வாதி கட்சித் தலைவர் முலாயம் சிங் யாதவ் ஆகியோரும் இந்தப் பட்டியலில் உள்ளனர்.

கட்சி வாரியாக பா.ஜ.க உறுப்பினர்கள் 209, காங்கிரஸ்-31, திரிணாமூல் காங்கிரஸ்-27, பிஜு ஜனதா தளம்-18, சிவசேனா-15, தெலுங்கு தேசம் கட்சி-14, அ.தி.மு.க-9, தெலுங்கானா ராஷ்டிர சமிதி-8, வை. எஸ்.ஆர். காங்கிரஸ்-7, லோக் ஜனசக்தி கட்சி-6, தேசிய மாநாடு கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சமாஜ்வாதி கட்சி தலா 4, அகாலி தளம், ராஷ்ட்ரிய ஜனதா தளம், ஆம் ஆத்மி கட்சி தலா 3, ஐக்கிய ஜனதா தளம், அப்னா தளம் தலா-2 என 401 எம்.பிக்கள் இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். இந்த எம். பிக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சொத்து விபரம் அளிக்காத பிற முக்கிய எம்.பிகள் மத்திய அமைச்சர் ஹர்ஷவர்தன், ராதா மோகன் சிங், ஆனந்த் கீதே, அனந்தகுமார்,ராம்விலாஸ்பாஸ்வான, வீரப்ப மொய்லி, மெஹ்பூபா முப்தி, கிரண் ரிஜிஜு மற்றும் சுப்ரியா சுலே ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (இ-3-5)





கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 34 சூரி செவ்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில் | தொ.இ: B/3715 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 44<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: BSC/ லண்டன் | தொ.இ: B/3716 |
| பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 41 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில் (அமெரிக்கா)<br>எதிர்பார்ப்பு: ஆண் விவாகரத்து பெற்றவர் | தொ.இ: B/3718 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 14 செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில் | தொ.இ: B/3719 |

இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 9 1/4<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L | தொ.இ: G/3724 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 33 3/4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் | தொ.இ: G/3726 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 26 1/4<br>உயரம்: 4'6"<br>தகைமை/தொழில்: தனியார் தொழில் | தொ.இ: G/3727 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 7 3/4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: MBBS | தொ.இ: G/3730 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதானதைக் கண்டித்து எழுந்த கண்டன குரல்கள்

ஐ.நா. விசாரணைக்கு ஒத்துழைத்தார் என்ற குற்றச் சாட்டின் பேரில் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதில் பூநகரி கிராஞ்சியைச் சேர்ந்த சின்னத்தம்பி கிருஸ்ணராசா (வயது 57) என்பவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவர் ஐ.நா. விசாரணைக்கான விண்ணப்பப்படிவங்களை வைத்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி நபர் கைது தொடர்பில் சில அரசியல் வாதிகளின் கருத்துக்கள் வருமாறு,

**த.தே.ம.முன்னணியின் பொதுச்செயலாளர் செ.கஜேந்திரன்**

ஐ.நா.விசாரணைக்குரிய சாட்சியப் பதிவுக்கான படிவங்களை வைத்திருந்தமை அல்லது ஐ.நாவுக்கு சாட்சியமளித்தார் என்ற குற்றச்சாட்டில் கிருஸ்ணராசா கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அந்த வகையில் இந்தச் சம்பவத்தை த.தே.ம.முன்னணி வன்மையாகக் கண்டிக்கிறது.

மனிதாபிமான சட்டமீறல் தொடர்பான உள்ளக விசாரணைக்கு இலங்கை அரசு சரியான நடவடிக்கை எடுக்காத பட்சத்திலேயே ஐ.நா. நேரடி விசாரணைக்கு உத்தரவிட்டது.

இந்தநிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் சாட்சியமளிப்பது இயல்பானது. இவ்வாறாக சாட்சியமளிப்பவர்களை கைது செய்வது ஐ.நாவுக்கு எதிரான நடவடிக்கையேயாகும்.

இந்த விடயத்தில் ஐ.நா.சபை மௌனம் காக்கக்கூடாது.

உண்மை நிலையை எடுத்துரைக்கக்கூடிய இலட்சக்கணக்கான சாட்சியங்கள் வன்னிப் பெரும் நிலப்பரப்பிலேயே உள்ளன. ஆகவே சாட்சியமளிக்க வருபவர்களை பாதுகாக்கவேண்டியது ஐ.நா.சபையின் கட்டாய கடமையாகும்.

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் இந்த யுத்தத்தை நிறுத்தி அங்குள்ள மக்களை காப்பாற்றுமாறு புலம்பெயர் தமிழர்கள், தமிழக சொந்தங்கள் போராட்டம் நடத்தினர், தீக்குளித்து மாண்டுபோயினர் அப்போது அவற்றையெல்லாம் ஐ.நா. மௌனமாகவே பார்த்துக்கொண்டிருந்தது.

யுத்தம் முடிவடைந்து விசாரணை என்ற விதிக்குள் ஐ.நா. வந்துள்ளபோது சாட்சியம் அளிப்பவர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

சாட்சியம் அளிப்பவர்களுக்கு புலி முத்திரை குத்தப்படுகின்றது. எனவே சாட்சியங்களை பாதுகாக்கவேண்டியதும் இக்கைது விடயத்தில் தலையிட வேண்டியதும் ஐ.நா.வின் கடமையாகும்.

அதுமட்டுமன்றி அனைத்து நாடுகளின் இராஜதந்திரிகளும் இந்தச் செயற்பாட்டை கண்டிக்கவேண்டும் என்றார்.

**வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன்**

ஐ.நா.சபையில் அங்கம் வகிக்கும் இலங்கை அச்சபையில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு கட்டுப்பட வேண்டும். அந்தத்தீர்மானத்தின்படி இங்கே வாழ்கின்ற மக்களும் ஐ.நாவின் தீர்மானத்துக்கு கட்டுப்பட வேண்டும்.

ஆனால் ஐ.நா.விசாரணைக்கு ஒத்துழைத்தார் என்ற குற் றச்சாட்டில் கிருஸ்ணராசாவை இலங்கை அரசாங்கம் கைது செய்திருப்பதன் ஊடாக இங்கு தமிழர்களுக்கிருக்கும் அடக்கு முறைகளை ஐ.நா.சபை புரிந்து கொள்வதற்கு நல்லதோர் சந்தர்ப்பமாகும்.

இங்குள்ள தமிழர்கள் எவ்விதமாக ஒடுக்கப்படுகின்றனர் என்பதை இச்சம்பவம் ஒன்றே எடுத்துக்காட்டுகின்றது.

எனவே கைதுசெய்யப்பட்ட கிருஸ்ணராசாவை நிபந்தனையின்றி விடுவிக்க வேண்டும்.

**வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்**

கிருஸ்ணராசாவை கைது செய்ததன் மூலம் ஐ.நாவின் முகத்தில் ஓங்கி அறைந்துள்ளது. இதனைத் தடுக்க ஐ.நா. விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கை அரசு கைது செய்யப்பட்ட நபரை விடுதலை செய்வதுடன் மன்னிப்பும் கோரவேண்டும்.

**வடமாகாண சபை உறுப்பினர் திருமதி.ச.அனந்தி**

இக்கைது நடவடிக்கையானது அடிப்படை மனிதவுரிமை மீறலாகும். எமக்கு ஏற்பட்ட அநீதியை ஊருக்குள்ளும் கதைக்கமுடியாமல் வெளியிலும் கதைக்க முடியாமல் மக்கள் மன அழுத்தத்துடன் வாழ்கின்றனர்.

இலங்கை அரசாங்கம் நான் செய்வதையே செய்வேன் என்ற எண்ணத்துடன் செயற்படுகின்றது. தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான சாட்சியங்களுக்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

ஆனால் தமக்கெதிரான சாட்சியங்களை சொல்வோரை கைது செய்கிறது. இது எவ்வகையில் நியாயம். நடை பிணங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்கள் தமது சொந்தக் கருத்தை வெளியிட முடியாதளவில் குரல்வளை நசுக்கப் பட்டிருக்கிறது. (அ)

# பன்னங்கண்டியில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்கின்றது

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள பன்னங்கண்டி கிராமத்தில் சட்ட விரோத மணல் அகழ்வு இடம் பெறுவதாக பன்னங்கண்டி கிராம அபிவிருத்திசங்கத்தினால் குற்றம்சாட்டப்பட் டுள்ளது.

ஏற்கனவே மேற்படி கிராமத்தின் கனகராயன் ஆற்றுப் படுகை மணல் அகழ்வு மேற் கொள்வதற்கான பிரதேசமாக கனியவளத் திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**தடுத்து நிறுத்துவார்களா அதிகாரிகள்**



ஆனால்வழங்கப்பட்ட இடத்தில் மணல் அகழ்வு மேற்கொள்ளப்படாமல் தனியார் மற்றும் அரச காணிகளில் சட்ட விரோதமான முறையில் மணல் அகழ்வு இடம்பெறுவதாக இச் சங்கத்தினரால் குற்றம் சாட்டப்படுகிறது.

இம் மணல் அகழ்வி னால் அக் காணியில் காணப்படும் பயன்தரும் மரங்கள் அழிக்கப்படுவதுடன் மண்ணரிப்பு ஏற்படும் என்பதையும் மழை காலத்தில் குடிமனையினுள் வெள்ளம் புகும் அபாயமுள்ளது என்பதனையும் இச் சங்கத்தினர் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகரிடமும் கனிய வளத் திணைக்களத்தினரிடமும் தெரியப்படுத்தினர்.

ஆயினும் இதுவரையில் எவ்விதமான முன்னேற்ற நடவடிக்கையும்எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கனகராயன் ஆற்றுப்படுக்கையில் அகழ்ந்தெடுக்கப்படும் மணல், கிளிநொச்சி மாவட்டத்தின் உள்ளூர் தேவைக்கே பயன்படுத்த வேண்டுமென்பது நிபந்தனையாகும்.

ஆனால் சட்ட விரோதமாக அகழ்ந்தெடுக்கப்படும் மணல் கனரக வாகனங்கள் மூலம் வெளிமாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதாக இச் சங்கத்தினரால் கனிய வளத் திணைக்கள அதிகாரிகளிடம் பல தடவைகள் சுட்டிக்காட்டப் பட்டது.

எனவே உரிய அதிகாரி கள் மேற்படி கிராமத்திற்கு வருகை தந்து இச் சட்ட விரோத மணல் அகழ்வைதடுத்துநிறுத்தவேண்டுமெனகிராமமக்கள்கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-277)

வன்னி வலம்

# நீர்த்தேக்கத்தில் முதலையை விட்டது வனஜீவராசிகள் திணைக்களம்

## அப்பகுதி மக்கள் கடும் அதிருப்தி

வவுனியா புகையிரத வீதி ஆதி விநாயகர் ஆலயத்தின அருகில் உள்ள வைரவபுளியங்குளம் நீர்த் தேக்கத்திற்குள் வன ஜீவராசிகள் திணைக களத்தினால் முதலை விடப் பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்

கடந்த தீபாவளி தினத்தன்று காலை வாகனம் ஒன்றில முதலையொன்று கொண்டு வரப்பட்டு வவுனியா வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் அக் குளத்திற்குள் அதனை விட்டுள்ளனர். இது தொடர்பில் அக்குளத்தை பராமரித்து வரும் கமக்கார அமைப்பிடமோ அல்லது அக் குளத்தினை பயன்படுத்தும் மீனவர்களிடமோ எதுவும் தெரிவிக்கவில்லை என அவரகள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் அக் குளத தின் கீழ் விவசாயத்தில் ஈடுபடும் கமக்கார அமைப்பின் தலைவர் க.சுமந்திரன் தெரிவிக்கையில்,

வைரவபுளியங்குளம்எமது கமக்கார அமைப்பின் கீழேயே இருக்கிறது. இக் குளத்தை நம்பியே நாம் சிறுபோகம், பெரும்போகம் என்பவற்றில் ஈடுபட்டு வருகின்றோம். இக் குளத்தில் இறங்கி வலை கட்டி நன்னீர் மீன்பிடித் தொழிலில் 15 குடும்பங்கள் வரை ஈடு பட்டு வருகின்றனர். அவரகளின் வாழ்வாதாரம் இதை நம்பியே உள்ளது.

இக் குளத்தின் நீர் கால் நடைகளின் நீர்தேவைக்காக பயன்படுத்தப்படுகிறது. அக்குளத்தின் இரண்டு கரைகளிலும் நெருக்கமான வீடுகள் காணபபடுகின்றன. மழை காலங்களில் குளத்து நீர் அதிகரிக்கும் போது அயலிலுள்ள வீட்டு வளவுகளுக்குள்ளும் நீர் செல்வதுடன் நீர் பாய்ந்து செலலும் பாதையும் வீட்டு காணிகளுக்குள் இருக்கிறது.

இவ்வாறான நிலையில் இக் குளத்தில் எப்படி முதலையை விடமுடியும். இது எதர் காலத்தில் பாரிய ஆபத்துக் களைக் கூட ஏற்படுத்தலாம். முதலை விட்டமை தொடர்பில எவருக்கும் தெரியப்படுத்தவும் இல்லை எனத் தெரிவித்தார்.

குளத்தின் அருகில் உள்ள வீட்டுச் சிறுவர்கள் தினமும் விளையாடும் ஒரு குளத்தில் முதலை விடப்பட்டமை தொடர்பில் மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (2-250)

# கௌதாரி முனை வீதி புனரமைக்கப்படுமா?

## மக்கள் அங்கலாய்ப்பு

(பூநகரி)

பூநகரி கௌதாரிமுனை வீதியானது நீண்டகாலம் செப்பனிடப்படாது கிரவல் வீதியாக காணப்படுவதால் அப்பாதையூடாக பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதியானது பூநகரி பரமங்கிராய் சந்தியில் ஆரம்பித்து கௌதாரி முனை கல்முனை வரையான தூரம் தார் போடப்படாமல் கிரவல் வீதியாகவே இருந்து வருகின்றது.



தற்போது இப்பிரதேசத்தில் மண் அகழ்வு நடவடிக்கை இடம்பெறுவதால் அப்பாதையூடாக கனரக வாகனங்கள் தினந்தோறும் பயணிப்பதால் பெரிய குழிகள் உருவாகி மழை நீர் தேங்கியுள்ளது.

குறித்தவீதியிலேயே கிளி/விநாசியோடை அ.த.க.பாடசாலை அமைந்துள்ளது. இதனால்மாணவர்களும்அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

குன்றும்குழியுமாக காணப்படும் இவ்வீதியில் விபத்துக்கள் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இவ் வீதி பொது மக்கள் நடமாட்டம், வாகன போக்குவரத்துக்கள் அதிகரித்த வீதியாகவுள்ளது.

இது தொடர்பில் பொது மக்களால் பூநகரி பிரதேச செயலகத்திற்கு கடிதம் மூலமா கவும் நேரடியாகவும் தெரியப்படுத்திய போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லையென பொது மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். எனவே குறித்த வீதியை காலம் தாழ்த்தாது விரைந்து செப்பனிட்டு தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2)



தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கரைதுறைப்பற்று இளைஞர் கழக பிரதேச சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், சத்திய சாய்பாபா சேவை மன்றம், சர்வோதயம், தண்ணிமுறிப்பு இராணுவத்தினர் [illegible] தீபாவளி கலாசார நிகழ்வு கடந்த 24ஆம் திகதி தண்ணிமுறிப்பு ஆறுமுகத்தான்குளம் பாடசாலை வளாகத்தில் நடைபெற்றபோது... (படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் சுதந்திரத்தோடு பிறக்கிறான். ஆனால் எங்கும் அடிமைத்தளையில் பிணைப்புண்டு கிடக்கிறான். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நாய்த் தலை கொழும்பு போகுது சாட்சியம் அளித்தால் கைது நடக்குது

தெல்லிப்பழையில் நாயொன்று ஒரே நாளில் நான்கு பேரைக் கடித்துக் குதறியுள்ளது.

இவ்வாறு நான்கு பேரைக் கடித்த அந்த நாய் அன்றைய தினமே இறந்து போயிற்று.

குறித்த நாய்க்கு நீர் வெறுப்பு நோய் உள்ளதா? என்பதை அறிவதற்காக நாயின் தலை கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

மனிதர்கள் எவரையும் கடிக்காமல் அந்த நாய் இறந்து போயிருந்தால் அந்த நாயின் தலையை கொழும்புக்கு அனுப்ப வேண்டிய தேவை ஏற்பட்டிருக்க மாட்டாது.

ஆக, மனிதர்களைக் கடித்தமை தொடர்பில் நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்ற அடிப்படையில் நாயின் தலை கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமிழர்களை யார் அடித்தாலும் கடித்தாலும் சுட்டாலும் அவர்களுக்கு விசர் என்று அறிக்கை விடுகின்ற ஒரு கலாசாரம் இந்த நாட்டில் இருப்பதன் காரணமாக, தெல்லிப்பழையில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட நாய்த் தலையின் பரிசோதனை முடிவும் நாய்க்கு விசர் என்பதாக அமையும் என்று அடித்துக் கூறலாம்.

அண்மைக் காலமாக நாய்க் கதைகளே செய்தி ஊடகங்களில் இடம் பிடித்துவருகின்றன. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வட பகுதிக்கான விஜயத்தோடு ஆரம்பித்த நாய்க் கதை இன்னும் ஓய்ந்தபாடில்லை.

இது ஒரு புறம் இருக்க, நாலு பேரை ஒரே நாளில் கடித்து அன்றைய தினமே இறந்து போன நாயின் தலையை பரிசோதிப்பதற்காக கொழும்புக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றால்,

வன்னிப் போரில்-கடந்த கால யுத்த நடவடிக்கைகளின் போது-எமது மக்களைச் சுட்டுக் கொன்ற; கடத்திச் சென்ற; காணாமல் போக செய்தவர்கள் மீது விசாரணை நடத்துவது கட்டாயமானதல்லவா?

மனித வதையை செய்தவர்கள் இன்னமும் உயிரோடு இருக்கும் போது, அவர்கள் குறித்து விசாரணை நடத்துவதும், பாதிக்கப்பட்டவர்கள் சாட்சியம் அளிப்பதும் உண்மையைக் கண்டறிவதற்கு மிகவும் அவசியமானவை.

ஆனால் இங்கோ சாட்சியம் அளிப்பதற்கு விண்ணப்பம் கொடுத்தவரை கைது செய்கின்ற கொடுமைத்தனம் நடக்கிறது.

பாதிக்கப்பட்டவர் தனக்கு ஏற்பட்ட பாதிப்பைக் கூறுவதற்கான உரிமையும் சுதந்திரமும் உண்டு. அதற்கு எவர் தீங்கிழைக்கின்றாரோ அவர் நடந்தேறிய அக்கிரமத்துடன் தொடர்புபட்டவராகவே இருக்கமுடியும்.

அக்கிரமங்கள் தொடர்ந்தும் அரங்கேறும் என்று நினைப்பது மகாதவறு. கைதுகள் மூலமாக, பாதிக்கப்பட்டவர்கள் சாட்சியம் அளிப்பதைத் தடுக்க நினைப்பது இந்த நாட்டில் மீண்டும் அமைதி இன்மையை ஏற்படுத்துவற்கு வழிவகுக்கும் என்பது உணரப்பட வேண்டும்.

அதேசமயம் ஏற்பட்ட பாதிப்பை, இழப்பை வெளிப்படுத்தினால் ஆபத்து ஏற்படும் என்று காட்டுவதற்காக கைதுகள் நடக்குமாயின் பாதிக்கப்பட்டவர்கள் சாட்சியம் அளிப்பதற்கு, மாற்று வழிகளும் கால அவகாசங்களும் தேவைப்படுவதாக இருக்கும்.

அதட்டல், வெருட்டல் மூலமாக உண்மைகள் மறைப்படுவதை ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது என்பதால் இது தொடர்பில் தென்பகுதியைச் சேர்ந்த மனித நேய அமைப்புகளின் ஆதரவைப் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதும் அவசியம்.

நான்கு பேரைக் கடித்த நாயின் தலை கொழும்புக்கு அனுப்பப்படுகின்றது எனின் அப்பாவிப் பொது மக்களின் உயிர்களை வதை செய்த மனிதத் தலைகள் கீழே விழுத்தப்பட வேண்டும். இதுவே நீதியின் தீர்ப்பாக இருக்க முடியும்.

# குளங்கள் புனரமைக்கப்படாமையால் வயல் நிலங்கள் தரிசு நிலமாகின்றன

## விவசாயிகள் கவலை

(குருமன்காடு)

வவுனியா பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட சேதமடைந்த குளங்கள் புனரமைக்கப்படாமையால் பெரும் பாதிப்பை எதிர்நோக்கி வருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

வவுனியா கமநலசேவைகள் திணைக்களத்திற்குட்பட்ட ஆறறுப்புலம் அணைக்கட்டு மற்றும் இளமருதங்குளம் ஆகிய குளங்கள் கடந்த 2010 ஆம் ஆண்டு உடைப்பெடுத்தது.

எனினும் இது வரையில் அக்குளங்கள்புனரமைக்கப்படாமையால் அக்குளத்தை நம்பி விவசாயம் செய்து வந்த விவசாயிகளின் சுமார் 115 ஏக்கர் நெற்செய்கையை மேற்கொள்ள முடியாதுள்ளதாக அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனி மனித முயற்சியால் அணைக்கட்டு உருவாக்கப்பட்டு அப்பகுதி விவசாய நிலங்களுக்கு நீர்ப் பாய்ச்சிய நிலையில், அணைக்கட்டு வாய்க்கால் அரசாங்கத்தால் உள்வாங்கப்படடிருந்தது.

இந்நிலையில் ஆற்றுப்புலம் அணைக்கட்டு பல தடவைகள் உடைப்பெடுத்து விவசாயம் செய்ய முடியாத நிலைமையை ஏற்படுத்தியது.

இந்தச் சந்தர்ப்பங்களில் அப்பகுதி வவசாயிகள் தமது முயற்சியினால் சில திருத்தங்களை மேற்கொண்டு அணையை புனரமைத்து விவசாயத்தை மேற்கொண்டு வந்திருந்தனர்.

எனினும் தொடர்ச்சியாக அவ் அணையை புனரமைக்க முடியாமையால் தற்போதுபெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இதேவேளை அவ் அணைக்கு அண்மையில் உள்ள இளமருதங்குளமும் 2010 ஆம் ஆண்டு உடைப்பெடுத்த நிலையில் இதுவரை எந்த திட்டத்தினூடாகவும் புனரமைக்கப்படவில்லை.

இந்த குளத்திற்குட்பட்ட விவசாய நிலங்கள் பயிர்ச்செய்கை செய்யப்படாமல் தரிசாகிப்போயுள்ளதாகவும் அப்பிரதேச விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந் நிலையில் இக்குளத்தையும் அணையையும் புனரமைத்து தந்து தமது வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல விவசாய திணைக்கள அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-250)

# காலபோக நெற்செய்கைக்கு மானிய உர விநியோகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ள தேவையான மானிய உரங்களை விநியோகம் செய்யும் நடவடிக்கைகள் கடந்த வாரம் முதல் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர், இ.தயாரூபன் நேற்று தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 59 ஆயிரம் தொடக்கம்.60 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்தவகையில் இவ்வருடம் 75 சதவீதமான நிலப்பரப்பில் நெற்செய்கைகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் விவசாயிகளால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நெற்செய்கைகள் ஆரம்பிக்கப்பட்டும், தங்களுக்கான மானிய உரங்கள் வழங்கப்படவில்லையென விவசாயிகள் குற்றம் சுமத்தினார்கள்.

அத்துடன், அண்மையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விவசாய ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திலும் இந்த விடயத்தை கிளிநொச்சி மாவட்ட விவசாய அமைப்புக்கள் சுட்டிக்காட்டியிருந்தன.

இதன்போது, மானிய உரங்களை விரைந்து வழங்க நடவடிக்கை எடுப்பதாக கிளிநொச்சி மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் உறுதியளித்தார்.

இதனையடுத்து, மானிய உரங்கள் வழங்கும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் பிரகாரம் கிளிநொச்சி, புளியம்பொக்கணை, அக்கராயன், பூநகரி, இராமநாதபுரம், முழங்காவில், பளை, உருத்திரபுரம் ஆகிய 8 கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாக இந்த மானிய உரங்கள் விநியோகம் செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# 4 மில்லியன் ரூபாய் ஒதுக்கீட்டில் வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

(மன்னார்)

மன்னார் நகர மத்தியில் அமைந்துள்ள தனியார் பேருந்து நிலையத்தை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் வட மாகாண மீன்பிடி,போக்குவரத்து, கிராமிய அபிவிருத்தி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனீஸ்வரனால் நேற்றைய தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மீன்பிடி, போக்குவரத்து அமைச்சினால் மன்னார் நகர சபைக்கு வழங்கப்பட்டுள்ள 4 மில்லியன் ரூபாய் நிதியில் மேற்படி வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிதியுதவி மூலம் குறித்த பேருந்து நிலையத்தில் மூன்று பேருந்து தரிப்பிடங்களும் உள் வீதிக்கு தாரிடல் வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன.

வளீமண்டலவியல் திணைக்களம் இயங்கிய 3/4 ஏக்கர் காணியிலேயே தற்போது இந்த தனியார் பேருந்து நிலையம் அமைக்கப்படவுள்ளது.

மன்னார் நகர சபையினால் வளிமண்டலவியல் திணைக்களத்திற்கு தலைமன்னார் வீதியில் சேமக்காலைக்கு முன்பாக உள்ள 5 ஏக்கர் காணி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பேருந்து நிலையத்தில் [illegible]

[illegible]வில் நவீன முறையிலான குளியலறை, மலசலகூடங்கள் என்பன அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மன்னார் நகர சபை தலைவர் ஞானப்பிரகாசம், உப தலைவர் யேசுதாசன் ஜேம்ஸ், நகரசபை உறுப்பினர்கள், நகர சபையின் செயலாளர் பிறிட்டோ மற்றும் பலர் கலந்து கொண்டனர். (அ-2)

# மாற்றுவழியை பாவியுங்கள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோவிலில் இடம் பெற்று வரும் கந்தசஷ்டி விரதவிழாவை முன்னிட்டு ஆலயச்சூழலினூடாக இடம்பெற்று வரும் வாகனப் போக்குவரத்துகள் இன்று செவ்வாய் மற்றும் நாளை புதன்கிழமைகளில் பிற்பகல் 2 மணிமுதல் இரவு 7 மணிவரை தடைசெய்யப்படவுள்ளதனால் வாகன உரிமையாளர்கள் மாற்றுவழியை பயன்படுத்துமாறும் ஆலயச் சூழலில் அமைதியை பேணுவதற்கு ஒத்துழைப்பு நல்குமாறும் யாழ்.மாநகரசபை ஆணையாளர் செ.பிரணவநாதன் அறிவித்துள்ளார். (இ-3)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## கொடுத்து மகிழுங்கள்



- பெற்றுக் கொள்பவர் அல்ல. எப்போதும் கொடுத்து மகிழ்பவரே பேறு பெற்றவர்.
- உன்னைத் தவிர உலகில் வேறு யாராலும் உன்னை மகிழ்விக்க முடியாது.
- தன்னலத்தை ஒழிப்பதில் தான் உண்மையான மகிழ்ச்சி அடங்கியுள்ளது.
- மன ஒருமையுடன் பணியில் ஈடுபடும்போது அதன் பயன் அழியாச் சிறப்புடன் நிலைத்திருக்கும்.
- அழுகையே பலவீனத்தின் அறிகுறி. அது ஒருவனை அடிமைத்தனத்தில் தள்ளி விடும்.
- சுதந்திரமாகச் செயற்படுபவர்கள் தான் ஆலமரம் போல், வேகமாய் வளர்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி



யாழ்ப்பாணம் பாடசாலைகள் விளையாட்டு சங்கத்தினால் நடத்தப்படும் 2014 ஆம் ஆண்டுக்கான 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடர் எதிர்வரும் நவம்பர் மாதம் 6,7 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்பும்பாடசாலைகள் எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் பாடசாலைகள் விளையாட்டு சங்கத்தின் செயலாளர் திருமாறனிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (கு)

# விளையாட்டு மைதானங்களுக்கான அடிக்கல் நாட்டு விழா இடம்பெற்றது





கூடைப்பந்து, வலைப்பந்து, கரப்பந்து மைதானங்களுக்கான அடிக்கல்லை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் சந்திரசிறி ஆகியோர் நாட்டி வைத்தனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்.பழையபூங்கா வளாகத்தினுள் மும்மத சமயத் தலைவர்களின ஆசியுடன் அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது.வடமாகாண ஆளுந ரின் நிதியு தவியுடன் இம் மைதானங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதன்போது உரையாற்றிய கரப்பந்தாட்ட சங்கத் தலைவர் மனோகரன் மூன்று விளையாட்டுத் துறைகளுக்கான மைதானங்களை அமைப்பதற்கு இடத்தை ஒதுக்கித்தந்து, அதற்கான நிதியுதவி யையும் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆளுநர் சந்திசிறி ஆகியோருக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று கூறினார்.

மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் சந்திரசிறி தனது உரையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளு க்கு இணங்க அவரது விடா முயற்சிக்கு பலன் கிடைத்துள்ளது.

யாழ்.பழைய பூங்கா வளாகம் யாரும் நெருங்க முடியாத பகுதியாக காட்சியளித்தது. ஆனால் இன்று அந்த நிலைமாற்றப்பட்டு சிறுவர்களுக்கான பொழுது போக்கு மையமாகவும், மூன்று விளையாட்டு திடல்களாகவும் மாறுகின்றமை கண்கூடாக காணக்கூடியதாகவுள்ளது. இதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு தனது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றும் தெரிவித்தார்.

இதில் உரையாற்றிய அமைச்சர டக்ளஸ் தேவானந்தா எமது பிள்ளைகள் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்குகொண்டு தமது திறமைகளை வெளியுலகிறகு எடுத்துக் காட்ட வேண்டு மென்பதே எனது எதிர்பார்ப்பாகவுள்ளது.

வடபகுதி மாணவர்கள் கல்வியில் மட்டும் நின்றுவிடாது விளையாட்டுத்துறை உட்பட சகல துறைகளிலும் முன்னேற்றம் காணவேண்டும். மேலும் எமது மாணவர்கள் விளையாட்டுத்துறையில் மேலும் பலசாதனைகள் படைக்க வேண்டுமென்பதுடன் விளையாட்டுத்துறைக்கு தேவையான உதவிகளை தொடர்ந்தும் செய்யத் தயாராக இருப்பதாகவும் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றும் தெரிவித்தார்.

தொடர்ந்து மைதான நிர்மாணப் பணிகள் துரிதகதியில் முன்னெடுக்கப்பட வேண்டுமென துறை சார்ந்தவர்களுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்தார். (இ)

வலம்புரி SPORTS
விளையாட்டுச் செய்திகள்

# யூனிஸ்கான் புதிய சாதனை



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் 2 இன்னிங்ஸிலும் சதம் அடித்த பாகிஸ்தான் வீரர் யூனிஸ்கான் புதிய சாதனையை படைத்துள்ளார்.

92 ஆவது டெஸ்டில் விளை யாடும் யூனிஸ்கானுக்கு இது 26 ஆவது சதமாகும். இதன் மூலம் டெஸ்டில் அதிக சதம் அடித்த பாகிஸ்தான் வீரர் என்ற சாதனையை பெற்றார்.

இதற்கு முன்பு இன்சமாம் 25 சதம் (120 டெஸ்ட்) அடித்து இருந்தார். முதல் இன்னிங்ஸில் இன்ச மாமின் சாதனையை சமன் செய்த அவர், இரண்டாவது இன்னிங் ஸில் இன்சமாமின் சாதனையை முறியடித்து விட்டார்.டெஸ்டில் அதிகம் சதம் அடித்த சாதனை வீரரான யூனுஸ்கான் இது பற்றி கூறுகையில், அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் இருந்து என்னை நீக்கியதால் டெஸ்ட் தொட ரில் இருந்து விலக முடிவு செய் தேன். 20 ஓவர் மற்றும் ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் தோற் றதால் நான் எனது முடிவை மறு பரிசீலனை செய்தேன்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நான் சதம் அடிக்காததால் இது சவாலாகவே இருந்தது. இரண்டு இன்னிங்ஸிலும் சதம் அடித்தது எனக்கு மகிழ்ச்சியை அளித்தது என்று கூறியுள்ளார். (கு)

# தயார்படுத்தல்கள் இல்லாமல் இந்தியா பயணமாகின்றோம்

## மத்தியூஸ்



இந்திய அணியுடன் விளையாட வுள்ள ஒருநாள் சர்வதேசப் போட்டித்தொடருக்கு சரியான தயார்படுத்தல்களை செய்யவில்லை என இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் தங்களால் இயன்றளவு பங்களிப்பை வழங்கி சிறப்பாக விளையாடுவோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இடைவெளியின் பின் பயிற்சிகளை ஆரம்பித்து ஆரம்ப கட்ட உடல் தகுதி பயிற்சிகளை மாத்திரமே மேற்கொண்டதாகவும், சீரற்ற காலநிலை பயிற்சிகளை சரியாக செய்ய முடியாமல் செய்தது. இந்த நிலையில் இந்த தொடர் திடீர் என முடிவு செய்யப்பட்டது.

எனவே முழுமையாக பயிற்சிகளை பெறாமலேயே இந்த தொடரில் பங்குபற்றுகின்றோம். இந்தியாவில் முழுமையான பயிற்சிகளை பெற முடியாது எனவும் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து தொடர் மீதே முழுமையான கவனம் செலுத்தி வந்தோம். சிறப்பான உடற் தகுதியை பெறுவதற்கான பயிற்சிகளில் ஈடுபட்டோம். 3 நாட்கள் மட்டுமே துடுப்பாட்ட பயிற்சிகளை செய்துள்ளோம். எனவே இந்த தொடர் மாத்திரம் அன்றி இங்கிலாந்து தொடருக்கான தயார்படுத்தல்களையும் செய்ய முடியாமல் போயுள்ளது எனவும் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

இந்திய தொடர் அறிவிக்கப்பட்ட உடனேயே குமார் சங்கக்கார தங்கள் பயிற்சிகள் குழப்பப்பட்டுள்ளன என்ற கருத்துகளை வெளியிட்டு இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த தொடருக்காக இலங்கை அணி இன்று இந்தியா பயணமாகவுள்ளது. (கு)

# புதிய சாதனையுடன் சானியா சம்பியன்



இந்தியாவின் டெனிஸ் வீராங்கனை சானியா மிர்ஸா ஜோடி. சிங்கப்பூரில் நடைபெற்ற மார்டினா நவ்ரடிலோவா கிண்ணத்தை புதிய சாதனையுடன் வெற்றி பெற்றுள்ளது. சானியா மிர்ஷா, சிம்பாவே நாட்டின் கரா ப்ளக் உடன் இணைந்து விளையாடி வெற்றி பெற்றார்.

இந்த தொடரில் சானியா மிர்ஸா இம்முறையே முதற்தடவையாக கலந்து கொண்டு இருந்தார். இறுதிப் போட்டியில் மிர்ஸா, ப்ளக் ஜோடி 6 இற்கு 1, 6 இற்கு 0 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றது. மகளிர் இரட்டையர் போட்டி களில் இறுதிப் போட்டியில் பெறப்பட்ட மிகப் பெரிய வெற்றி இதுவாகும்.

சானியா மிர்ஸா முதற் தடவையாக இந்த தொடரில் பங்குபற்றி வெற்றி பெற்றுள்ள அதேவேளை கராப்ளக் ஏற்கனவே இரண்டு தடவைகள் வேறு ஜோடியுடன் இணைந்து வெற்றி பெற்றுள்ளார். நடப்பு சம்பியன் ஜோடியான ஹெயிஸ் சுவேய் மற்றும் பெங்ஷ்ஜ ஜோடியை வென்றே மிர்ஸா, ப்ளக் ஜோடி சம்பியன் ஆகியுள்ளது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லியடியில் பேருந்து நிலையம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நெல்லியடியில் 3.8 மில்லியன் செலவில் பேருந்து நிலையத்திற்கான அடிக்கல்லை வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் நாட்டி வைத்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை காலை 10 மணியளவில் மன்னார் தனியார் பேருந்து நிலையத்துக்கு அடிக்கல் நாட்டிய வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து கிராமிய அபிவிருத்தி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனீஸ்வரன் நண்பகல் 12 மணியளவில் யாழ்ப்பாணம் நெல்லியடி பேருந்து நிலையத்துக்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

இப் பேருந்து நிலையமானது சுமார் 3.8 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டவுள்ளது. இதற்கான தனது அமைச்சினூடாக 2 மில்லியன் நிதியும் அத் தோடு மாகாண சபை உறுப்பினர்களின் ஊடாக ஒரு தொகை நிதியும் மிகுதி முதலமைச்சர் ஊடாகவும் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்விற்கு வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களான சிவயோகம், சிவாஜிலிங்கம், சுகிர்தன், கஜதீபன், பரஞ்சோதி ஆகியோரும் அமைசசரின் செயலாளர் வரதீஸ்வரன் அவர்களும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், தனியார் பேருந்து உரிமையாளர்கள் முச் சக்கர வண்டி சங்கத் தலைவர் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. ஸ்ரீ (எ-4)

# ஒத்துழைக்கத் தயார்

## கமலேஸ் சர்மா தெரிவிப்பு

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த ஒத்துழைப்பு வழங்கத் தயார் என பொது நலவாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஸ் சர்மா தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் காலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவிற்கும் பொது நலவாய நாடுகள் அமைப்பிற்கும் இடையில் சிறந்த புரிந்துணர்வு காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

இரு தரப்பிற்கும் இடையிலான உறவுகள் மூலம் சிறந்த நன்மைகள் கிடைக்கப் பெறுவதாகத் தெரிவித்துள்ளார்.

கமலேஸ் சர்மா ஜனாதிபதியை சந்தித்த போது, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் செனுகா செனவிரட்ன ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

இதேவேளை நேற்றுமுன் தினம் யாழ்ப்பாணத்துக்கு வந்த கமலேஷ் சர்மா வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# தமிழர்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வேண்டும்!

## பாராளுமன்றில் சிறிதரன் எம்.பி தெரிவிப்பு

இலங்கையில் தமிழ் மக்கள் ஈழம் என்ற தனி நாட்டை நோக்கி தள்ளப்படாமல் இருக்க அவர்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேறறு நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளது.

புலம்பெயர் தமிழர்கள் தனியான தமிழ் நாட்டுக்காக அழுத்தங்களை கொடுக்கவில்லை. அவர்கள் தமிழர்களுக்கான அர்த்தமுள்ள அரசியல் தீர்வுக்கே அழுத்தங்களை கொடுத்து வருகின்றனர் என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

நெடுஞ்சாலைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் மாத்திரம் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு சட்ட மீதான விவாதத்தில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

வடக்கில் பல பிரதேசங்களில் இராணுவம் தொடர்ந்தும் பொதுமக்களின் நிலங்களை ஆக்கிரமித்துள்ளது.

இன மோதல்கள் நாட்டின் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள போதிலும் போர் முடிந்து 5 வருடங்களின் பின்னர் கூட வரவு செலவுத் திட்டத்தின் மூலம் தமிழ் மக்களுக்கு உதவி செய்ய முடியாமல் போயுள்ளது எனவும் சிறிதரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும், ஜனாதிபதி யாழ்ப்பாணத்திற்கு வரும்பொது ஓட்டப் போட்டிக்கு பயிற்சி வழங்குவதுபோன்று பாடசாலை மாணவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. எவ்வாறு ஜனாதிபதியைப் பார்த்து சிரிப்பது. கொடிகள் அசைப்பது போன்ற பயிற்சிகள் நடந்து முடிந்துள்ளது.

யாழ்.இந்துக் கல்லூரியில் பொலிஸார் நேரடியாகப் பயிற்சி வழங்கியுள்ளனர்.

இலங்கைத் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் புரிந்து கொள்ள முடியாத அதல பாதாள வேறுபாடு உள்ளது.

ஜனாதிபதி கிளிநொச்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வைக்கோல் பட்டடை நாய்போன்று உள்ளதாக தெரிவித்திருந்தார்.

வைக்கோல் பட்டடைகளை இரும்புப் பட்டறைகளாக மாற்றவேண்டாம் என இங்கு தெரிவித்துக்கொள்கிறோம் என சிறிதரன் எம்.பி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சிறிதரன் எம்.பி சபையில் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது அஷ்வர் எம்.பி கூச்சல் போட்டதுடன், இடை நடுவில் எழும்பி மாற்றுக் கருத்துக்களை கூறினார்.

இதன்போது, பாராளுமன்றில் புத்தளத்துக் கழுதைகள் போன்று ஊளையிடுவதை நிறுத்துமாறு சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்தார். (எ-11)

# ஜனாதிபதியின் பிரசாரத்திற்கு விடுதலைப்புலிகளின் பணம்?

## ஐ.தே.க சந்தேகம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது மகிந்தவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு விடுதலைப் புலிகளின் பணம் பயன்படுத்தப்படலாம் என்று ஐ.தே.க. சந்தேகம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஐ.தே.க.வின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இந்த சந்தேகத்தை எழுப்பியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்துள்ள அவர், ஐரோப்பிய ஒன்றியத்தில் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது. அங்குள்ள நாடுகளில் சுமார் 25 கோடி அளவில் விடுதலைப் புலிகளுக்கு சொத்துக்கள் உள்ளன.

தற்போதைய நிலையில் கே.பி, கருணா அம்மான் போன்ற விடுதலைப் புலிகளின் தலைவர்கள் அரசாங்கத்தின் நிழலில் இருக்கின்றார்கள். அவர்கள் ஊடாக இந்தப் பணத்தைப் பெற்றுக்கொள்வதில் அரசாங்கம் ஈடுபடலாம்.

அவ்வாறு விடுதலைப் புலிகளின் பணத்தை கைப்பற்றி அரசாங்கத்தின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தக் கூடும என்ற சந்தேகம் எங்களுக்கு உண்டு.

2005-ம் ஆண்டிலும் விடுதலைப் புலிகளின் பணம் அரசாங்கத்தின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்குப் பயன்பட்டது. அதனை மங்கள சமரவீர மற்றும் ஸ்ரீபதி சூரியாராச்சி ஆகியோர் அம்பலப்படுத்தி இருந்தார்கள்.

இவ்வாறான ஒரு உள்நோக்கத்துடன் தான் விடுதலைப் புலிகளின் தடை தொடர்பான வழக்கில் அரசாங்கம் ஆர்வம் காட்டவில்லை. தடைநீக்கப்பட்டதற்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தற்போது குற்றவாளிகளுக்குத் தண்டனை என்பதே இல்லை என்றாகிவிட்டது. ஏனெனில் எல்லாக் குற்றவாளிகளும் அலரிமாளிகைக்குள் தான் போய்ப் பதுங்கிக் கொள்கின்றார்கள். அவர்களுக்கு அரசாங்கத்தின் ஆதரவு கிடைக்கின்றது.

ஐ.தே.க.ஆட்சிக்கு வந்தால் கடந்த காலத்திலிருந்து செயற்பாட்டுக்கு வரும் வகையில் சட்டதிருத்தம் கொண்டு வருவோம். தற்போது குற்றம் செய்துள்ளவர்களை அந்த சட்டத்திருத்தத்தின் மூலம் தண்டிப்பதற்கு நடவடிக்கை எடுப்போம் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (எ-11)

# மலேசியா சென்ற ரணில் புலிகளைச் சந்தித்தாரா?

## சிங்கள ஊடகம் கேள்வி

விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களை ரணில் விக்கிரமசிங்க மலேசியாவில் சந்தித்திருப்பதாக சிங்கள ஊடகம் ஒன்று மீண்டும் பரபரப்பைக் கிளப்பியுள்ளது.

மவ்பிம இரிதா என்ற சிங்களப் பத்திரிகையில இந்தச் செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் சிங்கப்பூருக்கான குறுகிய கால விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். மருத்துவ பரிசோதனைக்காக அவர் சிங்கப்பூர் செல்வதாக அப்போது தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் ரணில் விக்கிரமசிங்க சிங்கப்பூரிலிருந்து தரை மார்க்கமாக மிகவும் இரகசியமாக மலேசியாவுக்கு விஜயம் மேற்கொண்டதாக மவ்பிம பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

மலேசியாவில் விடுதலைப் புலிகளின் முக்கிய அமைப்பான குளோபல் தமிழ் போரம் (ஜீ.ரி.எப்) அமைப்பின் பிரதிநிதிகள் அக்காலப் பகுதியில் ஒன்றுகூடியிருந்தார்கள். அவர்களை சந்திக்கவே அவர் அவ்வாறு சென்றிருக்கக் கூடும் என்றும் அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

மேலும் ரணிலின் சிங்கப்பூர் மற்றும் மலேசிய பயணத்துக்கான செலவை விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான இலங்கைத் தமிழர் ஒருவர் ஏற்றுக் கொண்டதாகவும், குறித்த சந்திப்புக்கு அவரே ஏற்பாடு செய்துள்ளதாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது இது தொடர்பாக அரசாங்கப் புலனாய்வுப் பிரிவின் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் மவ்பிம பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (எ-11)

# ஹெல உறு...

பிரசாரத்தில் ஈடுபட போவதாக ஹெல உறுமய எச்சரிக்கை விடுத்திருந்தது.

வரவு செலவுத் திட்டம் குறித்த வாக்கெடுப்பின் போதும் அரசாங்கத்திற்கு எதிராக வாக்களிப்பது என ஜாதிக ஹெல உறுமய தீர்மானித்திருந்தது.

எனினும் இந்த முரண்பாட்டு நிலைமையை தீர்த்து வைக்க பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய மற்றும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஆகியோர் முயற்சித்து வருகின்றனர்.

இரு தரப்பினருக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தி சுமுகமான தீர்வுத் திட்டமொன்றை எட்டும் முயற்சிகளில் இருவரும ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் ஜாதிக ஹெல உறுமய கட்சி நேற்று முன்தினம் அவசர கூட்டமொன்றை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)


## கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கீழ்க்காணும் உணவகங்களை நடத்துவதற்குப் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் பணிமனையில் 2014.11.14 ஆம் திகதி முற்பகல் 10.00 மணி வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

01.பிரதான உணவகம்-திருநெல்வேலி
02.பாலசிங்கம் ஆண்கள் விடுதி உணவகம்-திருநெல்வேலி
03.ஆனந்தக்குமாரசாமி பெண்கள் விடுதி உணவகம்-திருநெல்வேலி
04.சித்தமருத்துவத்துறை உணவகம்-கைதடி
05.மருத்துவபீட மாணவர் விடுதி உணவகம்-யாழ்ப்பாணம்
06.இராமநாதன் நுண்கலைக்கழக உணவகம்-மருதனார்மடம்

மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணமாக ரூபாய் 2000/- மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபாய் 500/- உம் தனித்தனியாக பல்கலைக்கழக நிதிக்கிளையில் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச் சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு உணவகத்திற்கும் தனித் தனி கேள்விப் படிவங்கள் அனுப்பப்படுதல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடது பக்கமேல் **மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.**

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நலச் சேவைகள் கிளையில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (சி-8895)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சந்தை வாய்...

கும் சூழ்ச்சியானதே அன்றி மக்கள் சார்ந்த நடவடிக்கையாக இதனைக் கருத முடியாது.

குளிர்பான நிலையங்கள் முதலில் ஆரம்பிக்கப்படுகின்ற போது பொதுச் சுகாதார பரிசோதகரின் சோதனை மூலம் சுகாதாரம் உறுதிப்படுத்தப்பட்டு பின்னர் மாநகரசபை, பிரதேச சபையினால் அனுமதியளிக்கப்படுகின்றது.

இவ்வாறு சட்டரீதியில் அனுமதியளிக்கப்பட்ட குளிர்பான நிலையங்களினை சுகாதாரப் பணிமனையினர் திடீரென முற்றுகையிட்டு எவ்வாறு தடைசெய்ய முடியும்?.

குளிர்பான நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் ஐஸ்கிறீமில் மலத்தொற்று இருப்பதாகவே சுகாதாரப் பகுதியினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

எமது குளிர்பானங்களில் மலத்தொற்று உள்ளதென்றால் யாழ் மாநகரசபை விநியோகிக்கும் குடிநீரிலும் யாழ் குடாநாட்டு மக்கள் பாவனை செய்யும் ஒட்டுமொத்த குடிநீரிலும் அல்லவா மலத்தொற்று காணப்பட வேண்டும்? நாமும் யாழ் குடாநாட்டில் இருந்து தான் தண்ணீர் பெறுகிறோம்.

அவ்வாறு எமது குளிர்பானங்களில் நோய்க் கிருமிகள் காணப்பட்டால் அதனைச் சுட்டிக் காட்டி அத்தவறை திருத்திக் கொள்வதற்கு கால அவகாசம் வழங்கப்படவேண்டும்.

இதனை விடுத்து எவ்வித முன்னறிவித்தலோ கால அவகாசமோ இன்றி தடை செய்தமையானது ஏதோ உள்நோக்கம் இருப்பதாகவே தென்படுகிறது.

யாழ் மாவட்டத்தில் சுன்னாகத்தில் கழிவு ஓயில் பிரச்சினை, நிலத்தடி நீரில் மலத்தொற்று கலத்தல் என பெரியளவிலான குடிநீர்ப் பிரச்சினைகள் காணப்படுகின்ற போதிலும் அவற்றையெல்லாம் கண்டுகொள்ளாத சுகாதார பணிமனை ஏன் எம்மை மட்டும் இலக்கு வைக்கின்றது.

உலக சுகாதார நிறுவனம், யாழ் மாவட்டத்தில் மலக்கலப்பினால் குடிநீரில் நுண்ணுயிர்த் தொற்று ஏற்படவாய்ப்பு உண்டு என 1985 ஆம் ஆண்டு அபாய அறிவிப்பொன்றினை விடுத்திருந்தது.

எனினும் அதுதொடர்பில் கவனஞ் செலுத்தாதவர்கள் எம்மை வந்து பிடித்து தாம் செயல்படுகின்றோம் என காட்ட முற்படுகின்றனர்.

மலத்தொற்றுள்ள குளிர்பானங்களை உற்பத்தி செய்கிறோம் என்றால் யாழ் மாவட்டத்தில் உள்ள ஆறு இலட்சம் மக்களும் மலத்தொற்றுள்ள நீரினையே பயன்படுத்துகின்றனர்.

ஆகவே ஒரு சிலரின் முடிவினை வைத்து எம்மைப் பழிவாங்காமல் எமக்கான கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-4)

# ஜனாதிபதி...

செயலாளர் நாயகம் கமலேஷ் ஷர்மா, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

நேற்று அலரிமாளிகையில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பில் கமலேஷ் ஷர்மாவுடன் வருகைதந்திருந்த ஐந்து பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

மேலும், இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், வெளிவிவகார அமைச்சு செயலாளர் சேனுகா செனவிரத்தின ஆகியோரும் உடனிருந்தனர்.

இதேவேளை, பொதுநலவாய அமைப்பின் [illegible] மகிந்த தேசப்பிரியவை, ஷர்மா தலைமையிலான குழுவினர் ராஜகிரியவிலுள்ள தேர்தல்கள் செயலகத்தில் நேற்று மாலை 3 மணியளவில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு கடந்த சனிக்கிழமை இலங்கைக்கு வருகை தந்த சர்மா, நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்ததுடன், வடமாகாண ஆளுநர் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளை சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார். (எ-11)

# சீனாவுடனான...

நாம் அணி சேரா கொள்கையைப் பின்பற்றும் நாடாகும், எனவே எந்தவொரு நாட்டினதும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடிய உடனபாடுகள் வேறும் நாடுகளுடன் இலங்கை ஏற்படுத்திக் கொள்ளாது என ஜயந்த பெரேரா இந்திய ஊடகமொன்றுக்கு உறுதியளித்துள்ளார்.

சீன நீர் மூழ்கிக் கப்பல்கள் மற்றும் கடற்படைக் கப்பல்கள் இலங்கையில் தரித்து நின்றமை தொடர்பில் வெளிவிவகார அமைச்சுமட்ட ரீதியில் இந்தியா நேரடியாகவும் மறைமுகமாகவும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே கடற்படைத் தளபதி ஜயந்த பெரேரா மேற்குறிப்பட்ட கருத்துக்களை இந்திய ஊடகத்திற்கு வெளியிட்டுள்ளார். (எ-11)

# வெட்டுப்...

இதேவேளை, சில மாவட்டங்களில வெட்டுப்புள்ளி 152 வரை குறைவடையக் கூடும் என்றும் அமைச்சின் தகவல்கள் தெரிவித்தன எனினும் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை. (எ-11)

# பொது வேட்...

பொது வேட்பாளரை நிறுத்தி தற்போதைய அரசாங்கத்தை வீழ்த்துவதே எதிர்க்கட்சிகளின் முக்கிய யுக்தியாக இருக்க வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார். நாட்டில் எதிர்வரும் ஜனவரியில் ஜனாதிபதி தேர்தல் ஒன்று நடத்தப்படலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், எதிர்க் கட்சிகளும், அந்தத் தேர்தலுக்கான தமது ஏற்பாடுகள் குறித்து ஆராய்ந்து வருகின்றன.

அந்த வகையில் எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், அசாத் சாலி போன்ற பலர் கலந்து கொண்ட சந்திப்பு ஒன்று மாதுளுவாவே சோபித தேரர் அவர்களின் நீதிக்கான தேசிய அமைப்பின் ஏற்பாட்டில் நடந்துள்ளது.

அங்கு எதிர்க்கட்சிகளின் சார்பில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவது குறித்து ஆராயப்பட்டுள்ளது. 'அதில் முதலில் தற்போதைய அரசாங்கத்தை வீழ்த்துவதையும், நிறைவேற்று அதிகார ஆட்சி முறைமையை நீக்குவதையும் மையமான நோக்கமாகக் கொண்டு ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவது பற்றி ஆராயப்பட்டதாக மனோகணே தெரிவித்துள்ளார். (எ-11)

# பிரிட்டோ...

போது காணாமல் போனவர்களுக்காக என்னுடன் இணைந்து மகிந்த ராஜபக்ஷவும் செயலாற்றினார். அதுமட்டுமன்றி அக்கால கட்டத்தில் மகிந்தவின் ஜெனிவா பயணத்தையும் நானே ஏற்பாடு செய்து கொடுத்தேன்.

ஆனால் இப்போது அதே மகிந்தவின் ஆட்சியில் காணாமல் போனவர்கள் தொடர்பில் அச்சுறுத்தல் விடுக்கப்படுவது கவலைக்குரியது என்றும் தெரிவித்துள்ளார். (எ-11)

# மாகாண...

அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் வடமாகாணசபையினால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் தமக்கு கிடைத்துள்ளதாக பதில அனுப்பியிருக்கும் ஜனாதிபதி செயலகம்,

மேற்படி பிரேரணை தொடர்பாக கடிதத்தில குறிப்பிடப்பட்டிருக்கும் விடயத்தினை விரைவில ஜனாதிபதியின் ஆய்விற்காக சமர்ப்பிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இவ்விடயத்தினை வடமாகாணசபை அவைத் தலைவர் சீ.வ்.கே.சிவஞானம் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளதுடன், மேற்படி கடிதம் ஜனாதிபதி செயலகத்திலிருந்து, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவினால் அனுப்பப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (எ-4)


## வேலையாள் தேவை

இணுவில் பகுதியில் உள்ள மோட்டார் உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு பெண் வேலையாள் தேவை. (8160)

தொடர்புகளுக்கு : 0774210006

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

## தேவை (Wanted)

Job! Job! Job!

0774458134

நீங்கள் O/L பயின்றவரா? இவ் இலக்கங்களுக்கு உடனே அழைத்து உங்கள் பதிவுகளை பதிவு செய்க

30 பேருக்கு முன்னுரிமை

- நிர்வாக அதிகாரி
- அலுவலக உதவியாளர்
- செயற்றிட்ட அதிகாரி
- மேற்பார்வையாளர்

அனுபவம் தேவையில்லை தங்குமிட வசதியுடன் பயிற்சி வழங்கப்படும்

பயிற்சிக்காலம் 12000/= - 15000/=. பின் குறைந்தது 45000/=

இல.225, 3ம் குறுக்குத்தெரு, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (8163)

## பதவிக்கான தேடல்

சர்வதேச ரீதியில் 30 வருட காலமாக இயங்கிவரும் **Canadien** நிறுவனத்தின்

புதிய கிளைகள் கிளிநொச்சி,முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் ஆரம்பமாக இருப்பதால் 6 வகையான பதவி வெற்றிடங்கள் உள்ளன.

★அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன

★O/L, A/L படித்தவர்கள் உடனே அழையுங்கள்



0770771377, 0771908997, 0771882507 (8166)

## பதவி வெற்றிடங்கள்

**Optimo Group Sri Lanka**

நிறுவனம் வடக்கில் ஆரம்பிக்கவிருக்கும் 04 புதிய கிளைகளுக்கு O/L, A/L படித்தவர்கள் தேவைப்படுகின்றனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டத்தினர் விரும்பத்தக்கது.

வயதெல்லை 18 - 28 தங்குமிட வசதி உண்டு

25 பேருக்கு முன்னுரிமை

தொடர்புகளுக்கு

0773550933, 0775566224 (C-8900)

## அமெரிக்க லொத்தர் விசா

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற

55000 பேருக்கான வாய்ப்பு , இலவசமாக உங்கள் வெற்றி வாய்ப்பினை உறுதி செய்துகொள்ளுங்கள்

கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம் 2015 இல் A/L எடுப்பவர்கள் கூட விண்ணப்பிக்கலாம்

உடனே விரையுங்கள் - தாமதம் வேண்டாம்

அலட்சியம் வேண்டாம் நம்பிக்கையுடன் பதியுங்கள் வெற்றிபெறுங்கள்

கிளிநொச்சி - A9 வீதி - பழைய ஆஸ்பத்திரி முன்னால் - 0771516537

யாழ்ப்பாணம் - 49A சப்பல் லேன் - பொது நூலகம் முன்னால் - 0773867257

நெல்லியடி - முடக்காட்டுச்சந்தி - 0776699892

வல்வெட்டித்துறை - யாழ்வீதி - வல்வெட்டி - 0776697960

குறைந்த கட்டணத்தில் ● அனைத்து நாடுகளிற்குமான விமானப்பயணச்சீட்டுகள் ● உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாக்கள் சேவை.

V2 Travels and Tours (Pvt) Ltd (C-8899)

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- **கணனி பக்க வடிவமைப்பாளர்கள் மற்றும் விளம்பர வடிவமைப்பாளர்கள். (ஆண்கள் இரவுக்கடமை)**
- **பாதுகாப்பு உத்தியோகத்தர். (இருபாலாரும்)**
- **சிற்றூழியர்கள் ( தூய்மை பேணுதல், தேநீர் தயாரித்தல் உள்ளிட்ட கடமைகள் - இருபாலாரும்)**

மேற்படி பதவிகளுக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதவியின் பெயரைக் குறிப்பிட்டு முழுப்பெயர், தபால் முகவரி, தொலைபேசி இலக்கம் உள்ளடங்கிய விண்ணப்பங்களை

**மனிதவள முகாமையாளர்,**
**வலம்புரி**
**இல.03, 02 ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

எனும் முகவரிக்கு எதிர்வரும் 01 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

*பொது முகாமையாளர் : வலம்புரி*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




**பேரம்பலம் தனுஷன் (HNDA)**

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 17.10.2014 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) பட்டம் பெற்ற எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்க முன்னாள் செயலாளரும் வட்டக்கச்சி உப தபாலதிபருமான பேரம்பலம் தனுஷன் (HNDA) அவர்கள் மேலும் பல பட்டங்களைப் பெற்று சிறப்புடன் வாழவும் எமது சமூகத்துக்கு சிறந்த சேவையாற்றவும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

*வாழ்த்துவோர் :*

**பழைய மாணவர்கள்**
**வட்டக்கச்சி மத்திய கல்லூரி.**


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org